
கல்கி

KALKI 2-9-1973 45





உங்கள்
உலைக்குத் தேவைப்படுவது
பிரத்தியேக ரிஃப்ரேக்டரி சிமெண்டு
அக்கோசெட்-50

ஏசிசி யின் அதிவெப்பம் தாங்கும் ஃபயர்-சிமெண்டு

உறுதியான ஃபயர்பிரிக் வரிசைகள் மற்றும் இணைப்புகளுக்கு ஏசிசி அக்கோசெட்-50 அதிவெப்ப ரிஃப்ரேக்டரி சிமெண்டு தயாரிக்கிறது. அதிக இணைப்புச்சக்தி தர அதிமென்மையாக பொடியாக்கப்பட்ட பிளாஸ்டிக் களிமண், அலுமினா ரிஃப்ரேக்டரி கற்கள், பிரத்தியேக இரசாயனங்கள் கலவையினால் அக்கோசெட்-50 தயாரிக்கப்படுகிறது.

இணைப்புரிபேர், பழுதுபார்த்தல் மற்றும் ஒட்டு வேலைகள், ஃபயர்பிரிக்குகளின் இணைப்பு மற்றும் கிமாண வேலைகளுக்கு உபயோகித்தல், உலைகளின் சுவர்கள் மற்றும் தளங்களுக்கு பாது காப்பு பூச்சு, ஒற்றைநிலை இணைப்பு மற்றும் இறுக்கப்பட்ட வரிசைகள் ஏற்படுத்த அக்கோசெட்-50 உகந்தது.

ஏசிசி அக்கோசெட் சூபர் அதிவெப்ப இறுகும் பொருள்களுக்கு தயாரிக்கிறது.

தேவைப்பட்டால் தொழில் நுணுக்க விவரங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

தயாராக கிடைக்கும் இடம்: தி சிமெண்ட் மார்க்கெட்டிங் டிவிஷன் ஆஃப் தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட். அல்லது அவர்களுடைய விநியோகஸ்தர்கள்.

தி அசோசியேடெட் சிமெண்ட் கம்பெனீஸ் லிட்.

பழனி
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

2-9-1973 ஞாயிறன்று காலை 6-00க்கு மேல் 6-45க்குள்
சிறப்புற நடைபெறும்

குன்றுதோறாடும் குமரன், ஞானத் திருமேனி கொண்டு வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தருள்வது கண்கூடு. நெஞ்சில் ஒருகால் நினைக்கின் முன்னின்று தோன்றும் தமிழ்க் கடவுள் முருகவேளின் வீடாகிய பழனிப்பதியில் கோயில் கொண்டுள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், மலைக்கோயிலின்கண் மூலவருக்குத் தங்க விமானம் அமைத்து திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாச் சிறப்பாக நடைபெறுவதில் கலந்து கொண்டு பேரருள் பெறவும், அன்பர்கள் யாவரும் திரள் திரளாக வருகை புரியுமாறு அன்புடனும், ஆர்வத்துடனும் அழைக்கின்றோம்.

30-8-73 வியாழன் யாகசாலை பூசை ஆரம்பம்

முப்பத்து மூன்று குண்டங்கள்

நிகழ்ச்சிகள்: இடம் — வடக்குக் கிரி வீதி, திருக்குட நீராட்டு விழா அரங்கு

சொற்பொழிவு :	இன்னிசை :
ஆகஸ்டு 29 மாலை திரு கே. வி. தியாகராஜன்	**மாயவரம் கணநாதர் பொம்மை நாடக சபா குழுவினர்.**
ஆகஸ்டு 30 மாலை திரு கி. ஆ. பெ. விஸ்வநாதம்	**குமாரி எம். ஆர். விஜயா & குன்னக்குடி திரு வைத்தியநாதன்**
ஆகஸ்டு 31 மாலை திரு என். கிரிதாரி பிரசாத்	**திருமதி கே. பி. சுந்தராம்பாள்**
செப். 1 மாலை திருமுருக கிருபானந்தவாரியார்	**திருவெண்காடு திரு சுப்பிரமணிய பிள்ளை நாதசுரம்.** **சீர்காழி திரு எஸ். கோவிந்தராசன்**
செப். 2 காலை ...	**மலைக்கோயிலில் — செம்மனர்கோயில் திரு இராசரத்தினம் நாதசுரம்**
செப். மாலை ...	**நாமகிரிப்பேட்டை திரு கிருஷ்ணன் நாதசுரம்**
செப். 2 மாலை திரு ந. ரா. முருகவேள் திரு பவானி கண்ணப்பர்	**மதுரை திரு எஸ். சோமசுந்தரம்**

மாலை — மலையில் தங்க ரதம் - இரவு கிரி வீதியில் வெள்ளி ரதம்

திருக்குட நன்னீராட்டு விழாவினை அருகிலிருந்து காண நுழைவுக் கட்டணம்:

ரூ. 500/- ரூ. 250/- இருவர் அனுமதி; **ரூ. 100/- ரூ. 25/- ரூ. 10/- ரூ. 5/-** ஒருவர் அனுமதி

ஒரு பக்கம் தண்டாயுதபாணி சுவாமி திருவுருவமும் மற்றொரு பக்கம் ஓம் சரவணபவ என்ற வாசகமும் பொறிக்கப்பட்ட கனகாபிஷேகம் செய்த தங்கக் காசுகள் ரூ. 150/- ரூ. 75/- என்ற விலையில் திருக்கோயில் அலுவலகத்தில் கிடைக்குமென அறிவிக்கப் படுகிறது. முன்கூட்டியே பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளலாம்.

திருக்குட நன்னீராட்டு விழா முடிந்ததும் தரும தரிசனம் அனுமதிக்கப்படும்

திரு பு. மனோகரன், அறங்காவலர், குழுத்தலைவர்
திரு வி.வி.சி.ஆர் எம். கந்தசாமி, பி.எஸ்சி.
திரு என். நாச்சிமுத்து, எம்.எல்.ஏ,
திரு புலவர் சி. பழனிச்சாமி, எம்.எல்.ஏ.
திரு ஏ.பச்சையப்பக் கவுண்டர், அறங்காவலர்கள்

திரு வி.செள. கோதண்டபாணி
பி.எஸ்சி.,பி.எல்.
துணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி



உங்கள் குடும்பத்தினருக்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் வேண்டிய அளவு கிடைப்பதில்லையா?

நாளொன்றுக்கு ஒரே ஒரு 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே அவர்களுடைய அன்றாட முக்கியத் தேவையைப் பூர்த்தி செய்கிறது.

நீங்கள் உட்கொள்ளும் மிக ருசியான உணவில் கூட வைட்டமின் மற்றும் தாதுப்பொருள் பற்றுக்குறை இருக்கலாம். நீங்கள் அறியாமலேயே உங்கள் குடும்பத்தினர் வைட்டமின் பற்றுக் குறையினால் பாதிக்கப்படலாம். நெடுநாட்களுக்குப் பின்னரே அது தெரிய வரும். கடமையே கருத்தாக இருக்கும் இல்லாளாக மட்டும் இருந்தால் மட்டுமே குடும்பத்திற்குப் போதாது. முழுமையான ஆரோக்கியத்திற்கும் சக்திக்கும் சமசத்துள்ள உணவு தேவை. நாளொன்றுக்கு ஒரே ஒரு 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே அனைவருக்கும் வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின்



மூலம் முக்கியமான போஷாக்கு அளிக்கிறது. உங்கள் அன்றாட முக்கியமான தேவைகள் நாளொன்றுக்கு 15 பைசாவுக்கு மட்டுமே கிடைக்கிறது. இவை உங்கள் குடும்பத்தினருக்கு ஆரோக்யமும், சக்தியும் அளிக்கின்றன. இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கெமிஸ்ட்டிடம் சென்று 'விடாமினெட்ஸ்' ஃபோர்டே வாங்குங்கள்.

'விடாமினெட்ஸ்'
டிரேட் மார்க்
ஃபோர்டே
'ரோஷ்'

ஊட்டச்சத்து நிறைந்த பளபளக்கும் சிவந்த டாப்லெட்

RP.3045A

ஒரு 'ரோஷ்' தயாரிப்பு

கல்கி பொருளடக்கம்

பிரமாதீச, ஆவணி 17 - செப். 2, 1973



"கல்கி"யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

அட்டையில் :
வரம் தரும் விநாயகர்
வண்ண ஓவியம் :
கணேசன்



அற்புதமான,
சிந்தனை மணம்
கமழ ஏற்றுவீர்!

கோகுல்

சந்தன வத்திகள்

டி. எஸ். ஆர். & கோ.,
'கோகுல் கார்டன்ஸ்,' கும்பகோணம்.

விநிபா

சந்தன முகப்பவுடர்கள்





சந்தனத்தின் நல்ல வாசமெடுத்து...

அத்துடன் சருமத்திற்கு மென்மையும், பொலிவும் அளிக்கவல்ல மைசூர் சந்தனம், இந்திய அபூர்வ மூலிகைகள், மேனாட்டு வாசனைத் திரவியங்கள், உயர்ந்த அத்தர் வகைகள், தூய புனுகு, ஜவ்வாது, T.S.R. அரகஜா இவற்றை ஒருங்கே கலந்து நவீன விஞ்ஞான ரீதியில் 'மைக்ரோ ஃபைன்' முறையில் தயாரிக்கப் – படுகின்றன.

விநிபா ப்ராடக்ட்ஸ்,
'கோகுல் கார்டன்ஸ்'
கும்பகோணம்.



Criterion TSR 2954 TM C

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 — இதழ் 5

மன்னிக்க முடியாத அட்டூழியம்

ஒவ்வொரு சுதந்திர தின விழாவிலும், தேசத்தின் தந்தை காந்திஜியின் சிலைக்கு அஞ்சலி செய்வது வழக்கமாக நடைபெற்று வருகிறது. சென்ற இருபத்தாறு சுதந்திர தின விழாக்களில் காணாத பரம அநாகரிகமான புதுமையை இந்தச் சுதந்திர தின விழாவில் காண நேர்ந்தது. காந்திஜியின் சிலையைச் சின்னாபின்னமாக்கி அவமரியாதை செய்த அலங்கோலத்தை முதன் முதலாக இந்த ஆண்டில் கண்டோம்.

சேலம் நகரத்தில் இரண்டு காந்தி சிலைகள் பின்னமாக்கப்பட்டன. சுதந்திர தினத்தன்று காலை, சிலைக்கு அஞ்சலி செலுத்தச் சென்றவர்கள் இதைக் கண்டு துடிதுடித்தனர்.

கேரளத்தில் திருச்சூர் அருகிலுள்ள அஷ்டமிச்சிராவில் ஒரு காந்தி ஞாபகார்த்த உயர்நிலைப் பள்ளியில் உள்ள சிலை, பீடத்திலிருந்து பெயர்த்துக் கீழே தள்ளப்பட்டுப் பல சுக்கல்களாக உடைக்கப்பட்டிருந்தது.

இதே போல் ஆந்திரப் பிரதேசத்தில் குண்டூர் பள்ளியில் உள்ள காந்தி சிலையையும் யாரோ பாழ்படுத்தியுள்ளனர். சிலையின் கண்களைப் பெயர்த்து, கறுப்புத் துணியால் அதை மூடி அலங்கோலப் படுத்தியுள்ளனர்.

இன்னும் இம்மாதிரி எங்கெங்கு நடந்தனவோ ?

இந்த அட்டூழியச் செயலை நாட்டு மக்கள் அனைவரும் கொதித்தெழுந்து கண்டித்திருக்கின்றனர்.

இந்தக் காட்டுமிராண்டித்தனம் நக்ஸலைட்டுகளின் கைவேலையாக இருக்குமோ என்று பலர் எண்ணுகின்றனர். அவர்களுடைய செல்வாக்கு' சமீப காலத்தில் மங்கி மறைந்து போகும் அளவுக்கு வந்துவிட்டபடியால் ஆத்திரமடைந்து இப்படிச் செய்திருக்கலாம். இவர்கள் திடீர் திடீரென்று புதுப் புதுவிதமான கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அக்கிரமங்கள் புரியும் போக்கு உள்ளவர்கள் என்பதாலும், பரவலாக மூன்று மாநிலங்களில் இம்மாதிரி விஷமம் நடந்திருப்பதாலும் இதெல்லாம் நக்ஸலைட்டுகளின் வேலை என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. நக்ஸலைட்டுகள் தாங்கள் இன்னமும் சக்தியுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதைக் காட்ட இப்படிச் செய்திருக்கலாம்.

சேலம் சம்பவம் தமிழ்நாடு அரசியல் கட்சிப் பூசல்களுடன் இணைக்கப்பட்டுக் காங்கிரசுக்கு எதிராக இயங்கும் கட்சிகளின் வேலையாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த அக்கிரமம் புரிந்தவர்கள் உடனடியாகக் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டனை பெற வேண்டும். போலீஸார் துப்பு துலக்கும் வேலையைத் தீவிரமாக்க வேண்டும்.

*   *   *

காந்தி சிலைகளுக்கு நடந்த சேதத்தையும் அவமதிப்பையும் கண்டித்துத் தி.மு.க. நீங்கலான அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து சேலம் நகரில் அர்த்தாலும் கண்டன ஊர்வலமும் நடத்தினார்கள். ஊர்வலத்தின் முடிவில் ஐம்பதினாயிரம் மக்களுக்கு மேல் கலந்து கொண்ட பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தைத் தடியடிப் பிரயோகம் செய்தும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தும் கலைத்திருக்கிறார்கள் போலீஸார். காந்தி சிலைகள் உடைக்கப்பட்டதால் கொதிப்படைந்த உள்ளங்கள் இந்தத் தடியடிப் பிரயோகத்தால் மேலும் கொதிப்படைந்துள்ளன. இந்த அக்கிரமத்தைக் கண்டித்துத் திரு காமராஜ் உள்ளிட்ட பெருந் தலைவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். சேலம் நகர மக்கள் பூரணமாகவும், அமைதியாகவும் அர்த்தாலும் பொதுக் கூட்டமும் நடத்தியிருக்கையில் அவர்கள் மீது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தது மிகவும் வருந்தத்தக்கது. கூட்டத்தினர் மீது போலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தவோ, கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசவோ எந்தக் காரணமும் கிடையாது. காந்தி சிலைக்கு அவமானம் இழைத்த விஷமிகளை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. அதைக் கண்டித்துச் சாத்துவிக அர்த்தால் நடத்தியவர்களை ஓட ஓட விரட்டு

வதில் என்ன மகிழ்ச்சியோ? தடியடியில் காயமுற்றவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்கிற அளவு கொடுமை நடைபெற்றிருக்கிறது. ஆயினும் தடியடிப் பிரயோகம் பற்றிய நீதி விசாரணைக்கே இடமில்லை என்று முதல்வர் அடித்துச் சொல்லிவிட்டார். தேசத் தந்தையின் சிலையை அவமதித்த கொடுமையை எதிர்த்து அர்த்தால் நடத்துவதுகூட இந்த ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஆகாத காரியமோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

* * *

அலங்கோலமாக்கப்பட்ட காந்திஜி சிலைகள் அவை எந்தெந்த மாநிலங்களில் இருப்பினும் சரி, அவற்றை எல்லாம் அந்தந்த அரசாங்கம் பழுது பார்க்க வேண்டும். அல்லது புதிய சிலை வடித்து, பழைய சிலைக்கு மாற்றாக அமைத்தல் அவசியம்.

இவ்விஷயத்தில் கட்சி வித்தியாசங்களுக்கு இடமில்லை. காந்திஜி கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர். எல்லா மக்களுக்கும் எல்லாக் காலத்துக்கும் பொதுவான சிலங்களையே உருவாக்கித் தந்த உத்தமர். காந்தி சிலைக்கு ஏற்பட்ட அவமானம் பாரத நாட்டுக்கே ஏற்படக் கூடிய அவமானத்தைவிடக் கொடிது.

காந்திஜியின் சித்தாந்தங்களைச் சிதைக்க அநுமதித்தது போதாது என்று சிலைகளையும் சிதைக்க மக்கள் இடம் கொடுப்பரா?

காந்தீயம் பரப்பிய தேசீயச் செம்மல்

இந்தியாவின் சுதந்திரத்துக்குப் புகழ்சேர் பணியாற்றிய பல பெரியோர்கள் உண்டு. அவர்களில் கணபதி அக்ரஹாரத்தைச் சேர்ந்த அண்ணாதுரை நடேசன் அவர்களது பணி பல்வகையிலும் சிறந்து விளங்குவது. அவரது நினைவுக்கு நூறாண்டு இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 14ந் தேதி. அவரது நினைவு விழா அவரது பணியைப் போலவே அடக்கமாகவும், ஆனால் அதே நேரத்தில் பல நூறாண்டுகள் நினைவில் இருத்திக் கொள்ளக் கூடிய வகையிலும் கொண்டாடப்பட்டது.

கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளிவந்த நடேசன் அவர்கள் உள்ளத்தில், பத்திரிகைப் பணி மூலமே நாட்டுப் பணியை




நல்ல முறையில் நடத்த முடியும் என்ற நம்பிக்கை வேர்விட்டது. 'மதராஸ் டைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் க்ளின் பார்லோவை அணுகி ஊதியமில்லாப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தார். இந்திய மனத்தையும் பண்பையும் பிழையற ஆங்கிலேயர்களுக்கு அவர் மூலம் எடுத்துச் சொல்லும் பெருமையும் பெற்றார்.


பின்னர், பதிப்பகம் ஒன்று தொடங்கி, இந்தியக் கலாசாரத்தையும் இலக்கியவளத்தையும் மட்டுமின்றி, நாட்டுப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் வழங்கினார். 'மாடர்ன் ரிவ்யூ'வுக்கு ஈடாக 'இந்தியன் ரிவ்யூ' நடத்திச் சுதந்திரப் பாதையில் வெற்றிநடை போட வைத்தார்.

காந்தியடிகளையும் காந்திய இயக்கத்தையும் தென்னகத்துக்கு அறிமுகம் செய்து வைத்தவர் ஸ்ரீ ஜி. ஏ. நடேசன். காந்திஜியின் 'ஹிந்த் ஸ்வராஜ்' என்னும் நூலை வெளியிட்டுப் பாரதமெங்கும் அவர் கருத்துக்கு ஆதரவு தேடியவர் ஜி. ஏ. நடேசன். பாரதத்தின் பண்டைய இதிகாச புராணங்களையும் உபநிஷத்துக் கருத்துக்களையும் பிரகரித்துப் பாரம்பரியம் கண்டவர் ஜி. ஏ. நடேசன்.

இப்படியெல்லாம் பாரதத்தின் பெருமையை நிலைநாட்டிப் பாரதத்தைச் சுதந்திரத்தின் நுழை வாயிலுக்கு இட்டுச் சென்ற பெருமையைப் பெற்ற நடேசன், 'இறந்தாலும் ஆயிரம் பொன், இருந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழிக்கு இலக்கியமாக விளங்குகிறார்.

'நமது நாட்டுப் பொதுவாழ்வைச் சமைத்த சிற்பிகளில் நடேசன் ஒருவர். அவர் வெளியிட்ட நூல்களின்றி எந்தத் தேசியப் புத்தகாலயமும் நிறைவுபெற்றதாகக் கொள்ள முடியாது!' — பாரதப் பிரதமரின் இந்தக் கூற்று மெய்யாக வேண்டுமானால், அவர் பிரகரித்த நூல்கள் மறு பிரகரம் பெற வேண்டும். அதுவே, அவர் நினைவுக்கு நமது அஞ்சலியாகவும் திகழும்.


உடைந்த சிலைகள்; உடையும் தலைகள்!
அண்ணலே ரொம்ப வலிக்குதா?
உன் மனசில் ஏற்பட்டுள்ள வலியை விட அதிகமில்லே, அப்பா!
வன்முறை
தேசபிதா காந்தியடிகள்
கண்ணியம், கடமை கட்டுப்பாடு


இப்படியே சுத்திச் சுத்தி வந்தா எப்படி? ஒரு திருப்பம் வேணும்?
ரொம்ப சரி
ரொம்ப சரி!
இந்தியா–பாக் பேச்சு வார்த்தை

தமிழ் நாட்டிலே...

தீரன்

ஆட்சி பெரிதல்லவாம்!

சென்னையில் 'மாநில சுயாட்சி விளக்கப் பொதுக் கூட்டம்' என்ற பெயரில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போது அமைச்சர் திரு மாதவன், "நமக்கு ஆட்சி பெரிதல்ல. கொள்கைதான் பெரிது. கொள்கைக்காகப் போராடுவதற்குத் தி.மு.க. என்றென்றும் தயாராக இருக்க வேண்டும். நாம் தில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறோம்" என்று பேசியிருக்கிறார். இதைப் படிக்கும்போது சிரிக்காமல் இருக்க முடியாது. 'நமக்கு ஆட்சி பெரிதல்ல. கொள்கைதான் பெரிது' என்கிறார் அமைச்சர். ஆட்சியைப் பெரிதாக மதித்து அதைக் காக்கவே அதிகார பலம், பண பலம், மிரட்டல் பலம் எல்லாவற்றையும் பயன்படுத்தி வருகிற ஒரு கட்சி தி.மு.க. அப்படியிருக்கும்போது, "கொள்கையைக் காக்க ஆட்சியையும் விட்டுவிடுவோம்" என்பதுபோல் தொனிக்கும்படி அமைச்சர் பேசியிருக்கிறார். அந்தக் கொள்கைதான் என்ன? அதையாவது அமைச்சர் விளக்கமாகச் சொல்லியிருக்க வேண்டாமா? 'நாம் தில்லி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறோம்' என்று அமைச்சர் சொல்லுகிறார். தி.மு.க. ஏகாதிபத்தியத்தை இன்று தமிழகம் முழுவதுமே எதிர்க்கிறதே, அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார். 'ஆட்சி பெரிதில்லை' என்பதைச் சொல்லிக் காட்ட முடியாது. செய்துதான் நிரூபிக்க முடியும்.

திரிலோக சீதாராம்

பண்பட்ட தேசபக்தரும், நல்ல தமிழ்க் கவிஞரும், சிறந்த தமிழ் எழுத்தாளருமான திரிலோக சீதாராம் அவர்கள் காலமாகிவிட்டார். அவர் தமிழில் நிறையக் கதைகளும், கவிதைகளும், உணர்ச்சியைத் தட்டி எழுப்பும் அரசியல் கட்டுரைகளும், சிந்திக்க வைக்கும் இலக்கியக் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார்.

வீறுகொண்ட தம் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்காகவே "சிவாஜி" என்ற வாரப் பத்திரிகையைத் திருச்சியிலிருந்து நடத்தி வந்தார்.



திரிலோக சீதாராம்

திரிலோக சீதாராம் தீவிர காந்தி பக்தர்; மகாகவி பாரதியாரிடம் மட்டற்ற அன்பு கொண்டவர்; அவர் பாடல்களைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்புவதையே ஒரு தொண்டாகக் கொண்டு அயராது தமது இறுதி மூச்சு வரையில் பணியாற்றி வந்தவர். பாரதியார் பாடல்களை அவர் உணர்ச்சி பொங்கப் பாடிக் காட்டும் விதமே கோழையையும் வீறுகொண்டு எழச் செய்யும்.

திருச்சியில் தமிழ் எழுத்தாளர் சங்கம் தோன்றுவதற்கு அரும் பாடுபட்டு வெற்றி கண்டவர் திரிலோக சீதாராம். சோம்பல் என்பதையே அறியாதவர் அவர்.

சுதந்திரச் சிந்தனையும், தேசபக்தியும், இலக்கிய ஆர்வமும் மிகுந்து உழைப்பின் பெருமையை நன்குணர்ந்த அவரை இன்றைய இளைஞர் உவந்து எடுத்துக்காட்டாகக் கொண்டால் நாடு வளம் பெறும்.


தனித் தமிழும் சி. சுப்பிரமணியமும்


குழந்தைகள் கலைக்களஞ்சியத்தின் ஆறாவது தொகுதியை வெளியிட்டுச் சொற்பொழிவு ஆற்றுகையில் மத்திய தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் தனித் தமிழ் வாதம் மொழி வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் தடையாயிருக்கும் என்பது பற்றிக் கூறியிருக்கிறார்:

"ஆங்கிலம் போன்ற மொழிகள் எப்படி வளர்ந்தன? அவசியமானபோது வேறு மொழிகளைச் சேர்ந்த வார்த்தைகளையும் தழுவிக் கொண்டதன் மூலமாகத்தான். தூய்மை கெட்டுவிடும் என்று கூறி அவசியமான பிறமொழிப் பதங்களை ஒதுக்கி வைத்தால் தமிழ் எப்படி வளரும்? ஒரு மனிதனுடைய உடம்பு எப்படி வளர்கிறது? வெளியிலிருந்து எவ்வளவோ வகையான உணவுகளைச் சாப்பிடுகிறோம். ஆரோக்கியமான மனிதன் எல்லாவற்றையும் ஜீரணிக்க முடிகிறது. ஜீரணிக்க முடியாதவன் நோயாளி. அவன் பத்தியம் இருக்க வேண்டியதுதான். தமிழ் மொழி நோயாளியா? இல்லையே? தூய்மை கெட்டுவிடும் என்பதற்காக ஆஸ்பத்திரியிலிருக்கும் நோயாளியைப் போல் தமிழை வைத்துக் கொள்ளுவதா? விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கேற்ப மொழியையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். சர்வ தேசங்களுக்கு ஏற்ற கலைச் சொற்கள் இல்லாவிட்டால் விஞ்ஞான உலகில் எப்படி நாம் புதிய புதிய கருத்துக்களைப் புரிந்து கொள்ள முடியும்?"

நியாயமான கோபமே

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 18-8-73 சனிக்கிழமை நடந்த ஒரு சம்பவம் பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறது. இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்து இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களின் தாமதமான புறப்பாடுகளால் அவதியுற்றுச் சலிப்படைந்த அமெரிக்கர் ஒருவர், "அமெரிக்கா திரும்பியதும் இனி நான் சந்திக்கும் ஒவ்வோர் அமெரிக்கனிடமும், 'இந்தியாவுக்குப் போகாதே!'


வாட்டர்கேட் விசாரணை
வெள்ளை மாளிகை உரையாடல் டேப்
டேப்பைக் கேட்காதீங்க! இன்னும் மூணரை ஆண்டுதான்... ஆளெ விடுங்க!
டாலர் மதிப்புக் குறைவு
அயல் நாட்டுக் நம்பிக்கை வீழ்ச்சி
பாக்கி 3½ ஆண்டு பதவிக் காலம்
அமெரிக்க சர்க்கஸ்!


"பத்து ரூபாய் நோட்டைக் கூடச் செல்லாக் காசாக்கலாம்,... மாநில அரசு ஒத்துழைக்கும்!"
— மாதவன்
தி.மு.க. அரசு
செல்லாது போலிருக்கே!
பொது மக்கள்

என்று பிரசாரமே செய்வேன்'' என்று மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கூப்பாடு போட்டிருக்கிறார். அதற்குக் காரணம் பின்வருமாறு :

சனிக்கிழமை காலை 8—15க்குப் பெங்களூர் புறப்படும் ஆவ்ரோ விமானத்தில் பறப்பதற்காக ஏழு மணிக்கே விமான நிலையத்துக்கு வந்த அவரிடம், ''சில கோளாறுகள் காரணமாக விமானம் பதினொரு மணிக்குத்தான் புறப்படும்'' என்று அறிவித்திருக்கிறார்கள். உடனே அந்த வெளிநாட்டுப் பிரயாணி மறுபடியும் மீனம்பாக்கத்திலிருந்து நகருக்குள் சென்று சுற்றிவிட்டுச் சரியாக 10—30 மணிக்கு விமான நிலையத்துக்குத் திரும்பியிருக்கிறார். 'முதலில் அறிவித்தபடி விமானம் பதினொரு மணிக்குப் புறப்படாது. மேலும் தாமதமாகும்' என்று அங்கே தெரிவித்திருக்கிறார்கள். சிறிது நேரத்தில் 'பகல் ஒரு மணி வரை தாமதமாகும்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பகல் ஒரு மணிக்கு ஒன்றரை மணி வரை ஆகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றரை மணிக்கும் விமான நிலைய அறிவிப்புப் பலகையில் 'பெங்களூர் விமானம் தாமதமாகும்' என்று எழுதப்பட்டிருந்தது. இந்த நிலையில் பொறுமை இழந்த அந்தப் பிரயாணி மேற்சொன்னவாறு கூப்பாடு போட்டதில் வியப்பென்ன? என்ன கூப்பாடு போட்டும் விமானம் புறப்படவில்லை. கூப்பாடு போட்டுவிட்டு மறுபடியும் நகருக்குள் சென்றுவிட்டுத் திரும்பியிருக்கிறார். பிற்பகல் மூன்றரை மணிக்கு 'ஆவ்ரோ விமானத்துக்குப் பதில் மாலை ஆறு மணிக்குக் கல்கத்தாவிலிருந்து வரும் 'காரவெல்' விமானம் மூலம் பெங்களூருக்குப் பறக்கலாம்' என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் உனக்கு நான் சளைத்தவனில்லை என்று கல்கத்தாவிலிருந்து வரவேண்டிய 'காரவெல்' விமானமும் இரண்டு மணி நேரம் தாமதமாக மீனம்பாக்கத்தில் தரை இறங்கியது.

காலை ஏழு மணிக்கு விமான நிலையம் வந்து பெங்களூர் பறக்க இருந்த அந்த வெளிநாட்டுப் 'பயணி எட்டரை மணிக்கு சென்டிரல் ஸ்டேஷனுக்குப் போய்ப் பிருந்தாவன் எக்ஸ்பிரஸில் பெங்களூருக்குப் புறப்பட்டிருந்தாரானால் பகல் ஒரு மணி அளவில் போய்ச் சேர்ந்து மறுபடியும் இரண்டு மணிக்கு அதே பிருந்தாவனில் புறப்பட்டு ஏழு மணிக்குச் சென்னை திரும்பி வந்திருக்கலாம். விமானப் பயணம் என்பது அரை மணி, கால் மணி தாமதமாவதுகூடக் கேவலம். அப்படி ஆனாலாவது சகித்துக் கொண்டு விட முடியும். பன்னிரண்டு மணி நேரத் தாமதமென்பது எவ்வளவு பெரிய கொடுமை? அரசு நிறுவனங்கள் இந்த லட்சணத்தில் நடக்கும்போது அயல்நாட்டுப் பயணிகளைத் தருவிப்பதும் அந்நியச் செலாவணி சம்பாதிப்பதும் எப்படிச் சாத்தியமாகும்?

ரத்த தானமும் குடியும்

ஆஸ்பத்திரியில் ரத்த தானம் செய்து அதில் கிடைக்கும் பணத்தை வைத்துக் குடிக்கச் செல்லும் அளவு குடிவெறி வளர்ந்திருக்கும் நிலைமையைப் பத்திரிகைச் செய்திகள் அறிவிக்கின்றன. தான் மட்டும் ரத்த தானம் செய்து சம்பாதித்த பணம் போதாமல் குடிப்பதற்கு இன்னும் அதிகப் பணம் வேண்டும் என்ற வெறியில், ''நீயும் ரத்தம் கொடுடி. குடிக்கக் காசு வேணும். பீடி வாங்கக் காசு வேணும்'' என்று மனைவியை நடுத்தெருவில் இழுத்து வந்து அடித்த கணவனைக் கண்டு தெருவில் பலர் அருவருப்பு அடைந்திருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைச் சென்னையில் ஒரு தெருவில் நேரில் கண்ட மக்கள் குடியின் கொடுமையைப் பற்றி மிக மிக வருந்த நேர்ந்தது. இன்னொரு தெருவில் கணவன் அடித்துத் துன்புறுத்திய கொடுமை பொறுக்க முடியாமல் கணவனுக்குக் குடிப்பதற்கும் பீடிக்கும் காசு சேர்ப்பதற்காகத் தெருவில் வருவோர் போவோரிடம் பிச்சை எடுத்த ஒரு பெண்ணைப்பற்றிய செய்தியும் வந்திருக்கிறது.

ராஜாஜி சிந்தனை

நன்னடத்தை இருந்தால்தான் நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்கு மன மகிழ்ச்சியை அளிக்க முடியும். நன்னடத்தை என்பது வெறும் லட்சியம் அல்ல. எந்த ராஜதந்திரியும் அறிந்த, அறிவுக்குப் பொருத்தமான தேசியக் கொள்கைதான் அது. நம்மிடம் நன்னடத்தை இருந்தால்தான் எல்லாம் சரிவர நடக்கும். இல்லாவிட்டால் சுதந்திரம், கல்வி, சர்வகலாசாலைகள் மட்டுமல்ல, நமது அரசியல் அமைப்பே ஒன்றுக்கும் உதவாத ஏடாகிவிடும். அதனால்தான் நன்னடத்தையை இவ்வளவு தூரம் வற்புறுத்த வேண்டியிருக்கிறது. நாம் ஒருவரையொருவர் ஏமாற்றலாம். ஆனால் இயற்கையின் நியதியை ஏமாற்ற முடியுமா? செங்கற்கள் நல்லதாக இராமல் இருந்தால், அவை முறையாக அடுக்கப்பட்டிராவிட்டால் கட்டடம் விழுந்துவிடும். கட்டடம் கட்டிய என்ஜினீயர் என்ன வாக்குறுதி அளித்திருந்தாலும் பயன் இல்லை. நம்முடைய தேசிய அமைப்பில் ஏமாற்றுவதற்கு இடமே கிடையாது.

பகவத்பாதர் தரும் பக்தி லட்சணம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

பக்தனுகி இருப்பவனும் பகவான்தான் என்ற உணர்வோடு, சாராம்சத்தில் அவன் வேறு நான் வேறு அல்ல என்ற அநுபவ ஞானத்தோடு ஈசுவர சக்தியை ரசிக்கிற அத்வைத ஞானிகள் பலர் இருந்திருக்கிறார்கள். மதுசூதன சரஸ்வதி, அப்பைய தீக்ஷிதர், சதாசிவப் பிரம்மேந்திராள், பகவந்நாம போதேந்திராள் ஆகிய பரம ஞானிகள் இவ் விதத்திலேயே பக்தி செய்திருக்கிறார்கள். நிர்குணமாக இருக்கிற பிரம்மத்துக்கும் அனந்த கல்யாண குணம் கொண்ட ஈசுவரனுக்கும் இடையே இவர்கள் எந்த பேதமும் காணவில்லை. நிர்குணமாக, நிஷ்களமாக எந்த வஸ்துவை யோகிகள் தியானத்தில் அநுபவிக்கிறார்களோ, அதையே யமுனா தீரத்தின் மணல்வெளியில் ஓடி விளையாடும் நீல ஒளிக் கண்ணனாக நான் கண்டு மகிழ்கிறேன் என்கிறார் மதுசூதன சரஸ்வதி. எல்லாத் தெய்வ வடிவங்களும் ஒன்றேயான பிரம்மம் தான் என்று கண்டு கொண்டார்கள். என்றாலும் அவற்றில் தங்கள் மனம் கவர்ந்த ஒரு ரூபத்தில் விசேஷ பக்தி செலுத்தினார்கள். அப்பைய தீக்ஷிதர் வரதராஜப் பெருமான், துர்கா தேவி இவர்களை எல்லாம் பிரம்ம ரூபமாகவே ஸ்தோத்திரம் செய்தவர் என்றாலும் கூட, 'முற்றா வெண்திங்களை' அணிந்த 'தருணேந்து மௌளி'யான பரமேசுவரனே தம்மை விசேஷமாக ஆகர்ஷிப்பதாகப் பாடுகிறார். அத்வைத ஞான சமுத்திரமான சங்கர பகவத்பாதர்கள் அத்தனை தெய்வங்களையும் பிரம்ம ஸ்வரூபமாகவே ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்.

பக்தியின் லட்சணத்தையும் பகவத் பாதர்கள் 'சிவானந்த லஹரி'யில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார். 'அழிஞ்சில் விதை எப்படித் தாய் மரத்துடனேயே ஒட்டிக்கொள்கிறதோ, ஊசி எப்படிக் காந்தத்தினால் கவரப்படுகிறதோ, பதிவிரதை எப்படித் தன் பதியின் நினைவிலேயே ஆழ்ந்திருக்கிறாளோ, கொடி எப்படி மரத்தைத் தழுவி வளருகிறதோ, நதி எப்படிச் சமுத்திரத்தில் கலக்கிறதோ, அப்படியே பசுபதியின் பாதாரவிந்தங்களில் சதா சர்வகாலமும் மனத்தை அமிழ்த்தியிருப்பதுதான் பக்தி என்பது' என்கிறார் ஸ்ரீ ஆசார்யாள்.

ஏறு அழிஞ்சில் என்று ஒரு மரம் உண்டாம். அதன் காய் முற்றியவுடன் பூமியில் விழுந்து உடையும். உடனே உள்ளே இருக்கிற விதைகள் ஏதோ ஓர் ஆகர்ஷண சக்தியால் நகர்ந்து வந்து மறுபடியும் தாய்மரத்தோடேயே ஒட்டிக் கொள்ளும் என்கிறார்கள். பகவானிடமிருந்து பிரிந்து வந்திருக்கிற நாம் இப்படியே அவன் பக்கமாக நகர்ந்து நகர்ந்து அவனிடம் ஒட்டிக் கொள்ள வேண்டும். ஊசி காந்தத்தை நோக்கிப் பாய்ந்து ஒட்டிக் கொள்வது அடுத்த உதாரணம். காந்தத்தில் சேர்ந்த ஊசிக்கும் காந்த சக்தி உண்டாகி அது மற்ற இரும்புப் பொருள்களை இழுப்பது போல், பக்தனுக்கும் பகவானின் குணங்கள் உண்டாகும் என்று இந்த உதாரணத்தால் காட்டுகிறார். பதிவிரதையின் நினைவு, பேச்சு, காரியம் அனைத்தும் பதியைச் சுற்றியே இருப்பது போல் நம் மனோ வாக்குக் காரியங்கள் பகவானையே பற்றி இருக்க வேண்டும் என்பது அடுத்த உதாரணம். பதியை மூல சுலோகத்தில் 'விபு' என்கிறார். சர்வ வியாபகன் என்பது இதன் பொருள். இதனால் பகவானை ஏதோ ஓர் இடத்தில் மட்டும் இல்லாமல் எங்குமாக, எல்லாமாக, எல்லோருமாக இருப்பதைப் பாவிக்க வேண்டும் என்று உணர்த்துகிறார். கொழுகொம்பைச் சுற்றிக் கொள்கிற கொடியை நாம் சிறிது விலக்கிப் பிரித்து விட்டால்கூட அது படாத பாடுபட்டுக் கொஞ்ச நேரத்திலேயே மறுபடியும் கொம்பை வளைத்துச் சுற்றிக்கொண்டு விடும். நம் மனதை ஈசுவர ஸ்மரணையிலிருந்து அலைக்கழிக்கிற இடைஞ்சல் எத்தனை வந்தாலும் நம் லட்சியத்தைப் பிடிவாதமாகப் பிடித்திருக்க வேண்டும் என்பதை இந்தத் திருஷ்டாந்தம் உணர்த்துகிறது. கடைசியில் நதி — சமுத்திர உபமானம். இது பரம அத்வைதமே. கடல்தான் மழையாக விழுந்து பிறகு ஆறாகியிருக்கிறது. இரண்டும் வேறு வேறு அல்ல. ஒரு நதியானது எந்த மலை உச்சியில் பிறந்தாலும் அலுக்காமல் சளைக்காமல் ஓடி ஓடி வந்து கடைசியில் கடலில் கலந்து தன் தனிப் பெயரையும் உருவத்தையும் இழந்து கடலாகவே ஆகிவிடுகிறது. கடல் அதை எதிர்கொண்டு அழைத்துக் கொள்கிறது. இதனால்தான் நதி சங்கமங்களுக்குச் சிறிது தூரம் இப்பாலே நதி ஜலம் உப்புக் கரிக்கிறது. இப்படியே நாமும் நிஜமான பக்தி செலுத்தினால் கருணாசமுத்திரமான பகவான் நம்மை முன்னே வந்து ஆட்கொண்டு தானாக்கிக் கொள்வான்.

முதலில் ஏதோ பொருள் வேண்டும், பவிஷு வேண்டும் என்று வியாபார ரீதியில் பக்தி செய்ய ஆரம்பித்தாலும், பகவானின் குண விசேஷம் காரணமாக அவனுக்காகவே அவனிடம் அன்பு செலுத்துகிற பக்குவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பெறுவோம். கடைசியில் குண விசேஷம் எதுவும் இல்லாத பரமாத்ம ஸ்வரூபமாகவே நாமும் ஆவோம்.

லோக ரீதியில் வாழ்க்கை நன்றாக நடத்துவதற்கும் சரி, துவைதம் அத்வைதம் முதலிய சித்தாந்தங்களின் அநுபவத்துக்கும் சரி, பக்தி என்பது இன்றியமையாததாகிறது. மோட்சம் அடையச் செய்கிற உபாயங்களில் தலைசிறந்தது பக்தியே என்கிறார் ஸ்ரீபகவத் பாதர். ஆத்ம ஸ்வரூபத்தை உணர்வதுதான் பக்தி என்றும் சொல்கிறார்.

அடுத்த இதழில்: எல்லா மதங்களுக்கும் பொதுவான பக்தி



பரிசுத்தமான பாலினால் செய்யப்பட்டது
காட்பரிஸ் சாக்கலேட்
சுவையானது
மட்டுமல்ல...
போஷாக்கு
அளிக்கவும் வல்லது!
Cadbury's
MILK
CHOCOLATE
பரிசுத்தமான பால்,
சத்துள்ள கொகோ,
இவையுடன் சர்க்கரையின்
இனிப்பு—அதுவே
காட்பரிஸ் மில்க் சாக்கலேட்!
காட்பரிஸ்
ஒவ்வொரு சாக்கலேட்டும்
பாலின் குணங்கள் அடங்கியது!
AIYARS-C.142 TM

இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சமூக நல நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றின் சீரான இயக்கத்துக்கு முக்கிய பொறுப்பேற்றுள்ள ஸ்ரீமதி சரோஜினி வரதப்பன், சென்னையில் மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் ஏராளமான பெண்மணிகளின் அன்புக்கும் பெருமிதத்துக்கும் பாத்திரராகி விளங்குகிறார். இத்தனை பொறுப்புகள் இவரிடம் குவிந்து இவர் பிரபலமடைய இவரது தகப்பனார் திரு பக்தவத்சலம் எந்த அளவுக்குக் காரணம்? ஸ்ரீமதி சரோஜினியே பதிலுரைக்கிறார்:

''என் தகப்பனருக்கு நான் எந்தெந்த நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறேன் என்பதுகூடத் தெரியாது. என்னை முழுக்க முழுக்க இந்தத் துறையில் ஊக்குவித்தது என் தாயார்தான்.''

''காந்திஜியின் அறிவுரை, செல்வாக்கு ஏதாவது இருந்திருக்குமே?''

''ஹிந்திப் பிரசார சபையின் வெள்ளி விழாவுக்கு அவர் வந்திருந்தபோது எனக்கு வயது பத்தொன்பது. அப்போது நான் 'வாலண்டீய' ராகப் பணியாற்றினேன். அவர் மூக காந்தியால் கவரப்பட்டேன். பேச்சைக் கேட்டுப் பண்பட்டேன்.

சமூகப் பணியில் சரோஜினி

''ஆனால் அதற்கும் முன்பாகவே சென்னையில் இயங்கி வந்த சுதேசி லீக் என் மனத்தைத் தேச நலன், சமூக நலன் என்ற மார்க்கங்களில் திசை திருப்பி விட்டது.''

''சுதேசி லீக் — அது எப்படிப்பட்ட அமைப்பு?''

''முழுக்க முழுக்க அது மாதர் சங்கம்தான். அம்மு சுவாமிநாதன், கிருஷ்ணபாய், அம்புஜம்மாள், கோதைநாயகி அம்மாள், ருக்மிணி லட்சுமிபதி, மஞ்சுபாஷிணி போன்ற பிரபல பெண்மணிகள் அதில் பொறுப்பு வகித்துச் சுதந்திர இயக்கத்தில் பங்கேற்றார்கள். அந்நியத் துணி பகிஷ்காரம், மறியல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அப்போது நான் சிறுமியே என்றாலும் இவர்களால் என் மனம் ரொம்பவும் பக்குவப் பட்டது.''

''முதன் முதலாகச் சமூகப் பணியாற்ற உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு?''

''உமன்ஸ் லீக் அஸோஸியேஷன் என்ற அமைப்பில் அம்புஜம்மாள் என் ஹிந்தி அறிவைப் பயன்படுத்திக்கொண்டு பிராதமிக் வகுப்பு எடுக்கச் சொன்னார். அவர் மத்தியமா வகுப்பு மாணவிகளுக்குச் சொல்லித் தருவார். ராயப்பேட்டையில் டிராம் போடும் கடபுடாச் சத்தத்துக்கு மேலாகக் குரலை எழுப்பிக் கத்த வேண்டும்!''

''அதற்கப்புறம் படிப்படியாக உங்கள் நடவடிக்கைகள் பலவிதங்களிலும் விரிவடைந்திருக்கும். உங்கள் தாயார் ஸ்ரீமதி ஞானசுந்தரத்துக்கு இந்திய மாதர் சங்கத்துடன் தொடர்பு இருந்தது இல்லையா?''

''ஆமாம். நிர்வாகக் குழு உறுப்பினராகவே இருந்தார். அவருடன் பல இடங்களுக்குச் சென்று வந்ததிலும் சமூகநலப் பணிகளில் நேரடியாகப் பங்கு பற்றியதிலும் என் நடவடிக்கைகளுடன் மனமும் விசாலம் அடைந்தது. பிற்காலத்தில் அம்புஜம்மாள் என் தாயார் வகித்த அதே ஸ்தானத்தை நானும் வகிக்க வேண்டும் என்று வற்புறுத்திப் பொறுப்பைத் தலையில் கட்டிவிட்டார்.''

''தாங்கக் கூடிய தலை என்று கண்டிருப்பார். அனுபவசாலியாயிற்றே அம்புஜம்மாள். உங்களுக்கு இந்த ஆண்டின் 'தொடக்கத்தில் பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டது. பிரதமரின் விருப்பத்தின் பேரில்தான் என்று பரவலாகப் பேசப்பட்டதே; சாதாரணமாக, மாநில அரசுதானே பரிந்துரைக்க வேண்டும்?''

''அது எப்படியோ; நான் சமூக நலப் பணிகளிலிருந்து சற்று ஒதுங்கிக் கொள்ளலாம் என்றும், என்னைவிட வயதில் குறைந்தவர்களுக்கும் ஆர்வத்தில் நிறைந்தவர்களுக்கும் வாய்ப்புத் தந்து ஊக்குவிக்கலாம் என்றும் எண்ணியபோது பத்மஸ்ரீ பட்டம் வழங்கிவிட்டார்கள். இப்போது ஒதுங்கினால் 'பட்டம் வரவேண்டும் என்று காத்துக் கொண்டிருந்தாளா' என்பதாக ஒரு பேச்சு எழும். எனவே ஒதுங்கும் யோசனையை ஒதுக்கி விட்டேன்.''



ஒதுக்கினால் போதாது; ஓட ஓட விரட்ட வேண்டும் என்கிற அளவில் இப்போது மேலும் ஒரு புதிய பெரிய பொறுப்பு சரோஜினி வரதப்பன் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. மத்திய சமூக நல போர்டின் தலைவியாக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய கல்வி அமைச்சின் கீழ் வருகிற நியமனம் என்றாலும் பிரதமரின் விருப்பம்தான் இப்போதும் நிறைவேறியிருக்கிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது. தமிழ் நாட்டுப் பெண்மணிகள் எல்லோருமே பெருமிதம் அடையக் கூடிய விஷயம்.

''சமூக சேவை செய்கிறேன் என்று கிளம்புகிற மாதர்கள் பலர் கிண்டலுக்கும் கேலிக்கும்





இலங்கை அரசாங்கக் கல்வி இயக்குநராக விளங்கி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நட்புறவுப் பாலமாகவும் திகழும் திரு லக்ஷ்மணன் சமீபத்தில் தமிழ் நாட்டுக்கு வந்திருந்தபோது அவருக்கும் அவரது துணைவியார் ஸ்ரீமதி பாலத்துக்கும் கல்கி தோட்டத்தில் ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம் தேநீர் விருந்தளித்து உபசரித்தார். இந்த இனிய வைபவத்தில் இலக்கிய ஆர்வமுடைய பலர் கலந்து கொண்டு திரு லக்ஷ்மணனுடன் அளவளாவி மகிழ்ந்தனர்.



★

'தீபம்' நா. பார்த்தசாரதி அவர்கள் கல்கியில் தொடர்கதையாக எழுதிய 'சத்திய வெள்ளம்' நாவல் புத்தக உருவில் வெளியாகியிருக்கிறது. தமிழ்ப் புத்தகாலயத்தின் இந்தத் தயாரிப்பைப் பாரதப் பெருந் தலைவர் திரு காமராஜ் அவர்கள் அண்மையில் வெளியிட்டார். சத்தியமூர்த்தி பவனில் திருச்சி திரு சி. ஆர். சந்தானம் அவர்கள் ரூபாய் 101 கொடுத்து நாவலின் முதல் பிரதியைத் திரு காமராஜ் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

உள்ளாக நேர்கிறதே! பொதுவாக வீட்டில் இருக்கும் பெரியவர்கள் கூட, யுவதிகள் சமூகப் பணியாற்றுகிறேன் என்று கிளம்பினால் அதை வரவேற்பதில்லையே, ஏன் இந்த நிலவரம்?''

''ஒரு சிலருடைய நடத்தை பலபேரையும் பாதிக்கிறது. முன்பெல்லாம் சமூக சேவை யென்றால் அதில் ஈடுபடுகிறவர்கள் உழைப்பு தானத்தோடு தங்கள் செல்வத்தைக்கூடக் கணிசமாகத் தானம் செய்ய நேரும். அல்லது வசதியுள்ளவர்களிடம் கேட்டுப் பெற வேண்டியிருக்கும். இப்போதோ சமூக நல அமைப்புக்களுக்கு அரசாங்கமே நிதி உதவி செய்கிறது. இது போல் வேறு எந்த நாட்டிலாவது நடக்கிறதா என்பதே சந்தேகம்தான். இப்படி வழங்கப்படும் பணம் சரியான விதத்தில் செலவாகவில்லை என்று துளியாவது யாருக்கேனும் ஐயம் ஏற்பட்டால் போதும், சமூக சேவை என்ற சொற்றொடரே ஏளனத்துக்கு உள்ளாகி விடுகிறது. மேலும் நமது பெண்மணிகளில் சிலருக்குச் சமூக சேவை என்று ஆரம்பித்து விட்டால் வீட்டு நினைவே இருக்காது. இதுபோன்ற அம்சங்களில் மாதர்கள் கருத்தாக இருந்து விட்டால் ஏச்சுப் பேச்சுக்கே இடமில்லை.''

''மத்திய சமூக நல போர்டின் தலைவி என்ற முறையில் உங்கள் பணிகள் என்னென்ன?''

''பல்வேறு சமூக நல அமைப்புக்களுக்கும் பண ஒதுக்கீடு செய்வதில் முக்கிய பொறுப்பு ஏற்க வேண்டும். அவர்களின் தேவைகளை ஆய்ந்தறிந்து உதவ வேண்டும். ஒதுக்கப்பட்ட பணம் அந்த அந்த நிறுவனங்களால் சரியானபடி பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும் வேண்டும்: இதற்காக அந்தமான், நிக்கோபார், லட்சத் தீவுகள் உள்படப் பல இடங்களுக்கும் சுற்றுப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.''

''பெரிய பொறுப்புத்தான். சமூக சேவையின் எந்த அம்சத்தை மக்கள், குறிப்பாக மாதர்கள் இன்று வரவேற்கிறார்கள்?''

''பொதுவாக இப்போதெல்லாம் கணவருடைய வருமானம் மட்டும் குடும்பம் நடத்தப் போதுமானதாக இல்லை. ஆகவே குடும்பத் தலைவியும் ஏதாவது சம்பாதிக்க வழி சொல்லிக் கொடுத்தோமேயானால் ரொம்ப மகிழ்ச்சி அடைகிறார்கள்.''

''சமூகப் பணிகளில் ஈடுபட விரும்பும் பெண்மணிகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''ஏச்சுப் பேச்சோ விண்டலோ எதையும் இலட்சியம் பண்ணாமல் உங்கள் சேவையை மனப்பூர்வமாகச் செய்யுங்கள் என்பேன். ஓர் ஏழைப் பெண் தையல் வகுப்பில் சேர்ந்து நாலு காசு சம்பாதிக்கக் கற்றுக்கொள்கிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவள் அப்போது அடையும் மகிழ்ச்சி எத்தகையது? உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டு சரோஜினி அவர்கள் சற்று நிறுத்தினார். நான் பதில் கூறுமுன்பே அவரே தொடர்ந்தார்:

''அந்த மகிழ்ச்சிக்கு இணையான ஆனந்தத்தை ஒரே ஒருவர்தான் அநுபவிக்க முடியும்! அந்த ஒருவர், தையல் கலையை அந்த ஏழைக்குக் கற்றுக் கொடுத்த நபர்தான்!''

அநுபவம் பேசியது.

பேட்டி: குட்டி கிருஷ்ணன்

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	1	காலை 9-00 -- 10-00	சாந்தா கிளினிக், சர்ச் ரோடு.
பழனி	1	காலை 11-00 -- 12-00	ஜெயா மெடிகல் மார்ட்
உடுமலைப்பேட்டை	1	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	1	மாலை 5-00 -- 6-00	தி எம்பயர் பார்மஸி.
பாலக்காடு	2	காலை 9-11	K. H. பரசுராம், கல்தான்பேட்டை.
..	2	மாலை 3 - 5	Rainbow Quarters, Opp. Govt. Hospital.
கோயமுத்தூர்	3	காலை 9-11	சீதாராம் லாட்ஜ், ஸ்டேட் பாங்க் ரோடு,
..	3	மாலை 2 - 4	ரெயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்
மேட்டுப்பாளையம்	3	மாலை 5-00 -- 6-00	தி மேட்டுப் பாளையம் மெடிகல் ஸ்டோர்ஸ்.
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடைவீதி
கோபி	4	காலை 10-00 -- 11-00	வாசன் அண்டு கோ., கச்சேரி வீதி.
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் லாட்ஜ்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்தியசாலை, ரயில்வே ஸ்டேஷன் ரோடு.
மாயூரம்	8	காலை 9-30 -- 12-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நாகப்பட்டிணம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்தரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச் ரோடு.
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி லாட்ஜ், மகர் நோம்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை	11	காலை 11-00-12-30	T. N. சொக்கலிங்கம்பிள்ளை சன்ஸ்,
..	11	மாலை 3-00- 6-00	வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 3 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை, B-11, 1வது கிராஸ், தில்லைநகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன் : 87)
திருச்சி ஜில்லா

நிர்லான் உடன் உலகில் உயரப்பறப்பது யாரோ?



மஹாராணா மில்ஸ், தனது ஆர்வம் மிகு இழைப்பின்னத் துணி
வகைகளுக்கு—புடவைகள், ஷர்ட்டிங்குகள், சூட்டிங்குகள், மற்றும்
எண்ணற்ற இதர துணிவகைகளுக்கு—நிர்லான்
இழையை உபயோகிக்கிறது. ஏன்? இணைப்பில்
தோன்றும் இன்னழகு

தலைசிறந்த மில்கள் உபயோகிப்பது **நிர்லான்** இழை!

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922 பிப்ரவரி, 21உ


செவ்வாய்க்கிழமை: இன்று நான் அதிகாலையிலேயே எழுந்து விட்டேன். ஒருவேளை அன்று தூக்கிலிடப்பட இருந்த மனிதனின் நினைவு என்னை முன்னதாகவே எழுப்பி யிருக்க வேண்டும். என் படுக்கையில் உட்கார்ந்தவாறே பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். அடுத்த அறையிலிருந்த மகம்மது கௌஸும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அவர் ஏதோ பிரார்த்தனை கீதம் பாடிக் கொண்டிருந்தார்.

''அவர்கள் வந்து விட்டார்களா? அவர்கள் வந்துவிட்டார்களா?'' என்று சிப்பாய் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தான். சில நிமிஷங்கள் சென்றதும் அவர்கள் வந்து விட்டார்கள். அந்தச் சில நிமிஷங்கள் ஒரு யுகம்போல் தோன்றின. அவர்கள் துரதிருஷ்டம் பிடித்த அப்பாதுரையைக் கை விலங்கிட்டு அழைத்து வந்தனர். காலடி ஓசையிலிருந்து அவர்கள் வந்ததை நான் உணர்ந்தேன். சில நிமிஷங்களில் தலைமை வார்டர் என் அறையைத் தாண்டிச் சென்றார். அதிலிருந்து அப்பாதுரையின் வாழ்வு முடிந்தது என்று தெரிந்து கொண்டேன்.

கடவுள் கொடுத்ததை மனிதன் பகிரங்கமாய்ப் பறித்துக் கொண்டான். அதைச் சட்டப்படி நியாயம் என்றும் எண்ணிக் கொண்டான். எனினும், ஒரு மனிதனின் உயிருக்காக நான் நியாய அநியாயங்களைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லை. அப்பாதுரையைப் போன்று எத்தனையோ லட்சக்கணக்கான ஜீவன்கள் தினந்தோறும் உயிர் இழக்கின்றன. மிருகங்களானாலும், மனிதர்களைப் போல் உயிர் வாழ்ந்திருக்க அவைகளுக்கு உரிமை இல்லையா? இருந்தும், ஆயிரக் கணக்கான பிராணிகள் தினசரி ஏன் கொல்லப்பட வேண்டும்?

ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் இன்று இங்கு வந்திருந்தார். என்னுடன் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு மற்ற ஒத்துழையாமைக் கைதிகளையும் பார்வையிட்டார். சிறை மேலதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்து விட்டு, அவர் தம் வழக்கைக் கவனிக்கச் சென்று விட்டார். காந்திஜியின் சமீபத்திய யோசனைகளைப் பற்றி அவர் அதிருப்தி கொண்டிருக்கிறார். ஆயினும் அவருடைய விருப்பம்தான் என்ன என்பதை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை.


பொதுஜன ஒத்துழையாமையை அவர் பலமாக எதிர்க்கிறார். தனிநபர் ஒத்துழையாமையிலும் சிறை செல்வது அவருக்குப் பிடித்தமில்லை. எனினும், சுதந்திர இயக்கத்தில் ஒரு புரட்சிகரமான திட்டம் இருக்க வேண்டும்



என்றும் நம்புகிறார். அவருடைய கொள்கைக்குத் தர்க்க ரீதியில் என்னிடம் அர்த்தம் சொல்லிப் பார்த்தார். ஆனால் அவரைப் பின்பற்ற என்னால் முடியவில்லை. எனக்கு விளங்கியது இவ்வளவுதான்; சிலர் சிறைக்குச் சென்று இயக்கத்தை நடத்த வேண்டியதுதான். ஆனால் எல்லோரும் சிறைக்குச் செல்லக் கூடாது. தீர யோசித்து, சிலரை வெளியே பலமான பிரசாரத்துக்கு வைத்துக்கொள்ள வேண்டும்.

முன்னைக் காட்டிலும் இப்போது தமக்கு எதிர்காலம்பற்றி அதிக நம்பிக்கை பிறந்திருக்கிறது என்று தெரிவித்துக் கொண்டார். தேசிய சங்கத்தைப் பற்றிக் கூறினார். அந்தச் சங்கம் ஒரு புதிய கட்சியின் ஸ்தானத்தை அடையாமல் காங்கிரஸை எதிர்ப்பதற்கு மட்டும் இருக்கும் என்று நம்புகிறேன்.

நீங்கள் செய்வது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை சிறந்த முறையில் செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் ஒரு 100 வாட் பல்பினைப் போல் இருபங்கு ஒளி தருகிறது. இருப்பினும் இதற்கு ஒரு 40 வாட் பல்புக்கான அளவு மின்சாரமே தேவைப்படுகிறது. பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்தி மின்சாரத்தை மிச்சப்படுத்துங்கள்.

தரம் மற்றும் உழைப்பு இவ்விஷயத்தில் பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்டே வாங்குவதற்குச் சிறந்ததாகும். கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் யூனிட் தரமான உறுப்புகளுடன் முன்கூட்டியே ஒயர் செய்யப்பட்டதாகும். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகிப்பதற்கு சிக்கனமானது. வேலைகளை சிறந்த முறையில் செய்ய இது உதவுகிறது—உங்கள் கடையிலும் சரி, வீட்டிலும் சரி.

அரைப்பங்கு செலவில் இருபங்கு ஒளி

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
அதை முதலில் அளிப்பது பிலிப்ஸ்

பிலிப்ஸ்

PHILIPS

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

சிவகாமியின் சபதம்

ஒன்பதாம் அத்தியாயம்

விடுதலை

அமரர் கல்கி

கயிற்றின் வழியாக மேலே ஏறிய பரஞ்சோதி கூரையை அணுகியபோது இரண்டு இரும்புக் கரங்கள் தன் புயங்களைப் பிடித்து மேலே தூக்கி விடுவதை உணர்ந்தான். மறுகணமே தான் மேற்கூரையில் நிற்பதையும், தனக்கு எதிரில் ''பேச வேண்டாம்'' என்பதற்கு அறிகுறியாக உதட்டில் ஒற்றை விரலை வைத்துக் கொண்டு புத்த பிக்ஷு நிற்பதையும் பார்த்தான். அவருக்குப் பின்னால் இன்னொரு இளம் புத்த சந்நியாசி நிற்பதும் தெரிந்தது. பெரிய பிக்ஷு ஜாடை காட்டியவுடன் இளம் புத்தன் கயிற்றை மேலே இழுத்துச் சுருட்டி ஒரு காவித் துணிக்குள் அதை வைத்துக் கட்டினான்.

பரஞ்சோதி கூரை மேல் நின்றவண்ணம் சுற்றுமுற்றும் பார்த்தபோது, கண்ணுக்கெட்டியதூரம் காஞ்சி நகரத்து மாட மாளிகைகளின் உப்பரிகைகள் வெண்ணிலவில் தாவள்யமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

இதற்குள் பெரிய பிக்ஷுவானவர் சிறைச்சாலைக் கூரையின் துவாரத்தை ஒடுகளைப் பரப்பி அடைத்துவிட்டுப் பரஞ்சோதியை ஒரு விரலால் தொட்டுத் தம் பின்னால் வரும்படி சமிக்ஞை செய்தார். இவரைப் பின்தொடர்ந்து பரஞ்சோதியும், இளம் பிக்ஷுவும் ஓட்டுக்



கூரைகளின் மேலேயும், நிலா மாடங்கள் — மண்டபங்களின் மேலேயும் ஓசைப்படாமல் மெதுவாக நடந்து சென்றார்கள். வீதியில் ஏதாவது சந்தடி கேட்டால் புத்த பிக்ஷு உடனே தம் பின்னால் வருவோருக்கு ஜாடை காட்டி விட்டு உட்கார்ந்து கொள்வார். சந்தடி நீங்கிய பிறகு எழுந்து நடப்பார்.

இவ்விதம் ஏழெட்டுக் கட்டிடங்களை மேற்கூரை வழியாகக் கடந்த பிறகு, ஒரு வீட்டின் முகப்பில் வீதி ஓரத்தில் பன்னீர் மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்த இடத்துக்கு வந்தார்கள்.

பன்னீர் மரங்களின் அடர்ந்த பசிய இலைகளுக்கு இடை இடையே கொத்துக் கொத்தாகப் பூத்திருந்த பன்னீர் மலர்கள் வெண்ணிலாவில் வெள்ளி மலர்களாகப் பிரகாசித்தன. அம்மலர்களின் சுகந்த பரிமளத்தை இளந் தென்றல் நாற்பக்கமும் பரப்பிக் கொண்டிருந்தது.

புத்த பிக்ஷு வீதியை இரு புறமும் நன்றாகப் பார்த்துவிட்டு அந்தப் பன்னீர் மரங்களில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கினார். பரஞ்சோதியும் இளம் பிக்ஷுவும் அவ்விதமே இறங்கினார்கள். சிறிது தூரம் நடந்து, கோயிலைப் போல் அமைந்த ஓர் அழகிய கட்டிடத்தின் வாசலை அடைந்தார்கள்.

அந்தக் கட்டிடந்தான் காஞ்சி நகருக்குள்ளிருந்த புத்த விஹாரங்களுள் மிகப் பெரியது. 'இராஜ விஹாரம்' என்று பெயர் பெற்றது. கருணாமூர்த்தியான புத்த பகவானின் திருப் பற்களில் ஒன்று அந்தக் கோயிலின் கர்ப்பக் கிருஹத்தில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருந்தது.

பல்லவ மன்னர்கள் அவ்வப்போது ஒவ்வொரு மதத்தில் பற்றுடையவர்களாயிருந்தாலும், எல்லா மதங்களையும் சம நோக்குடன் பார்த்து அந்தந்த மத ஸ்தாபனங்களுக்கு மானியம் விடுவது வழக்கம். அவ்விதம் ராஜாங்க மானியத்தைப் பெற்றது இராஜ விஹாரம்.

அன்றியும், காஞ்சியில் சில பெருஞ் செல்வர்கள் பௌத்த சமயிகளா யிருந்தார்கள். அவர்களில் ஒருவனான தனதாஸன் என்னும் வியாபாரி தன்னுடைய ஏக புத்திரன் வியாதியாய்க் கிடந்தபோது, ''பிள்ளை பிழைத்தால் இராஜ விஹாரத்தைப் புதிப்பித்துத் தருவேனாக'' என்று வேண்டுதல் செய்து கொண்டான். பிள்ளை பிழைக்கவே, ஏராளமான பொருட் செலவு செய்து விஹாரத்தைப் புதுப்பித்தான்.

தாவள்யமான முத்துச் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்த இராஜ விஹாரம், வெண்ணிலாவில் அழகின் வடிவமாக விளங்கிற்று.

அதைப் பார்த்ததும் பரஞ்சோதி, ''ஆகா, என்ன அழகான கோயில்!'' என்று கூவினான்.

புத்த பிக்ஷு சட்டென்று நின்று அவனுடைய வாயைப் பொத்தினார். அச்சமயம் பன்னீர் மரங்





களின் நிழலைத் தாண்டி இராஜ விஹாரத்துக்கு எதிரில் திறந்த வெளிக்கு வந்திருந்தார்கள்.

அதே சமயத்தில் இராஜ விஹாரத்துக்கு எதிர் வரிசையிலிருந்த கட்டிடங்களின் இருண்ட நிழலிலிருந்து இரண்டு வெண் புரவிகள் வெளிப்பட்டு வந்தன. அவற்றின் மீது இரண்டு வீரர்கள் காணப்பட்டார்கள். ஒருவர் நடுப் பிராயத்தினர்; இன்னொருவர் வாலிபர். இருவரும் பெரிய முண்டாசு கட்டியிருந்தார்கள்.

இரண்டு குதிரைகளும் இராஜ விஹாரத்தை நெருங்கி வந்தன. வீரர்களில் பெரியவன், ''புத்தம் சரணம் கச்சாமி!'' என்றான். புத்த பிக்ஷு, ''சங்கம் சரணம் கச்சாமி!'' என்றார். இளம் பிக்ஷு ''தர்மம் சரணம் கச்சாமி!'' என்றார்.

''அடிகளே! இரவு இரண்டாம் ஜாமத்துக்கு மேல் யாரும் வெளியில்



கிளம்பக் கூடாது என்று தெரியுமோ?'' என்றான் முதிய வீரன்.

''தெரியும்; ஆனால் சந்நியாசிகளுக்கும் அந்தக் கட்டளை உண்டு என்பது தெரியாது'' என்றார் பிக்ஷு.

''இந்த அர்த்த ராத்திரியில் எங்கே கிளம்பினீர்களோ?''

''இந்தப் பிள்ளை — என்னுடைய சிஷ்யன். காஞ்சிக்குப் புதியவன். காணாமற் போய்விட்டான். அவனைத் தேடிப் பிடித்து அழைத்து வந்தேன்.''

''இந்த வாலிபனுக்கு எந்த ஊரோ?''

''சோழ நாட்டில் செங்காட்டாங்குடி.''

''இன்றைக்குத்தான் இருவரும் வந்தீர்களாக்கும்?''

''ஆம், ஐயா!''

''தங்கள் திருநாமம் என்னவோ?''

''நாக நந்தி என்பார்கள்.''

''இனிமேல் நள்ளிரவில் கிளம்ப வேண்டாம், சுவாமி! சிஷ்யப் பிள்ளையிடமும் சொல்லி வையுங்கள்!''

வீரர்கள் குதிரைகளைத் தட்டிவிட்டுக் கொண்டு போன பிறகு மூவரும் இராஜ விஹாரத்துக்குள் பிரவேசித்தார்கள். அவர்கள் உள்ளே நுழைந்ததும் இராஜ விஹாரத்தின் வெளிக் கதவு சாத்தப்பட்டது.

உள்ளே வெகு தூரத்தில் கர்ப்பக் கிருஹம் தீப வரிசைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைப் பரஞ்சோதி பிரமிப்புடன் பார்த்துக் கொண்டு நின்றான்.

உள்ளேயிருந்து வந்து கொண்டிருந்த அகிற் புகையின் வாசனை அவனுடைய தலையைக் கிறுகிறுக்கச் செய்தது.

புத்த பிக்ஷு அவனுடைய தலையைத் தொட்டு, ''பிள்ளாய்! எப்பேர்ப்பட்ட ஆபத்து உனக்கு வந்தது! புத்த பகவானுடைய கருணையினால் தப்பினாய்!'' என்றார்.

பரஞ்சோதி அவரை ஏறிட்டுப் பார்த்து, ''அடிகளே! எந்த ஆபத்தைச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''பெரிய ஆபத்து. இந்த விஹாரத்தின் வாசலிலேயே வந்தது. குதிரை மேல் வந்தவர்கள் யார் தெரியுமா?''

''எனக்கு எப்படித் தெரியும், சுவாமி? காஞ்சிக்கு நான் புதியவனாயிற்றே?''

பிக்ஷு பரஞ்சோதியின் காதோடு, ''மகேந்திரச் சக்கரவர்த்தியும் அவருடைய மகன் மாமல்லனும்தான்!'' என்றார்.

பரஞ்சோதிக்கு உண்மையிலேயே தூக்கி வாரிப் போட்டது.

''நிஜமாகவா?'' என்று வியப்புடன் கேட்டான்.

''ஆம்; இருவரும் மாறுவேடம் பூண்டு நகர் சுற்றக் கிளம்பியிருக்கிறார்கள். வேஷம் தரிப்பதில் மகேந்திர பல்லவருக்கு இணையானவர் இந்தப் பரத கண்டத்திலேயே இல்லை.''

பரஞ்சோதி சிறிது நேரம் ஆச்சரியக் கடலில் மூழ்கியிருந்து விட்டு, ''அவர்களால் எனக்கு என்ன ஆபத்து?'' என்று கேட்டான்.

புத்த பிக்ஷு ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தார். ''என்ன ஆபத்து என்றா கேட்கிறாய்? யானை மீது வேல் எறிந்த பிள்ளை நீதான் என்று அவர்களுக்குத் தெரிந்தால் நீ பிழைப்பது துர்லபம். அந்தச் சக்கரவர்த்தி குமாரன் இருக்கிறானே, அவன் எப்பேர்ப்பட்டவன் தெரியுமா? இந்தப் பூமண்டலத்தில் தன்னைவிடப் பலசாலியோ, வீரனோ ஒருவனும் இருக்கக் கூடாது என்பது அவனுடைய எண்ணம். அப்படி யாராவது இருந்தால் அவனுடன் மல் யுத்தம் செய்து தோல்வியடைய வேண்டும்;

இல்லாவிடில், யமனுலகம் போக வேண்டியதுதான்!'' என்றார்.

''சண்டை என்று வந்தால் நான் பின்வாங்க மாட்டேன். அடிகளே! சக்கரவர்த்தி குமாரனாகவே இருக்கட்டும்! யாராய்த்தான் இருக்கட்டும்!'' என்றான் பரஞ்சோதி.

''தெரியும் தம்பி! நீ இப்படிப்பட்ட வீரனாயிருப்பதால்தான் உனக்கு ஆபத்து அதிகம். நீ வேலை எறிந்ததனாலேதான் கோவில் யானைக்கு மதம் பிடித்தது என்று பொய்க் குற்றம் சாட்டி உன்னைத் தண்டித்து விடுவார்கள்.''

பரஞ்சோதி நெஞ்சில் 'சுருக்'கென்றது. சுமைதாங்கியில் படுத்திருந்த போது யாரோ பேசிக் கொண்டு போனது ஞாபகம் வந்தது. நாகநந்தியின் வார்த்தைகளில் இதுவரையில் நம்பிக்கை யில்லாதவனுக்கு இப்போது கொஞ்சம் நம்பிக்கை உண்டாயிற்று.

''அப்படிப்பட்ட அநியாயமும் உண்டா?'' என்றான்.

''பரஞ்சோதி! இந்தக் காஞ்சி பல்லவர்களின் குலத் தொழிலே அதுதான். இன்றைக்கு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னால் உன்னைப் போலவே கல்வி பயில்வதற்காக மயூர சன்மன் என்னும் இளைஞன் இந்நகருக்கு வந்தான். அவனுடைய வீரத்தைக் கண்டு அசூயை கொண்ட பல்லவ இராஜகுமாரன் அவன்மேல் பொய்க் குற்றம் சாட்டிச் சிறையில் அடைத்து விட்டான்.....''

''அப்புறம்?''

''மயூர சன்மன் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டு போய்க் கிருஷ்ணா நதிக் கரையில் தனி ராஜ்யம் ஸ்தாபித்துக் கொண்டு, பல்லவர்களைப் பழிக்குப் பழி வாங்கினான். புத்த பகவான் அருளால் மயூர சன்மனைப் போலவே நீயும் பெரும் ஆபத்திலிருந்து தப்பினாய்!...''

பரஞ்சோதி அப்போது குறுக்கிட்டு, ''அடிகளே! மற்ற ஆபத்துக்கள் ஒரு புறம் இருக்கட்டும். இப்போது எனக்குப் பசி என்கிற ஆபத்துத்தான் பெரிய ஆபத்தாயிருக்கிறது. பசியினாலேயே பிராணன் போய் விடும் போலிருக்கிறது!'' என்றான்.

நாகநந்தி அவனை மடைப்பள்ளிக்கு அழைத்துச் சென்று உணவு அருந்துவித்தார். பிறகு ஒரு மண்டபத்தின் தாழ்வாரத்துக்கு அவனை அழைத்து வந்து, ''பரஞ்சோதி! இங்கே படுத்துக்கொள். தூங்குவதற்கு ஒரு முகூர்த்த காலம் கொடுக்கிறேன். நிம்மதியாகத் தூங்கு. உனக்கு வந்த ஆபத்து இன்னும் முழுவதும் நீங்கிவிடவில்லை. பொழுது விடிவதற்குள்ளே நாம் கோட்டையை விட்டுப் போய்விட வேண்டும்'' என்றார்.

பரஞ்சோதி அப்படியே அந்த மண்டபத்தின் தளத்தில் சாய்ந்தான். அடுத்த நிமிஷமே நித்திராதேவி அவனை ஆட்கொண்டாள்.

பத்தாம் அத்தியாயம்

கண்கட்டு மாயம்

பரஞ்சோதி தரையில் படுத்தவுடனே கண்ணயர்ந்தான். ஆயினும், அவன் நல்ல தூக்கம் தூங்கினான் என்று சொல்வதற்கில்லை. ஏதேதோ பயங்கர, துர்க்கனவுகள் தோன்றித் தூக்கத்தைக் கெடுத்தன.

ஒரு சமயம் ஐந்தாறு புத்த பிக்ஷுக்கள் வந்து அவனைச் சூழ்ந்து நின்றார்கள். அவர்களில் ஒருவர் தம் கையிலிருந்த தீபத்தைத் தூக்கிப் பரஞ்சோதியின் முகத்தில் வெளிச்சம் விழும்படி பிடித்தார்.

''ஆமாம்; நாகநந்தி சொல்வது சரிதான். இவன் முகத்தில் அபூர்வமான களை இருக்கிறது. இவன் மகா வீரன் ஆவான்; அல்லது மகாத்மா ஆவான்!'' என்று யாரோ ஒருவர் சொன்னது போலிருந்தது.

இன்னொரு சமயம் அவனை ஒரு மத யானை துரத்திக் கொண்டு வருகிறது. பரஞ்சோதி சட்டென்று ஒரு பன்னீர் மரத்தின் மேல் ஏறிக் கொள்கிறான். புஷ்பக் கொத்துடன் கூடிய ஒரு பன்னீர்க் கிளையை ஒடித்து யானையின் மேல் போடுகிறான். அச்சமயம் திடீரென்று இரு குதிரை வீரர்கள் தோன்றி, ''அடபாவி! கோவில் யானையைக் கொன்று விட்டாயா?'' என்று கூவிக் கொண்டே தங்கள் கையிலிருந்த வேல்களை அவன் மீது எறிகிறார்கள்!

மற்றும் ஒரு பயங்கரக் கனவு: நாகநந்தியடிகள் வந்து அவன் பக்கத்தில் நின்று அவனுடைய முகத்தை உற்றுப் பார்க்கிறார். அப்படிப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவருடைய முகமானது படம் எடுத்தாடும் பாம்பின் முகமாக மாறுகிறது! அந்தப் பாம்பு அதனுடைய மெல்லிய பிளவுபட்ட நாவை நீட்டி அவனுடைய முகத்தைத் தீண்ட வருகிறது!

பரஞ்சோதி அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருந்தான். பார்த்தால் நாகநந்தி அடிகள் உண்மையாகவே அவன் அருகில் நின்று அவனைக் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''பிள்ளாய்! ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? ஏதாவது துர்க் கனவு கண்டாயா?'' என்று பிக்ஷு கேட்டார்.

பரஞ்சோதி, ''இல்லை; இல்லை. ஒன்றுமில்லை. நீங்கள் திடீரென்று தொடவே கொஞ்சம் திடுக்கிட்டேன்'' என்றான்.

''பொழுது விடிய இன்னும் ஒரு முகூர்த்தம்தான் இருக்கிறது. புறப்படு, போகலாம்! பொழுது விடிவதற்குள் இந்தக் கோட்டையைக் கடந்து போய்விட வேண்டும்.''

''ஏன், சுவாமி!''

''புத்த தேவருடைய ஆக்ஞை.''

''யாருக்கு?''

''எனக்குத்தான் உன்னை அபாயத்திலிருந்து தப்புவிக்கும்படி ஆக்ஞை. என்னிடம் உனக்கு இன்னும் நம்பிக்கை வரவில்லையா?'' என்று நாக நந்தி பரிவு ததும்பிய குரலில் கேட்டார்.

பரஞ்சோதி மௌனமாயிருந்தான்.

''போகட்டும்; இன்னும் ஒரே ஒரு முகூர்த்த காலம் — இரவு கழிந்து, பொழுது விடியும்வரையில் — நான் சொல்கிறதைக் கேள். புத்த தேவருடைய கட்டளையை நான் நிறைவேற்றி விடுகிறேன். கோட்டைக்கு வெளியே உன்னைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன். அப்புறம் உன் இஷ்டம்போல் செய்.''

கனிந்த குரலில் கூறிய இந்த வேண்டுகோளைப் பரஞ்சோதியினால் மறுக்க முடியவில்லை.

''ஆகட்டும், அடிகளே!'' என்றான்.

''அப்படியானால் இன்னும் ஒரு முகூர்த்த காலம் என்னிடம் நம்பிக்கை வைத்து நான் சொன்னபடி கேட்பாயல்லவா?''

''கேட்கிறேன்.''

''உன்னுடைய கண்களைக் கட்டி இவ்விடமிருந்து அழைத்துப் போக வேண்டியதாயிருந்தால்?''

பரஞ்சோதி ஒரு நிமிஷம் திகைத்து நின்றுவிட்டு, ''எப்படியானாலும் சரி!'' என்றான்.

உடனே, நாக நந்தி அடிகள் ஒரு சிறு துண்டை எடுத்துப் பரஞ்சோதியின் கண்களைச் சுற்றிக் கட்டினார்.

''பிள்ளாய்! என் கையைப் பிடித்துக் கொண்டே வரவேண்டும். நான் சொல்கிறவரையில் கண்ணின் கட்டை அவிழ்க்கக் கூடாது. இப்போது நீ என்னிடம் காட்டும் நம்பிக்கையின் பலனை ஒரு நாள் அவசியம் தெரிந்து கொள்வாய்!''

இவ்விதம் கூறிப் பரஞ்சோதியின் கரத்தைப் பிடித்துக் கொண்டு, நாக நந்தி நடக்கத் தொடங்கினார். பரஞ்சோதியின் நெஞ்சு 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. ஆயினும் அவன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு பிக்ஷுவைப் பின்பற்றி நடந்தான்.

முதலில் புத்த விஹாரத்தின் வாசல் வழியாக வெளியேறுவது போலப் பரஞ்சோதிக்குத் தோன்றிற்று. பின்னர், வீதியோடு நடந்து போவதாகத் தோன்றிற்று. பன்னீர்ப் புஷ்பங்களின் வாசனையிலிருந்து அன்று முன்னிரவில் மேல் மாடத்திலிருந்து வீதியில் இறங்கிய இடமாக இருக்கலாமென்று ஊகித்துக் கொண்டான்.

இன்னும் சிறிது தூரம் நடந்த பிறகு, போகும் திசை மாறியது. சற்று நேரத்துக்கெல்லாம் மீண்டும் பன்னீர்ப் பூவின் நறுமணம். 'வந்த வழியே திரும்பிப் போகிறோமா என்ன? ஆ! இந்தப் பொல்லாத பிக்ஷு எனக்கு வழி அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக இப்படி இழுத்து அடிக்கிறார் போலும்!' என்று பரஞ்சோதி எண்ணிக் கொண்டான்.

மறுபடியும் ஒரு கட்டிடத்துக்குள் பிரவேசிப்பது போலிருந்தது. அகிற் புகையின் மணத்திலிருந்து, 'இது இராஜ விஹாரந்தான்' என்று பரஞ்சோதி தீர்மானித்தான். பிறகு, சிறிது நேரம் இருளடைந்த குகைகளின் வழியாகச் சுற்றிச் சுற்றி வருவது போல் தோன்றியது. கண்ணைக் கட்டியிருந்தபடியால், வெகு நேரம் முடிவேயில்லாமல் நடந்து கொண்டிருப்பதாகப் பட்டது.

''அடிகளே! இன்னும் எத்தனை நேரம் இவ்விதம் கண்கட்டு வித்தை செய்ய வேண்டும்?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''பிள்ளாய்! கிட்டத்தட்ட வந்துவிட்டோம். இன்னும் கொஞ்சம் பொறு!'' என்றார் பிக்ஷு.

திடீரென்று இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வந்து விட்டதாகப் பரஞ்சோதி உணர்ந்தான்.

''பரஞ்சோதி! நாம் வரவேண்டிய இடத்துக்கு வந்து விட்டோம். கண் கட்டுச் சோதனை முடிந்தது'' என்று சொல்லிக் கொண்டே அடிகள் கட்டை அவிழ்த்தார்.

புத்த பகவான் அருளால் சொர்க்க லோகத்துக்கே வந்து விட்டோமோ என்று பரஞ்சோதிக்குத் தோன்றியது. அவன் கண் முன்னால் அத்தகைய சௌந்தர்யக் காட்சி தென்பட்டது.

அகழி நீரில் அஸ்தமன சந்திரனின் வெள்ளிக் கிரணங்கள் படிந்து, உருக்கிய


இலவசம்!
ரூ.5/ பாத்திரச் சீட்டு
இரண்டு சீட்டு சேருகிறவர்களுக்கு
எவர்சில்வர் செம்பு அல்லது டபராதம்ளர்
உடனே கொடுக்கப்படும்
PHONE
B.O. 442968
H.O. 442942
ஒரு சீட்டு சேருகிறவர்களுக்கு
ஒரு எவர்சில்வர் தம்ளர் இலவசம்
ரத்னா ஸ்டோர்ஸ்
B.O. ரெங்கநாதன் தெரு ★ H.O. பாண்டி பஜார், தி.நகர். சென்னை-17.
வெளியூர் சேமிப்புச் சீட்டுகள் M. O. மூலம் சேர்த்துக் கொள்ளப்படும்.
டெல்லி ஏஜெண்டு: Grahalakshmi F-69, Road No. 3, Andrew's Ganj, New Delhi-49


தலைவலி அல்லது ஃப்ளூவிலிருந்து
விரைவில் நிவாரணம்!
ஸலோஃபென்
வலி நிவாரண மாத்திரை
அமிர்தாஞ்சன் லிமிடெட் தயாரிப்பு
தலைவலி, ஃப்ளூ, பல்வலி, உடல்வலி
ஆகியவற்றிலிருந்து ஸலோஃபென்
உடனடியாக நிவாரணம் அளிக்கிறது.
அது நம்பகமானது. டாக்டர்கள்
கையாளும் மருத்துவ முறைப்படி
ஸலோஃபென் தயாரிக்கப்படுகிறது.
SALOFEN
SALOFEN
SALOFEN
FDS/AS/1920 THS


பலத்திற்கும்
ஆரோக்கியத்திற்கும்
பண்டிட் D. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
1898 முதல் பிரசித்தி பெற்றது!
ஆயுர்வேதாஸ்ரமம் (பி) லிமிடெட் சென்னை-17.

வெள்ளி ஓடையாகச் செய்து கொண்டிருந்தன. அகழிக்கப்பால் மரங்கள் அடர்ந்த வனப் பிரதேசம் காணப்பட்டது. மரங்களின் உச்சியில் சந்திர கிரணங்கள் இலைகளின் மீது தவழ்ந்து விளையாடின.

அகழியில் ஒரு படகு மிதந்தது. பரஞ்சோதியைச் சிறை மீட்க உதவி செய்த இளம் பிக்ஷு கையில் துடுப்புடன் படகில் நின்றார்.

பெரிய பிக்ஷுவும் பரஞ்சோதியும் அகழியண்டை போய்ப் படகில் ஏறினார்கள். படகு நகர்ந்தது.

''இந்த அகழியைத் தாண்டப் படகு என்னத்திற்கு? எளிதில் நீந்திக் கடந்து விடலாமே?'' என்றான் பரஞ்சோதி.

'' ஆம்! நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தலாம்.''

''இந்த அகழியினால் கோட்டைப் பாதுகாப்புக்குத்தான் என்ன பிரயோசனம்? எதிரிகள் வந்தால் சுலபமாய் நீந்திவிட மாட்டார்களா?''

''அதோ பார்!'' என்றார் பிக்ஷு. சற்றுத் தூரத்தில் ஒரு முதலை பயங்கரமாக வாயைத் திறந்தது.

''ஐயோ!'' என்றான் பரஞ்சோதி.

''இம்மாதிரி நூற்றுக் கணக்கான முதலைகள் இந்த அகழியில் இருக்கின்றன. சாதாரண காலங்களில் அங்கங்கே இரும்புக் கூண்டுகளில் அடைத்து வைத்திருப்பார்கள். யுத்த காலங்களில் திறந்து விட்டுவிடுவார்கள். நேற்று இரவு திறந்து விட்டிருப்பார்கள்.''

''அப்படியானால் யுத்தம் வருவது நிச்சயந்தானா சுவாமி!''


''பின் எதற்காக இவ்வளவு அமர்க்களமெல்லாம் என்று நினைத்தாய்!'' என்றார் பிக்ஷு.

பரஞ்சோதி மௌனமாயிருந்தான்

படகு அகழியின் அக்கரையை அடைந்தது. (தொடரும்,

'முன்னேற்றம்' அவசியமா?

சில கருத்துக்கள் :



☐ பல்லவா பஸ்களின் முன் பகுதிகளில் பெண்மணிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கியிருப்பது இப்போது இங்கே புதுமையாக இருக்கலாம். கேரளத்தில் இந்த முறை பல நாட்களாகவே அமுலில் இருக்கிறது. இதற்கு யாரும் அங்கு மறுப்புக் குரல் எழுப்பியதாகத் தெரியவில்லை. - டாக்டர் மொஹிதீன், எம்.பி.பி.எஸ்.

☐ கண்டக்டருக்கும் டிரைவருக்கும் 'போனஸ்' கொடுக்கும் முறை அமுலுக்கு வந்த பிறகு கண்டக்டர்கள் சர்வ சாதாரணமாகப் பயணிகளை முன்பக்கமும் ஏற அனுமதித்துத்தானே வந்தார்கள்? இப்போது பெண் பயணிகள் மாத்திரம் அந்தப் பக்கம் ஏறுவதில் இவர்களுக்கு ஏன் அங்கலாய்ப்பு?


- திரு ஆர். பாலசந்திரன், வடபழனி


☐ முன்பெல்லாம் துடிதுடிப்பான ஆண் பயணிகள் பின்பக்கத்து ஃபுட்போர்டில் துணிச்சலுடன் தொங்கி நின்றவாறு பிரயாணம் செய்வதில் ஆர்வம் காட்டினார்கள். இப்போது அதே பயணிகள் முன்பக்க ஃபுட்போர்டைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறார்கள். தப்பித் தவறிக் கீழே விழுந்தால் பின்சக்கரம் அவர்களை நிச்சயம் பதம் பார்க்கும் நிலை. முன்பு இப்படி இல்லையே?

- குமாரி எஸ். ரேவா, கல்லூரி மாணவி

☐ டிரைவருக்குப் பின்னால் இரண்டு பக்கங்களிலும் பெண்களுக்கு இடம் ஒதுக்கியிருப்பது அவ்வளவு நல்லதாகப் படவில்லை. இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடையே நிற்கும் பெண்மணிகள் டிரைவர் 'சடன் பிரேக்' போடும் நேரங்களில் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, டிரைவரின் வலது கைப்பக்கமாகவே அந்த ஒரு நீள சீட்டையும் அதைத் தொடர்ந்து இருக்கும் ஐந்து சீட்டுகளையும் பெண்மணிகளுக்கு ஒதுக்கிவிடலாம். முன்போலவே இப்போதும் பதினொன்று ஆசனங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். மேலும் இந்தப் பகுதியில் வெளிப்பக்கத்திலிருந்து யாராலும் தொங்கிக் கொண்டு பிரயாணம் செய்ய முடியாது. பெண்கள் முன்பக்க வாயில் வழியாகவே ஏறி இறங்கலாம். - திருமதி தங்கம்மா பீட்டர்.

☐ 'லேடீஸ்'களுக்கெல்லாம் பஸ்லிலே முன் பக்கத்தை ஒதுக்கிக் கொடுக்க யோசனையை உருவாக்கின புண்ணியவானுக்கு ஒரு சிலை வைக்கணும். மாறி





மாறி இரு பக்கமும் டிக்கெட் தர்றதுக்குள்ள பொழைப்பு ரொம்ப பேஜாராப் போச்சு! - ஒரு கண்டக்டர்

☐ என் முதுகுக்குப் பின்னாலே இந்த லேடீஸ் கூடி நின்னு கசகசவென்று பேசிக்கொண்டு வருவது என்னுடைய கவனத்தைத் திருப்புது. கோபமும் வருது. சமாளிக்கிறேன். சர்வ ஜாக்கிரதையாக இல்லாட்டா விபத்து ஏற்படலாம்! - ஒரு டிரைவர்

பேட்டி : பட்டினத்தார்




இன்ஸ்பெக்டர் விக்ரம் 5
கதை: அமிர்தமூர்த்தி
படம்: பிரதாப்முல்லிக்
கொண்டு போன கொள்ளைக் காரன் லால்சிங்தான் என்று உனக்கு நிச்சயமாய்த் தெரியுமா?
தோன்றுகிறது
பின்தொடர்ந்தோம். பலனில்லை. அவனிடம் குதிரை இருந்தது.
மிஸ்டர் மல்ஹோத்ரா!
அவர் பக்கம் திரும்பினர் விக்ரம்.
உங்களுக்கு நான் ஏமாற்ற மளிக்க விரும்பவில்லை. ஆனால் உண்மையை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.
விஷயத்துக்கு வா!
அவனைக் கண்டு பிடிப்பது சாத்தியமில்லை.
அப்படியென்றால் அவன் என் கதாநாயகி யைக் கொலை செய்து விடுவான் என்று அர்த்தமா?
அதை நான் சொல்வதற்கில்லை!
அடக்கடவுளே! நான் இந்தத் திரைப்படத்தில் 15 லட்சம் முத லீடு செய்திருக் கிறேன். என் சொத்தெல்லாம் இதில் முடங்கிக் கிடக்கிறது.
10-3
படத்தைப் பூர்த்தி செய்யா விட்டால் எல்லாம் போய் விடும். நான் ஓட்டாண்டி யாகிவிடுவேன்.
ஒரே நாளில் பரதேசியாகி விடுவேன். தயவுசெய்து ஏதாவது பண்ணு. எப்படியாவது அவளை உயிரோடு கொணர முயற்சி செய்.
அதற்கு மேல் பேசப் படாதிபதி யால் முடியவில்லை. அவர் அழுது கொண்டிருந்தார்.
(தொடரும்)

காலம் மாறுனாலும்..

மு. கணேசன்

ரசாயன வகுப்பு....

பென்ஸீன் ஸ்ட்ரக்சர் பற்றி மேடம் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தாள். தெருவிலே மா கொண்டு கோலம் போடுறாளே, அதுபோலே ஏதோ கட்டம் கட்டமாப் போட்டுக்கொண்டு, இது அந்த பாண்ட் அது இந்த பாண்ட் என்று என்னெல்லாமோ சொல்லிண்டே யிருந்தாள். அந்தக் கோடுகளிலே எவ்வளவோ 'சயின்டிபிக் அப்ரோச்' இருக்கிறது. உன்னிப்பாக் கவனிச்சாத்தான் புரிகிறது. மோவா மேலே கையை வைச்சிண்டு உன்னிப்பாக் கவனிக்கிறேன். போர்டு பக்கம் மேடம் திரும்பினதும்தான் தாமதம் என் எதிர்த்த சீட் நிரஞ்சன் ஒரு காகிதத்தைச் சுருட்டி என் பக்கம் போட்டுச்சு. 'நிரஞ்சன்'னு சொன்னதுமே ஏதோ 'கிருதாக் கேசு' என்று நினைச்சுடாதீங்க. அவ பேரு அமலா. அவ அப்பா பேரு நிரஞ்சன். இவ மிஸ் நிரஞ்சன்னு பேர் வைச்சுக்கிட்டா. இங்கே இருக்கிற அம்பத்தூரிலே பொறந்தவதான். அயல் நாட்டுப் பாணியிலே பேரையும் உடையையும் மாத்திக்கிட்டா. வீட்டிலே இருக்கறப்போ எங்க அண்ணா போடுகிற மாதிரி பனியனைப் போட்டுண்டு, தொள தொளன்னு ஒரு பேண்டை மாட்டிக்கிட்டு வகுப்புக்கு வந்துட்டா. அவள் போட்ட பேப்பரை நான் பிரிக்கலே. அதைப் பிரிச்சா பென்ஸீன் அணுக்களின் அமைப்பை எப்படிப் புரிஞ்சுக்கிறது? அமலா பெயிலாயிட்டே வந்தா. 'டேக் இட் ஈஸி'ன்னு அவள் அப்பா முதுகைத் தட்டுவார். எங்க அப்பா முதுகிலே போடுவா. அம்மா ரசமும் தண்ணியும் ஊத்துவா. அண்ணன் கரிச்சுக் கொட்டுவான்.

மணி அடிக்கிறது. இரசாயனத்திலே ஊறிப் போன மேடமுக்கு அது கேட்கலே. தொடர்ந்து லெக்சர் அடிச்சுண்டே யிருந்தது.

''மேடம், மணி அடிச்சாச்சு...'' என்று முகத்தைக் குனிந்து கொண்டே நிரஞ்சன் சொன்னாள். ''வெரி சாரி''ன்னு சொல்லிண்டு சாக்பீஸ், டஸ்டரை எடுத்துண்டு வெளியே போயிடுத்து. அது கடைசி 'பீரியட்'.

டீன் ஏஜ் கதை ௪



புத்தகத்தைத் தூக்கிண்டு வெளியே வந்தேன். தொப்புன்னு தோள்லே கை விழுந்தது. நிரஞ்சன் நின்னு கொண்டிருந்தது.

''என்னடி, 'பென்னீன் பெண்மணி!' நான் போட்ட காகிதத்தைப் பிரிச்சுப் பார்க்கிறதுக்குக் கூட நேரமில்லே. சோடா புட்டி (கெமிஸ்ட்ரி மேடத்துக்கு அவர்கள் வைச்ச செல்லப் பெயர்) லெக்சர் அவ்வளவு ருசிக்கிறதோ உனக்கு? இப்போவாவது பிரிச்சுப் பாரு''ன்னு சொன்னாள்.

பிரிச்சேன்.

''அழகுன்னு என்ன தெரியுமா?

An ideal beauty would have an English complexion. an Irish smile, French curves, a spanish-walk, Italian hair, Egyptian eyes, a greek nose. American teeth, a viennese voice, a Japanese laugh, Argentinian shoulders, A Thai's neck, Chinese feet, and an Australian bosom''

படிச்சிட்டு அவளிடமே திருப்பிக் கொடுத்துட்டேன். 'ஏண்டி இதைச் சொல்லத்தான் இடையிலே 'டிஸ்டர்ப்' பண்ணினேயா?''

விழுங்கி விழுங்கிக் கேட்டேன்.

''மண்டு! பியூட்டியை 'டிஃபைன் பண்ணின கொட்டேஷனை உனக்குக் காண்பிச்சேனே, ஏன் தெரியுமா? இவ்வளவு தூரம் அழகை 'அனலைஸ்' பண்ணியவன் இதில் கூட இந்தியாவுக்கு இடம் அளிக்கவில்லையே ஏன் என்று இருபதாம் நூற்றாண்டில் வாழும் இரண்டாம் நூற்றாண்டுப் பெண்ணாகிய உன்னிடம் கேட்கத்தான்....!''

''நீ இங்கேதானே பிறந்திருக்கே!''

கடக் கடப் பதில் கொடுத்துட்டேன்.

''மீனு! நீ ப்ரிலியண்ட் ஸ்டூடண்ட்தான்னு ஒப்புக்கொள்கிறேன். ஆனா இப்படியா கட்டுப் பெட்டியா இருக்கிறது? உன் வயசுக்கு இப்போ பேர் என்ன தெரியுமா? 'டீன் ஏஜ்'... அதற்கு ஏற்றாற்போல் இருப்பதுதான் அழகு. மறந்தே போனேனே... அன்னைக்கு ஒரு நாள் ''டிவல்த் நைட்'' பானர்ஜி எடிஷன் கேட்டியே, எங்க பங்களாவுக்கு வர்றியா? தர்றேன்.

அவ பானர்ஜி எடிஷன் தர்றேன்னு சொன்னதும் எனக்கு ஒரே ஆசை. அந்தப் புத்தகம் கிடைக்காம எப்படித் தவிச்சேன்! புதுசா வாங்கப் பணம் இல்லேன்னுட்டார் அப்பா. மூர் மார்க்கெட்டிலே துழாவிட்டேன். கிடைக்கல்லே. இவ இப்பத் தர்றேன்னு சொல்றா.

''ஏண்டி, நிரஞ்சன்! நாளைக்குக் காலே ஜாக்கு வரச்சே கொண்டாயேண்டி... நான் வாங்கிக்கிறேன்.''

''நோ... நோ.... நாளைக்கு நாங்க எல்லாம் டூர் போறோம். இன்னிக்கு வந்தாத் தர்றேன்.''

''ம... இன்னிக்கு வெள்ளிக் கிழமை. நீட்சிதர் உபந்யாசம். நான் பாட்டிக்குத் துணையாப் போகணும்.''

''தாராளமாப் போ. நீட்சிதர்கிட்டே போய், ஷேக்ஸ்பியரைப் பற்றிக் கேளு. சரியான மண்டுடி நீ! பாய் ஃப்ரெண்டோட டிஸ்கொத்தே போகிற வயசிலே பாட்டிக்குத் துணையாப் போறாளாம்... நீ வர்றியா இல்லையா?...''

''நீ ஸ்கூட்டரிலே போவே.''

''உனக்காக கரேஜை இன்னைக்கு 'அவாய்ட்' பண்ணிடறேன்! நீ பின்னாலே உட்கார்ந்துக்கோ... ஓ. கே...?''

''சரி.''

ஸ்கூட்டர்லே என்ன வேகமாப் போறா...! என் புடவைத் தலைப்பு என் தோளிலே இருந்து பிச்சுண்டு போயிடும் போலே இருக்கு. அவளுக்கென்ன டெர்லின் பனியன் போட்டிருக்கா. ஜம்முன்னு போறா. அவ பொம்பளைதான்னு வச்சிக்கிட்டாக்கூட அவ தோளிலே கையை வைச்சுண்டு போறதுக்கு வெட்கமா இருந்தது....

''ஏண்டி மீனு. இந்தக் காலத்து டீன் ஏஜைப் பற்றி என்ன நினைக்கிறே?'' என்று நிரஞ்சன் ஆரம்பித்தாள்.

''நேக்கு ஒண்ணும் தெரியாதுடி......டின் தயிர் நல்லா இருக்காதுன்னு தெரியும். டீன் ஏஜைப் பற்றித் தெரியாது.''

''டீன் ஏஜுக்கு என்ன வேண்டும் என்றுவது தெரியுமா?''


''ஒண்ணுமே தெரியாது.''

''தெரிஞ்சுக்க வேண்டியது அவசியம். டீன் ஏஜுக்கு வேண்டியது என்ன தெரியுமோ? நாலு 'எல்'...''

''அது என்னடி?''

''முதல் 'எல்' லாம்பரட்டா. அதுலே நீ இப்ப வந்திண்டிருக்கே. டீன் ஏஜில் இது முதல் படி. அதற்கு அடுத்தது..... பிறகு சொல்றேன். சஸ்பென்ஸாக இருந்தால்தான் சுவாரசியமா இருக்கும்.''





ஸ்கூட்டரை வளைச்சு ஒரு பெரிய காம்பவுண்டுக்குள் நுழைகிறோம். அடேடே...... இதுவா இவன் பங்களா? எவ்வளவு பெரிசு! வீட்டுக்குள் நுழைகிறோம். சிவப்பு சிவப்பா விரிப்பு! எவ்வளவு அழகா இருக்கு வீடு!

எங்க வீட்டுப் பாய்லர்லே இருந்து வர்ற மாதிரி புகை விட்டுண்டு ஒரு வழுக்கைத் தலை வந்துண்டிருந்தது. 'குட் ஈவினிங் டாடி'ன்னு ஓடிப்போய் நிரஞ்சன் அவரைக் கண்டிண்டா. அப்பா — பெண் உறவுன்னுக்கூட இப்படியா?

''யார் இந்த பேபி?''ன்னு என்னைப் பார்த்துக் கேட்டிச்சு அந்த மொட்டைத்தலை. நான் என்ன குழந்தை மாதிரியா இருக்கேன்?

'என் க்ளாஸ்மேட், டாடி'ன்னு நிரஞ்சன் அறிமுகப் படுத்திட்டு என்னை அழைச்சுண்டு போறான்.

அது தனியான அறை. சுவரிலே எப்படி எப்படியோ படங்கள். சகிக்கலே. குமட்டிண்டு வந்தது.

''மீனு! இது என் ரூம். இங்கே யாரும் வர மாட்டாங்க, என் பாய் பிரண்ட்ஸைத் தவிர. இந்தப் புத்தகத்தைப் படிச்சுண்டு இரு.. நான் டிரெஸ் மாத்திண்டு வர்றேன்னு சொல்லிண்டு போனா. டிரஸ் மாத்துகிற அளவுக்கு அவ உடம்பிலே அதிக டிரஸ் இல்லே. அப்படியும் என்ன பண்ணப் போறாளோ... அவ கொடுத்த புத்தகத்தைப் பிரிச்சேன்... பிரிச்சப்ப தெரிஞ்சது அது படிக்கக் கூடிய புத்தகமில்லே, பார்க்க வேண்டிய புத்தகம்னு. அப்படியே மூடி வைச்சுட்டேன். வேர்த்துக் கொட்டியது.

பெல் பாட்டத்தோடு போனவ, என் கடைசித் தங்கை மாறு போடற ஸ்கர்ட் மாதிரி ஒன்றரை முழத் துணியை உடுத்திண்டு வந்து நின்றாள். நான் அவளைப் பார்த்தேன்.

''ஏண்டி தாமதம் பண்றே? புத்தகம் தரயா...? நான் பஸ்ஸைப் பிடிச்சு வீட்டுக்குப் போறதுக்குள்ளே இருட்டிடும்டி...''

பலமாகச் சிரித்தாள் அவள்.

''மீனுக் கண்ணு! நான் உன்னை இங்கு அழைத்து வந்த காரணம் என்ன தெரியுமா? பானர்ஜி எடிஷன் கொடுக்க இல்லேடி. உன் ஏஜைப் பற்றி உனக்கு வகுப்பு எடுக்கத் தான். சரி, விஷயத்துக்கு வர்றேன். உன் ஏஜுக்கு வேண்டிய இரண்டாவது 'எல்' என்ன தெரியுமா? 'லேட் மியூஸிக்.''

கண்ணைப் புறா முட்டை மாதிரி வச்சிண்டு அவளைப் பார்க்கிறேன். அவள் பிளேயரைத் திறந்தாள்.

''மீனு, நீ பாப் கேட்டிருக்கியா?''

''பாப் செய்த முடியைத்தான் நான் பார்த்திருக்கிறேன். 'பாப்' கேட்டதில்லே.''

''மண்டு! பாப் மியூஸிக் நீ கட்டாயம் கேட்கணும். டாம் ஜோன்ஸின் 'க்ளோஸ் அப்' கேட்கிறயா?''

''வேண்டாம்.''

''எல்விஸ் பிரிஸ்லியின் ரிலைட்டல் அட் மெடிசன்?''

''நோ...''

''நீல் டயமெண்டின் 'ரூட்' அல்லது 'டிஸ்கொத்தே'?''

''எனக்கு எதுவுமே வேண்டாம். என்னை விட்டுடு... ப்ளீஸ்.''

கெஞ்சினேன் நான். அவள் விடவில்லே.

''அடுத்த நாட்டுக்காரன் பாடினது பிடிக்காட்டா உங்க வீட்டு உஷா பாடினதைக் கேளு.''

'ஐ லவ் யூ' என்ற பாடலைப் பிளேயரில் சுற்ற விட்டாள். எனக்குத் தலை சுற்றியது.

''நிரஞ்சன்...! அந்த ரிக்கார்ட் பிளேயரை நிறுத்தப் போறியா இல்லே....''

முகத்தை ஜிவுஜிவுன்னு வைச்சுக் கொண்டேன். பிளேயரை அவள் பட்டென்று நிறுத்தினாள். ''வெரி சாரிடி... உனக்குப் பிடிக்கலைன்னா வேண்டாம். போகட்டும். மிஸ் மீனு, உன் ஏஜுக்கு வேண்டிய அடுத்த 'எல்' எது தெரியுமா? 'எல். எஸ். டி.''

மேஜை டிராயரைத் திறந்து ஒரு புட்டியை எடுத்தாள். தலைவலி மாத்திரை மாதிரி இருந்தது. பிரிஜைத் திறந்து இரண்டு கொக்கோ கோலா பாட்டில்களை எடுத்து டீப்பாயின் மீது வைத்தாள். பாட்டிலை உடைத்தாள். பாட்டில் மூடியைத் திறக்கிறப்போ என் கழுத்தைத் திருகுகிற மாதிரி இருந்தது. கண்ணாடி கிளாஸிலே ஊத்தி அதிலே இரண்டு இரண்டு மாத்திரைகளைப் போட்டுக் குடின்னு கட்டாயப்படுத்தினாள்.

''ஏண்டி, நிரஞ்சன்! எங்க வீட்டிலே நான் கப்பிலே ஊத்தி ரசம்கூடக் குடிக்க மாட்டேண்டி. நீ ஏதோ மாத்திரையைப் போட்டுக் குடிக்கச் சொல்லறே...''

நான் சொல்லி முடிக்கிறதுக்குள்ளே அவள் ஒரு கிளாஸைக் காலி பண்ணி விட்டாள்!

''அசடு! உன்னைப் போய்க் கூட்டி வந்தேனே... ஏதோ புதுசுன்னு உனக்கு கொக்கோகோலாவிலே போட்டுக்கொடுக்கிறேன். என் சுரேஷ் என்ன செய்வார் தெரியுமா? ஐஸ் கோல்ட் பீர்லே இதைப் போட்டு என்னை ஸ்டெடியா 'சியர்ஸ்' அடிப்பார் தெரியுமா?.. அந்த வேளையில் நான் பிளேயரில் போடற



தலைவலியா?

சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் விரைவில் குணமளிக்கிறது



"தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனாஸின் சாப்பிடுகிறேன்" என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது— திரு. பரமசிவம் போன்ற லட்சக்கணக்கானவர்கள் அனாஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

A—43

பாட்டு என்ன தெரியுமா? ஜிம் ரீவ்ஸின் 'இன் த மிஸ்ட் ஆஃப் மூன் லைட்'தான்.

அவள் என்னென்னமோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் பேசறது அவளுக்கே புரியலேன்னு எனக்குத் தோன்றியது. அவள் கொடுத்த டம்ளரை நான் தொடவே இல்லே. கோபத்திலே பார்த்தாள். என்ன நினைச்சாளோ தெரியவில்லே. எனக்கு ஊத்திக் கொடுத்த டம்ளரையும் காலி பண்ணினாள். திடீரென்று எழுந்தாள். பிளேயரில் ஏதோ ரிக்கார்டரைப் போட்டாள். எங்க அப்பா மேலே உள்ள கோவத்திலே எங்க அம்மா சமையல் கட்டிலே பாத்திரத்தை நணங்... நணங்குன்னுவைக்கிற மாதிரி மியூசிக்வந்தது.

''புத்தகம் தரேன்னு அழைச்சிண்டு வந்து ஏண்டி என்னைப் பழி வாங்கறே...?''

''நீ படிச்சு என்ன கிழிக்கப் போறே... படிக்கிறதை வாழ்க்கையிலே 'ஃபாலோ' பண்ணணும் என்று சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? 'மியூஸிக் இஸ் த ஃபுட் ஆஃப் லவ்'ன்னு ஷேக்ஸ்பியர் சொல்றதைப் படிக்க ஆசைப் படறே. ஆனா அதுபடி நீ நடக்கிறியா?''

சோபாவில் அவள் நீட்டி நிமிர்ந்து விட்டாள். நான் கிளம்பத் தயாரானேன். அங்கே விருந்து போனாப் போதும்னு ஆயிட்டது.

''ஏண்டி, நிரஞ்சன், நான் வர்றேண்டி... மணி ஆறாயிட்டது. விட்டிலே அம்மா நெருப்பைக் கட்டிண்டு இருப்பா.''

சொல்லிக் கொண்டே வெளியே போக யத்தனிக்கிறேன்.

''டீ மீனு! உன் ஏஜுக்கு வேண்டிய நாலாவது 'எல்' எது தெரியுமோ? 'லவ்'. அதைச் சொல்லிக்கொடுக்க சுரேஷை அனுப்பறேன்!''

திணறித்திணறி அவள் சொன்னாள். ''இதே போதும்டி அம்மா. அது வேறே வேண்டுமா!'' வந்துட்டேன்.... நிம்மதியா மூச்சு விட்டேன்.

வீட்டுக்குப் போறதுக்குள் மணி ஏழரை ஆயிடுத்து. அம்மாவும் அப்பாவும் மத்தியானம் சித்தி பொண்ணு விட்டிலே பிள்ளை வீட்டார் வந்திருக்கான்னு போனவா திரும்பல்லே. நல்லதாப் போச்சு... பாட்டி மட்டும் இருந்தாள். கண்ணாடியைத் துடைச்சிண்டே 'ஏண்டி லேட்'டுன்னா. ஸ்பெஷல் கிளாஸ்ன்னு சொன்னேன். டீன் ஏஜைப் பற்றிக் கேட்டதுமே பொய் சொல்ல வேண்டியிருக்கு!

''ஏண்டி மீனு! முகத்தைக் கழுவிண்டு வா... தீட்சிதர் எட்டு மணிக்கு மேலேதான் உபந்யாசம் செய்யறாராம். போயிட்டு வந்துடலாம்.''

கிணத்துலே ஜலம் இறைச்சு முகத்தை நன்னாகக் கழுவிண்டு வந்தேன். வீட்டைப் பூட்டிண்டு சாவியைப் பக்கத்து வீட்டுப் பங்கஜம் மாமியண்டை கொடுத்துட்டு உபன்யாசம் நடக்கிற இடத்தை நோக்கிப் போறப்போ... கொஞ்சம்கூடச் சங்கோசம் இல்லாமலே ஸ்கூட்டரிலே ஒரு ஜோடி போயிண்டு இருந்தது. அதைப் பார்த்த பாட்டி, ''ஏண்டி மீனு... லோகம் எப்படி இருக்கு பார்த்தியா''ன்னு கேட்டாள்.

''ரொம்பக் கெட்டுப் போச்சு, பாட்டி''ன்னேன்.

பாட்டி தொடர்ந்தாள்:

''கெட்டுப்போனதும் கொஞ்சம்; மாறிண்டு வர்றது அதிகம். அந்தக் காலத்திலே உங்க தாத்தா இரட்டை மாட்டு வண்டியிலே ஜல் ஜல்ன்னு வருவார். நான் எங்க ஊர் ஆலமரத்தடி பின்னால் நிப்பேன். ஏறிக்கோம்பார். வண்டியிலே ஏறினப்புறம் மெதுவா நகர்ந்து நகர்ந்து அவர் பக்கத்திலே போவேன். ரோடு மேடு பள்ளத்திலே வண்டி ஆடறபோது வேணுமுன்னே மேலே உரசுவார்.... நேக்கு வயசென்ன தெரியுமோ? பதினஞ்சு. அவருக்குப் பதினாறு... அந்தக் காலத்திலே மாட்டு வண்டி... இந்தக் காலத்திலே ஸ்கூட்டர்.''

பாட்டி இவ்வாறு சொல்லி முடிப்பதற்குள் உபன்யாச மண்டபம் வந்து விட்டது.

மறுநாள்.

காலேஜுக்குள்ளே நுழையறதுக்கு முன்னாடியே ஸ்கூட்டரிலே வந்து சர்ரென பிரேக் போட்டு நின்னான் நிரஞ்சன்.

''ஏண்டி, மீனு... நேற்று எப்போ எங்க விட்டிலே இருந்து கிளம்பினே? டீன் ஏஜைப் பத்தி இப்போ உனக்கு ஏதாச்சும் தெரிஞ்சுதா?''

''ஒண்ணும் தெரியலே.''

''இந்த மாடர்ன் டைமில் டீன் ஏஜ்ல் இருக்கிற என்னைப் பார்க்கறப்போ உனக்கு ஏதாவது தோணுதா?''

''தோணுது...''

''என்ன தோணுது?''

''என் பாட்டியை [illegible] பெண் [illegible] பார்த்தாள் [illegible] இருந்தா[illegible] உன்னைப் பார்த்ததும் தோணித்து!''

இறையருள் கூடி நிறைவேறும் திருப்பணிகள்

பாரதம் கண்ட ரிஷி புங்கவர்களிடை தனிமையானதோர் இடம் கொண்டவர் ஸ்ரீ யாக்ஞவல்கியர். இந்த மகா புருஷருக்குத் தென்னிந்தியாவில் உள்ள ஒரே ஆலயம் எனக் கருதப்படுவது, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சொர்ணவூரில் உள்ள ஸ்ரீ யாக்ஞவல்கிய ஸ்ரீமடம். இந்த மடாலயத்துக்கு வருகிற செப்டம்பர் 9-ந் தேதி திருப்பணி நிறைவேறிக் கும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது. ஸ்ரீ காமகோடி பெரியவாள் ஆக்ஞைப்படி நடக்கும் இவ்விழாவில் பக்தர்கள் கலந்துகொள்ள வேணும். திரவியம் அனுப்ப வேண்டிய முகவரி: காரியதரிசி, ஸ்ரீ யாக்ஞவல்கியர் ஸ்ரீமடம், சொர்ணவூர் (அஞ்சல்), மேல்பட்டாம்பாக்கம் வழி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

* * *

நாமகரத் தடாகத்தில் சுயம்புமூர்த்தியாகத் தோன்றிய அன்னை முண்டகக்கண்ணி அம்மன் திருமயிலையில் கோயில் கொண்டிருப்பது பிரசித்தி. சக்திவாய்ந்த இந்த அம்மனின் ஆலயத் திருப்பணி வேலைகள் நிறைவுற்று செப்டம்பர் 9ந் தேதி மகா கும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது. நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம்: பொருளாளர், திருப்பணிக் குழு, அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் ஆலயம், சென்னை-600004.

எங்கள் வீட்டு பிரசிடெண்ட்

அன்பு வழியில் ஓர் ஆசிரியர்

எங்கள் வீட்டுப் பிரசிடெண்ட் கணிதப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். என் கணவர்!

அவர் கணக்கை மாணவர்களுக்குப் போதிப்பதோடு நிறுத்திக் கொள்ளமாட்டார். வீட்டிலும் அதை அமுல் படுத்துவார். ஆம்! அன்றாட வீட்டுச் செலவுக் கணக்கு கஷ்டப் பைசா விடாமல் பார்த்தால்தான் அவருக்குத் தூக்கம் வரும். "இது என்ன சித்திர புத்திரன் கணக்கு?" என்று அந்த நாட்களில் என் மாமியார் அங்கலாய்த்துக் கொண்டது எனக்கு இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது.

ஆசிரியராகப் பணி புரிந்த ஆரம்ப காலத்தில் இவர் தலைப்பாகைதான் வைத்துக் கொள்வாராம். அப்புறம் மேல்நாட்டுப் பாணியில் 'ஹாட்' வைத்துக் கொள்ள ஆரம்பித்தார். இப்பொழுதெல்லாம் எதற்கெடுத்தாலும் 'அலர்ஜி' என்கிறார்களே, அந்த வார்த்தை புழக்கத்தில் இல்லாத அந்த நாட்களிலேயே இவருக்கு 'ஹாட்' ஒத்துக்கொள்ளவில்லை. 'ஹாட்' வைத்துக் கொண்டால் ஜலதோஷம், தும்மல் எல்லாம் வந்து விடும். அதனால் 'ஹாட்'டையும் விட்டு விட்டார். தலைப்பாகை, ஹாட் இரண்டும் போச்சு!

நான் பிறந்த ஊர் கும்பகோணத்தை அடுத்த கதிராமங்கலம். அங்கேதான் எங்களுடைய திருமணத்தை என் வீட்டில் நிச்சயம் செய்திருந்தார்கள். ஆனால் இவருக்குக் கிராமாந்திரக் கல்யாணம் பிடிக்காது என்று பிடிவாதம் பண்ணிக் கொண்டார். அதற்காகக் கல்யாணத்தை எங்கள் வீட்டார் கும்பகோணத்தில், ஜாம் ஜாம் என்று நான்கு நாட்கள் அமர்க்களமாக நடத்தினார்கள். நல்லவேளை! கும்பகோணத்திலும் எங்களுக்கு ஒரு வீடு இருந்தது!

மனிதர் ஒரு விஷயத்தில் ரொம்ப ரொம்ப அவசரக்காரர். அதாவது காப்பி சமாசாரத்தில். 'காப்பி' என்று அவர் கேட்டதும் டம்ளரில் காப்பி அவர் முன் வந்து நின்றாக வேண்டும். போதாக் குறைக்கு ஒவ்வொரு தடவையும் டிகாக்ஷன் 'ஃப்ரெஷ்ஷாக' இருக்க வேண்டும். இன்றைய விலைவாசியிலும் இந்த ஓர் அம்சத்தை எப்படியோ சமாளிக்கிறோம்.

சாப்பாட்டு விஷயத்திலும் அவசரக்காரர்தான். ரசம் ஊற்றிவிட்டு நிமிரும்போதே, 'மோருக்குச் சாதம்கொண்டு வா' என்பார்!

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் கிட்டத்தட்ட மூப்பத்தி ஏழு வருஷங்கள் கணிதத் துறையில் பணியாற்றி வந்திருக்கிறார். ஓய்வு பெற்ற பிறகுகூடச் சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் சில வருஷங்கள் கௌரவப் பேராசிரியராக இருந்தார்.

சனிக்கிழமைகளில் பல கணித வகுப்பு மாணவர்களையும் எங்கள் வீட்டுக்கு அழைத்துவந்து டிபன், காப்பி கொடுத்து அனுப்புவார். எப்போதும் இவரைச் சில மாணவர்கள் சூழ்ந்து கொண்டுதான் இருப்பார்கள்.



இந்த அன்பு வழியை இவர் தம் ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறார் என்று தான் நான் நினைக்கிறேன்.

இவருக்குக் கிறிஸ்துவக் கல்லூரியில் கணித பாடம் போதித்த கிப்பின் என்ற ஐரோப்பியர் 1961ம் ஆண்டில் மதுரைக்கு ஒரு கடிதம் எழுதினார்: 'நான் ஓய்வு பெற்றுக் கொண்டு தாய்நாடு திரும்பப் போகிறேன். என்னுடைய 'வான்கார்டு' மோட்டார் வண்டியை உனக்குக் கொடுக்க வேண்டும் என்ற ஆசை. ஆறாயிரம் ரூபாய் கொடுத்து விட்டு எடுத்துக் கொள்.'

இவரிடம் அப்போது அத்தனை ரூபாய் தயாராக இல்லை. பேராசிரியருடைய விருப்பத்தைத் தட்டவும் மனம் இடம் கொடுக்கவில்லை. நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் புரட்டிக் கொடுத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் அந்தத் தொகையைக் குறிப்பிட்டுப் பதில் எழுதினார்.

கிப்பினிடமிருந்து உடனே கடிதம் வந்தது: "ரொம்ப சரி!... ஒரே ஒரு நிபந்தனை. நீ இங்கே வந்து என்னைத் துறைமுகத்தில் கொண்டு போய் விட்டு விட்டு அப்படியே காரை எடுத்துக் கொண்டு போகலாம்!"

இவர் பட்டணத்துக்கு வந்தார். கிப்பின் அவர்களுடன் காரில் கிளம்பினார். அப்போது என் மூத்த பையனுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்து இரண்டே மாதங்கள் தான் ஆகியிருந்தன. கிப்பின் போகும் வழியில் எங்கள் சம்பந்தி வீட்டில் இறங்கி அந்தக் குழந்தையைப் பார்க்க ஆசைப்பட்டார்.

கிப்பின் அந்தக் குழந்தையின் பிஞ்சுக் கையைப் பிடித்துக்கொண்டு, தமக்குச் சமமான பெரிய மனிதருடன் பேசும் தோரணையில் "மின்

னப் பையா! உன் தாத்தா கிறிஸ்துவக் கல்லூரியில் படித்தார். உன் அப்பாவும் அங்கேதான் படித்தார். நீயும் அங்கேதான் படிக்க வேண்டும்! நினைவு வைத்துக் கொள்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாராம்! இந்தக் காட்சியை என் கணவர் அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு மகிழ்வார்! என் பெரிய பையனும் கிறிஸ்துவக் கல்லூரியில் படித்த பிறகுதான் இன்ஜினீயரானான்.

அந்தக் கிப்பின் துரை கடைசியில் நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய்களைக் கூடத் தமக்கு வாங்கிக் கொள்ளவில்லை. இரண்டாயிரத்து ஐந்நூறை எடுத்துக் கொண்டார். மீதியில் ஆயிரத்தை 'மாரல் ரீ ஆர்மமென்ட்' ஸ்தாபனத்துக்கும், மற்ற ஆயிரத்தை அவரிடம் சமையல்காரராக இருந்தவருக்கும் கொடுக்கச் சொல்லி விட்டார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் மாதிரி இப்போது சென்னையில் எங்களுக்கு நங்கநல்லூர் ராஜராஜேசுவரி' அம்மன் கோவில். அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் நாங்கள் இருவரும் போய் வருவோம். அந்த அம்மன் அருளினால்தான் என் கடைசிப் பையன் ஒரு ரயில் விபத்திலிருந்து தப்பினான்.

மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் பெரம்பூர் ஸ்டேஷனில் கொச்சி மெயிலை மங்களூர் மெயில் மோதித் தள்ளியதே — அந்தக் கொச்சி மெயிலில் என் கடைசிப் பையன் கோயம்புத்தூருக்குப் போய்க் கொண்டிருந்தான். அங்கே இஞ்சினீயரிங் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். விபத்துக்குள்ளான பெட்டியில்தான் அவனும் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

அவன் ரயிலுக்குக் கிளம்பும்பொழுது 'கையிலேயே வைத்துக்கொள்' என்று ஒரு குங்குமப் பொட்டலத்தைக் கொடுத்து அனுப்பினேம். இலேசான அதிர்ச்சியுடன் அவனைக் காப்பாற்றி விட்டாள் ராஜராஜேசுவரி.

எங்கள் வீட்டுப் பிரசிடெண்ட் இப்போதும் ரொம்ப 'ஆக்டிவ்'. அமெரிக்கன் கல்லூரிக்குக் கௌரவ அபிவிருத்தி அதிகாரி. கல்லூரியின் பழைய மாணவர்கள் எல்லோரும் எங்கெங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து ஒருங்கிணைப்பதில் இவருக்கு ஆர்வம்! ஆனந்தம்!


ஆரம்ப நாட்களில் கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்கள் எழுதுவது தமது லட்சியத்துக்கு மாறுபட்டது என்று மறுத்து விட்டார். அப்புறம் நண்பர்கள் வற்புறுத்தியதன் பேரிலும் குடும்பத் தேவைக்காகவும் பி.எஸ்ஸி. வகுப்புக்கு ஒரு கணிதப் பாடப் புத்தகம் எழுதினார். அது இன்றைக்கும் கற்பக விருட்சமாக விளங்குகிறது.

பேட்டி:
கோமதி சுவாமிநாதன்



பிரஸிடெண்ட் :
பேராசிரியர் கு. நடராஜன், எம். ஏ.
பேட்டியளித்தவர் :
பேராசிரியரின் மனைவி
திருமதி கோகிலம்

வற்றாத நதியும் அணையாத உலையும்



வருஷம் முழுவதும் வற்றாத நீருடைய அமைதியான பத்ரை நதியின் கரையில்தான் இரும்பு நகரமான பத்ராவதி எழுந்துள்ளது. வடமொழியில் பத்ரா என்றால் சாந்தமான என்று பொருள். அமைதிக்கும் சாந்தத்துக்கும் அழகுக்கும் புகழ் பெற்ற பத்ரை இன்று நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த நாளெல்லாம் கனன்று கொண்டே இருக்கும், உலைக் களங்களுடன் கூடிய மிகப் பெரிய இரும்பு எஃகுத் தொழிற்சாலையை உடையதாய் இருக்கிறது.


1918ம் ஆண்டில் மைசூர் இரும்புத் தொழிற்சாலை என்ற பெயரில் மிகச் சிறிய முறையில் தொடங்கப்பட்ட இது, தேனிரும்பை உற்பத்தி செய்தது.

1929ல் தொழிற்சாலை விரிவடைந்தது. எஃகுக் கர்டர்கள், கம்பிகள், உருளைகள் தயாரிக்கலாயிற்று. 1936–38ல் சிமெண்ட் உற்பத்தியையும் மேற்கொண்டது. தொழிற்சாலையின் பெயரும் 'மைசூர் இரும்பு, எஃகுத் தொழிற்சாலை' என்று மாற்றப்பட்டது. படிப்படியாகப் பல முன்னேற்றங்களுக்குப் பிறகு 1962ல் விசேஷ எஃகு மற்றும் உலோகக் கலப்பு எஃகு தயாரிக்கப்பட்டது. ஆஸ்திரிய நாட்டின் பிரபல இரும்புத் தயாரிப்பாளர்களான போஹ்லர் (Bohler) நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து ஆண்டுக்கு 77,000 டன்கள் உற்பத்தி செய்வதில் வெற்றி கண்டனர். விசேஷக் கலவைகளுடன் கூடிய எஃகை உற்பத்தி செய்வதில் மிகப் பிரசித்தி பெற்றுவிட்டது இந்தத் தொழிலகம். சுமார் 700 வகையான விசேஷக் கலவைகளில் எஃகு தயாராகிறது இங்கே. இன்றைய உற்பத்தித் திறன் தேன் இரும்பில் ஆண்டுக்கு 2,17,000 டன்களாகும்.

பல்வேறு வகையான இரும்புகளையும் அதன் கூட்டுப் பொருள்களையும் தயாரிக்கப் பத்ராவதியில் இயற்கை அப்படி விசேஷமாக என்ன வசதியை அளித்திருக்கிறது? பத்ரை நதியின் இரு கரையோரப் பகுதிகளிலும் எஃகு, இரும்புத் தொழிலுக்கு வேண்டிய முக்கியமான கச்சாப் பொருள்கள் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன.

ஹெமடைட் என்ற இரும்புத் தாதுதான் இரும்புத் தொழிற்சாலைகளுக்கு முக்கியமான மூலப் பொருள். இது பத்ராவதியிலிருந்து 36 மைலில் உள்ள பாபாபுகான் என்ற மலைப் பிரதேசத்தில் உள்ள கெம்மன் குண்டி என்ற இடத்தில் ஏராளமாகக் கிடைக்கிறது. இம்மலை ஒரு காலத்தில் மன்னர்களின் கோடை வாசஸ்தலமாக விளங்கிய இடம். பதினறு மைல் தொலைவில் உள்ள படிகுண்டு என்னுமிடத்தில் சுண்ணாம்புக் கல் படிவங்களும் 25 மைலில் உள்ள சங்கர் குட்டாவில் டோலமைட்டும் கிடைக்கின்றன. சிமிண்ட் உற்பத்திக்கும் இங்குள்ள சுண்ணாம்புக் கற்கள் போதுமானவையாக இருப்பதால் இரும்புத் தொழிற்சாலையிலேயே ஒரு பகுதியாக சிமிண்டும் தயாராகி, 'சாமுண்டி சிமிண்ட்' என்ற பெயரில் விற்பனைக்குக் கிடைக்கிறது.

சுற்று வட்டாரங்களில் உள்ள ஏராளமான காடுகள் அடுப்புக் கரிப் பிரச்னையைத் தீர்த்து 'சார்க்கோல் தேன் இரும்பு' உற்பத்திக்கு வழி வகுக்கிறது. மின்சாரமோ இப்பகுதியில்



ரொம்ப ரொம்ப மலிவு. அண்டை மாநிலங்களுக்கும் மின்சாரம் வழங்கும் வள்ளல்களாயிற்றே இவர்கள். ஜோக் நீர்வீழ்ச்சி, ஷராவதி அணை எல்லாம் இங்குதானே இருக்கின்றன.


'கோக்' (Coke) என்ற நிலக்கரி மட்டும் தான் மேற்கு வங்கத்திலிருந்து வரவேண்டும். மற்ற கச்சாப் பொருள்கள் எல்லாமே இப்பகுதிகளில் இயற்கையாகவே ஏராளமாகக் கிடைக்கின்றன.


உழைப்பு, திட்டமிடல், செயல் திறன் இவைகளின் ஒட்டுமொத்த வெற்றியாகப் பத்ராவதி இரும்பு எஃகுத் தொழிற்சாலை தனது உற்பத்திப் பொருள்களை ஆண்டுக்கு ஆண்டு கூட்டிக் கொண்டே போகிறது. தரமான பொருள்களைத் தயாரிப்பதால் வெளிநாடுகளுக்கான ஏற்றுமதியின் அளவும் உயர்ந்து அந்நியச் செலாவணியையும் அள்ளிக் கொட்டுகிறது.

1972ம் ஆண்டோடு அந்நிய தொழில் நுட்ப வல்லுநர்களையும் கப்பலேற்றி அனுப்பியாகி விட்டது. இன்று அந்நிய நாட்டு யந்திர சாதனங்கள் மட்டுமே இத்தொழிற்சாலையின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. ரயில்வேக்கள், சிமிண்ட் தொழிற்சாலை, சர்க்கரைத் தொழிற்சாலை, பாலங்களை அமைத்தல் போன்ற பல துறைகளுக்கும் பயன்படும் பொருள்களையும் நிறுத்தலளவைக்குப் பயன்படும் நிறை கற்களையும் — ஒரு கிலோ முதல் 6000 கிலோ வரை — இங்கு தயாரிக்கிறார்கள். கட்டிடங்கள் உருவாகப் பயன்படும் பொருள்கள் அத்தனையும், தொழிற்சாலைச் சாதனங்கள் பலவும் இங்கு உற்பத்தியாகின்றன. உருக்கு உலோகக் குழிக்குப் பயன்படும் விசேஷக் கற்களை உருவாக்கும் பட்டறையும் இங்கு உண்டு. விசேஷ எஃகுத் தயாரிப்புக்குப் பிராணவாயு ஏராளமாகத் தேவையாயிற்றே. இதையும் பத்ராவதி தானே தயாரித்துக்கொள்ளுகிறது. எஃகு இரும்புத் தொழிற்சாலை ஒன்றில் அதற்குத் தேவையான அத்தனை வசதிகளும் ஒரே கூரையின் கீழ் இப்படி அமைவது அபூர்வம்.

பதினோராயிரம் தொழிலாளர்களுக்கு வாழ்வளித்து வருகிறது இம்மாபெரும் ஸ்தாபனம். அவர்கள் நல்வாழ்வுக்காகப் பள்ளிகள் வைத்திய வசதிகள் போன்றவற்றோடு அவர்களில் முப்பது சத விகிதத்தினருக்குக் குடியிருப்பு வசதியையும் செய்து கொடுத்திருக்கிறது. இதை மேலும் விஸ்தரிக்கத் திட்டமும் உள்ளதாம்.

தொழிற்சாலையை இன்னும் விஸ்தரித்து உற்பத்தியைப் பலமடங்கு பெருக்க விரிவாகத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறார்கள். இதற்குப் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்துக்கு உதவும் திட்டப்படி ஜனநாயக மேற்கு ஜெர்மனி 26 கோடி ரூபாய்களைக் கடனாக வழங்கப் போகிறது. இப்போதே இத்தொழிற்சாலையில் 'டெமாக்' என்ற ஜெர்மன் யந்திரங்கள்தான் நிறுவப்பட்டுள்ளன. விசேஷ உலோகக் கலப்பு எஃகு உற்பத்தியை அதிகமாக்கவும், மின்சார உலைக்களம் மூலம் நாள் ஒன்றுக்கு 200 டன் தேன் இரும்பு தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ள விஸ்தரிப்புக்குத்தான் இந்தக் கடனுதவி.





நாட்டில் சுபிட்சம் நிலவ பத்ராவதி எஃகு இரும்புத்தொழிற்சாலையின் புகைக் கூண்டுகள் எப்போதும் புகைந்து கொண்டே இருக்க வேண்டும்; லாபகரமாகவும் இயங்க வேண்டும்.

— கௌசிகன்

யாருக்கு வேண்டும் தங்கம்!

தர.ஜா.



இரவு மணி இரண்டு.

'காலைத் தபால்' தினசரியின் உதவி ஆசிரியர் காலகண்டன் கொட்டாவிகளை உதிர்த்தபடியே மறுநாள் காலைப் பத்திரிகைக்கான ஒரு செய்தியின் 'புரூஃபை'ப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது டெலிபிரிண்டர் அறையிலிருந்து ஒரு பையன் 'ஃப்ளாஷ் மிக மிக அவசரம்' என்ற தலைப்புக் கொண்ட ஒரு தாளை எடுத்து வந்து காலகண்டனின் மேஜையின் மீது வைத்துவிட்டு அப்பால் போனான்.

'இந்த வேளைக்கு டெலிபிரிண்டரில் அவசரச் செய்தி வந்திருக்கிறதே! எந்த ஊரில் எந்தப் பிரமுகர் அல்லது அரசியல்வாதி மண்டையைப் போட்டாரோ தெரியவில்லையே! செத்துத் தொலைக்கிற புண்ணியவான் காலா காலத்தில் போய்ச் சேர்ந்தால் என்ன? இப்படி அர்த்த ராத்திரியில் வாயைப் பிளந்து நம் கழுத்தை அறுக்கிறானே! இப்போது இந்தச் செய்தியை அவசரமாக மொழி பெயர்த்துச் சேர்த்தாக வேண்டுமே!' என்று அலுத்துக் கொண்டே அந்தத் தாளை எடுத்து, வந்திருந்த செய்தியைப் படித்துப் பார்த்தார் காலகண்டன்.

படித்த விநாடியே பலத்த அதிர்ச்சிக்கானானார் அவர். தம்முடைய கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. ஒரு முறைக்கு மூன்று முறைகளாகச் செய்தியைப் படித்துவிட்டு, மேஜையின் மீதிருந்த டெலிபோனை எடுத்து, அந்தச் செய்தியை அனுப்பியிருந்த செய்தி ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டார்.

''ஏன் சார், இப்படி ஒரு நியூஸ் வந்திருக்கிறதே! இது உண்மைதானா? அல்லது ஏதாவது இயந்திரக் கோளாறினால் ஏற்பட்ட தவறா?'' என்று கேட்டார்.

''அந்தச் செய்தி உண்மை, உண்மை, முக்காலும் உண்மை! நாங்கள் 'செக்—அப்' பண்ணிக் கொண்டபின்தான் எல்லாப் பத்திரிகைகளுக்கும் நியூஸ் கொடுத்தோம்!'' என்றார் தகவல் ஸ்தாபன ஆசாமி.

''அப்படியானால் சரி!'' என்று சொல்லிப் போனை வைத்துவிட்டு, அவசரம் அவசரமாக அந்தச் செய்தியை மொழிபெயர்த்து, அதை எடுத்துக் கொண்டு அச்சுக் கோக்கும் பகுதிக்கு விரைந்தார் காலகண்டன். மறுநாள் காலைப் பத்திரிகையில் எட்டுப் பத்தித் தலைப்புடன் இந்தச் செய்தி வெளியாக வேண்டுமே!



அது என்ன செய்தி ?

"தங்கம் திடுதிடு விலை குறைவு!
சவரன் விலை மூன்று ரூபாய்!
உலக தங்க மார்க்கெட்டில் புதிய நெருக்கடி!"

மறுநாள் இந்தச் செய்தியைப் பத்திரிகைகளில் படித்த அத்தனை பேரும் — தங்க நகை வியாபாரிகள் நீங்கலாக — மகிழ்ச்சிகரமான அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். நாளுக்கு நாள் மளமளவென்று ஏறிக் கொண்டே வந்த தங்கத்தின் விலை இப்படி ஒரேயடியாகச் சரிவதென்றால் சந்தோஷமாக இருக்காதா, என்ன? எங்கும், யாரும் இதைப் பற்றியே பேசினார்கள்.

"அது என்னமாக ஐயா அப்படி விலை சரிந்தது ஒரே நாளில் ! ஆச்சரியமாக இருக்கிறதே ! நம் வாழ்நாளிலேயே இதுதான் ஐயா மகத்தான அதிசயம்!" என்றார் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த ஒருவர், பக்கத்தில் இருந்தவரிடம்.

"பூ! இது ஓர் அதிசயமா என்ன? நம் ஊரிலே இதைத் தூக்கிச் சாப்பிடும்படியான அதிசயம் ஒன்று நடந்திருக்கிறதே!"

"என்னது! என்னது! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?"

"இந்தப் பல்லவன் போக்குவரத்து டிரைவர்களும், கண்டக்டர்களும் பிரயாணிகளை மதித்து நடந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்களே ! இதைவிட அதிசயமா நீர் சொல்வது ?"

சென்னை பஸ் பிரயாணி என்னவோ இப்படி இலேசாகச் சொல்லிவிட்டாரே தவிர, தங்கத்தின் விலை குறைவினால் ஏற்பட்ட விளைவுகள் வேடிக்கையாகவும், சில சமயங்களில் வேதனையாகவும்கூட இருந்தன.

தங்கத்தின் விலை சரிந்துவிட்டது என்ற செய்தியைப் படித்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்கள், கல்யாண வயதுப் பெண்களின் பெற்றோர்கள்தான். "இருபது சவரனுக்கு என்ன, இருநூறு சவரனுக்கு வேண்டுமானாலும் மாப்பிள்ளை வீட்டார் நகை கேட்கட்டுமே ! செய்து போட்டு விடுவோம்!" என்று அவர்கள் உற்சாகமாக இருந்தார்கள்.


பிள்ளைகளைப் பெற்றவர்களோ, யாருக்கு வேண்டும் தங்கம் ! குப்பை....! அதற்குப் பதிலாக வேறு எதையாவதுதான் கேட்க வேண்டும் ! என்ன கேட்போம், பெண் வீட்டாரிடம் ? என்று மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டார்கள். இதன் விளைவாகத் தமிழகமெங்கும் 'பிள்ளை வீட்டார் சங்கம்' என்ற அமைப்பு உடனடியாகத் தொடங்கப்பட்டது. தங்கத்துக்குப் பதிலாகக் கேட்க வேண்டிய பொருள் என்னவாக இருக்க வேண்டுமென்று மாவட்ட சங்கங்களிலும், மாநில சங்க உயர் மட்டத்திலும் அலசப்பட்டது. இறுதியாக, "வனஸ்பதியைக் கேட்போம். அதுதான் இப்போது எக்கச்சக்கமாக நிமிஷத்துக்கு நிமிஷம் — விலை ஏறிக் கொண்டே வருகிறது!" என்று முடிவெடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பெண் பார்க்க வரும்போதே பிள்ளை வீட்டார், "இருபது கிலோ வனஸ்பதி கையிலே கொடுக்க வேண்டும். சம்மதமானால் சொல்லுங்கள்!" என்று நிபந்தனையைப் போட ஆரம்பித்தார்கள்.

தங்க நகைக் கடைகளில் நிறைய நகைகளும், தங்கமும் மக்கள் சிந்துவாரின்றித் தேங்கிப் போய்விட்டதால், கடைக்காரர்கள் அவற்றைப் போட்டி போட்டுக் கொண்டு விற்பனை செய்யத் தொடங்கினார்கள். "முந்நூறு சவரன் வாங்கினால் ஒரு பிளாஸ்டிக் பக்கெட் இனாம்!" என்று வியாபாரிகள் எப்போதும் போல் ஜனங்களுக்கு ஆசை காட்டத் தொடங்கினார்கள்.

பிளாஸ்டிக், பாலிதீன், இதர உலோகங்கள் இவற்றைக் காட்டிலும் தங்கம் விலை குறைந்ததாகி விட்டதாலும், அபரிமிதமாகக் கிடைத்ததாலும், தங்கத்தினால் செய்யப்பட்ட பல பொருள்கள் மலிவாக, ஏராளமாகத் தயாரிக்கப்பட்டு, பிளாட்பாரங்களில் கொட்டிக் கொட்டி விற்கப்பட்டன.

எல்லா ஹோட்டல்களிலும் பிளேட்டுகள், டம்ளர்கள் அனைத்தும் தங்கத்தினாலேயே செய்யப்பட்டு இடம் பெற்றன. சாதாரண ஹோட்டல்களிலும் தங்கப் பாத்திரங்கள் புழக்கத்துக்கு வந்துவிட்டதால், பெரிய பெரிய ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அலுமினியத் தட்டுக்கள் முதலியவை உபயோகத்துக்கு வந்தன. அலுமினியத்தின் விலைதான் தங்கத்தைக் காட்டிலும் அதிகமாயிற்றே !

பெண்மணிகளுக்குத் தங்கத்தின்மீது இருந்த மோகம் அடியோடு போய்விட்டது. தங்க நகைகள் என்றாலே அவர்கள் வெறுக்கத்



நடந்தே எழுப்பலாம் இசை



ஜப்பானில் இப்பொழுது தரையில் பதிக்கப்படும் கற்களுக்கு அடியில் இசைக் கருவியை இணைத்து விடுகிறார்கள். ஒவ்வொரு கல்லை மிதித்து நடக்கும் போதும் வெவ்வேறு விதமான மென்மையான இசை கேட்கிறது.. லயன் - பாலி

தொடங்கி விட்டார்கள். அதற்குப் பதிலாக இரும்பிலும், உருக்கிலும், பித்தளையிலும், செம்பிலும் செய்யப்பட்ட நகைகளுக்கு 'ஆர்டர்' கொடுக்கத் தொடங்கினார்கள்! ''உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு என்ன சுகத்தைக் கண்டேன்? இரும்பிலே ஓர் இரட்டை வடம் சங்கிலி உண்டா? இல்லை, செம்புத் தோட்டுக்கு வகை உண்டா? கேவலம் பித்தளை வளைதான் உண்டா?..... என்னத்தைக் கண்டேன், சொல்லுங்கள்!'' என்று அப்போதும் ஏதோ ஒருவிதத்தில் கணவன்மார்களை நச்சரிக்கத் தொடங்கினார்கள் பெண்மணிகள்.

தங்கத்தில் பந்து, மட்டை, ஊதல், கிலுகிலுப்பை என்று விளையாட்டுச் சாமான்களும் வந்து குவிந்துவிட்டன. ''எங்க வீட்டிலே மரக் குதிரை இருக்கே....? உங்கிட்டே இல்லையே?'' என்று பணக்கார வீட்டுக் குழந்தைகள், தங்கப் பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடும் ஏழைக் குழந்தைகளைப் பார்த்துக் கேட்கத் தொடங்கின.

தங்கத்தின் விலை அதல பாதாளத்தில் விழுந்துவிட்டதால், தங்கக் கடத்தலில் தம்பிடிக்கு லாயக்கில்லை என்று உணர்ந்து, வழக்கமாகத் தங்கம் கடத்துபவர்கள் அதற்கு முழுக்குப் போட்டார்கள். சிலர் மனம் தளராமல் இரும்பு, எவர்சில்வர், செம்புக் கடத்தலில் முழுமூச்சுடன் இறங்கினார்கள். கோதுமைக்கும், மைதாவுக்கும் 'ததிங்கிணதோம்' போடும் பம்பாய் போன்ற வட இந்திய நகரங்களில் கள்ளக் கடத்தல்காரர்கள் தங்க பிஸ்கெட்டுக்களுக்குப் பதில், சாதா பிஸ்கெட்டுக்களைக் கடத்தி வந்து, கள்ள மார்க்கெட்டில் விற்கத் தொடங்கினார்கள்.

வாலிப — வயோதிக — அன்பர்களுக்கென்றே மருந்து தயாரித்து விற்கும் விற்பன்னர்கள் தங்க பஸ்பத்துக்குப் பதிலாக ''இரும்பு பஸ்பம்'', ''செம்பு சிந்தூரம்'', ''எவர்சில்வர் சூரணம்'', ''பிளீனி லேகியம்'' போன்ற புதிய தயாரிப்புக்களைப் படைத்து, அவற்றின் பெருமைகளைப் பக்கம் பக்கமாகப் பறைசாற்றத் தொடங்கினார்கள்.

மக்களின் பேச்சு வழக்கிலும் பலவிதமான மாறுதல்கள் நிகழ்ந்தன. ''அவர் குணம் தங்கக் கம்பி'', ''அவன் பத்தரை மாற்றுத் தங்கம்'' போன்ற சொற்றொடர்களெல்லாம் மறைந்து போய், ''அவரைப் போல உண்டா? குணத்திலே இரும்பு!'' என்றும், ''இருபது சதவிகித சுத்தமான செம்பு'', ''எடைக்கு எடை அவனுக்கு அலுமினியம் கொடுக்கலாம்!'' என்ற புதுப் பிரயோகங்கள் தொடங்கின. காதலர்கள் தங்கள் காதலிகளையும், பெற்றோர்கள் தங்கள் செல்லக் குழந்தைகளையும், ''என் தங்கம்!'' என்று அழைப்பதை நிறுத்திவிட்டு, ''என் எவர்சில்வரே!'', ''என் பித்தளையே!'' ''என் பிளீனியே!'' என்று ஆசையுடன் அழைக்கத் தொடங்கினார்கள்.

''தங்கத் தம்பி'', ''பொன் மாளிகை'' என்றெல்லாம் தமிழ்ப் படங்களுக்குப் பெயர் வைத்திருந்தவர்கள் உடனடியாக அவற்றை, ''இரும்புத் தம்பி'' ''அலுமினிய மாளிகை'' என்று மாற்றி வைத்தார்கள். இவர்கள் இப்படிச் செய்யும்போது அரசாங்கம் மட்டும் சும்மா இருக்குமா? ''சிறந்த படங்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த தங்கப் பதக்கத்துக்குப் பதிலாக இனி பித்தளைப் பதக்கம் வழங்கப்படும்'' என்று அறிவிப்புச் செய்தது.

தங்கம் மலிந்து போய்விட்டதால், வியாபாரம் செய்ய இயலாமல், தங்க நகை வியாபாரிகள் கடைகளை இழுத்து மூடலானார்கள். ''அரசாங்கம் தங்க வியாபாரத்தை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். வியாபாரிகளுக்கு நியாயமான விலை கிடைக்கும்படி செய்ய வேண்டும்'' என்று வியாபாரிகள் கூட்டம் கூடித் தீர்மானம் போட்டார்கள். அரசாங்கமும் தங்க வியாபாரிகளின் குறைகளைக் கண்டறிவதற்காகக் கமிஷன் ஒன்றை நியமித்தது. 1080 பக்க அறிக்கை ஒன்றை அந்தக் கமிஷன் வெளியிடுவதற்குள் தங்க வியாபாரிகள் மொத்தப் பேரும் ஓட்டாண்டியாகித் தெருவில் நின்றார்கள்.

தங்கம் மதிப்பு இழந்து, செல்வாக்கு இழந்து, அலட்சியம் செய்யப்பட்டு, தெருவில் புழுதியில் புரண்டது. மக்கள் அதை லட்சியம் செய்யவே இல்லை. பெரிய பெரிய அறிஞர்களையும், ஞானிகளையும், தலைவர்களையும் அவர்களது அறிவுரைகளையும் மறந்துவிட்டு முன்பு தங்கத்தைத் தேடித் தலைதெறிக்க ஓடியதைப் போலவே, மனிதர்கள் இப்போது தங்கத்தையும் மறந்துவிட்டு, வேறு எதையோ நோக்கி ஓடிக் கொண்டிருந்தார்கள்.......

அப்புறம்தான் திடீரென்று ஒரு நாள்....

''என்ன ஆயிற்று?'' என்று கேட்கிறீர்களா?

இருங்கள், வருகிறேன்.

அவசரமாகக் கொஞ்சம் வெளியே போக வேண்டுமாம். என் மனைவி அழைக்கிறாள்.

வேறெங்கும் இல்லை. நகைக் கடைக்குத்தான். தங்கத்தின் விலை மேலும் ஏறுவதற்குள் ஒரே ஒரு ஜோடி வளையலாவது வாங்கியாக வேண்டுமாம்! பாங்கில் உள்ள பணத்தைத் துடைத்து எடுத்துக்கொண்டு போதாக் குறைக்குக் கடனும் வாங்கிக் கொண்டு கிளம்புகிறேன்.

குட் பை!

மனம் திருந்தினேன்

கஜபதிக்கு அன்று வெகு உற்சாகம். தன் நண்பர்கள் சிலரை அழைத்துக் கொண்டு மிடுக்கு நடை போட்டவாறே முனியப்பா 'மிலிடரி' ஹோட்டலுக்குள் நுழைந்தான். ஒரு சின்னத் தனியறையில் உள்ள மேஜையை நாடிச் சென்றான். அவர்கள் அமர்ந்ததும் சர்வர் பையன் அருகில் வந்து, 'என்ன கொண்டு வரட்டும்?' என்று கேட்டுவிட்டு அன்றையப் பிரத்தியேகத் தயாரிப்புக்களைப் பாடம் ஒப்புவித்துவிட்டு ஓரமாக நின்றான்.

''முதலில் இரண்டு சோடா கொண்டு வா!'' என்று 'ஆர்டர்' கொடுத்த கஜபதி தன் கைப்பையிலிருந்து அயல் நாட்டு விஸ்கிப் புட்டியை எடுத்தான்.

சர்வர் பையன் விவரம் தெரிந்தவன். சோடா புட்டிகளுடன் நாலு கண்ணாடி டம்ளர்களையும் எடுத்து வந்தான். பதினைந்து நிமிடங்களுக்குள் கஜபதியும் நண்பர்களுமாகப் புட்டியைக் காலி செய்தனர்! அடுத்து, சர்வர் கொடுத்த பட்டியலிலிருந்து பலவகைப் புலால் உணவு வகைகளை வரவழைத்து வயிறு முட்டச் சாப்பிட்டு முடித்தனர். கஜபதியின் நண்பர்களுள் ஒருவன் குடிக்கத் தண்ணீர் கேட்டான்.



கஜபதி அவன் பக்கம் திரும்பி, ''டேய்! தண்ணீர் வேண்டாம்! தண்ணீருக்குப் பதில் 'பீர்' சாப்பிடுவோமே?'' என்றான்.

''ஓ கே!'' என்றார்கள் நண்பர்கள் ஒருமித்த குரலில். சில நிமிடங்களுக்குப் பிறகு ஐஸ் பெட்டியில் வைக்கப்பட்டு 'ஜில்'லென்று இருந்த நான்கு 'பீர்' புட்டிகளுடன் வந்தான் சர்வர். அவனுக்குச் சற்று ஆச்சரியமாகவே இருந்தது கஜபதி கோஷ்டியினரின் போக்கு. தண்ணீருக்குப் பதிலாக பீர் குடிக்கிற கோஷ்டியை அவன் அதுவரையில் பார்த்ததில்லையோ என்னவோ!

கஜபதியை அவனுக்கு அவ்வளவாகத் தெரியாதுதான். கல்லூரியில் படிக்கும்போதே, அவன் சீமைச் சரக்குகளை ருசி பார்க்க ஆரம்பித்தான்! அன்று ஆரம்பமாகிய குடிப் பழக்கம் இன்று கஜபதியின் நாற்பதாவது வயதில் அவனைப் பரிபூரணமாக ஆட்கொண்டு ஆட்டிப் படைத்து வருகிறது! வசதியுள்ள குடும்பத்தில் நான்கு பெண்களுக்கிடையில் பிறந்த ஒரே பிள்ளை அவன். பணத்துக்குத் தட்டுப்பாடு இல்லை. கஜபதியும் நிரந்தரமான ஒரு வேலையில் அமர்ந்து மாதம் ரூ. 400 சம்பாதித்து வருகிறான். கஜபதிக்குத் திருமணமாகிப் பதினைந்து வருடங்கள் ஆகின்றன. குழந்தைகளிடம் குறிப்பாகத் தன் மைந்தனிடம் அவனுக்குக் கொள்ளை ஆசை. குடும்பப் பொறுப்பும் உள்ளவன். வீட்டுக்கு வெளியே குடித்து விட்டுத் திரியும் நேரங்கள் தவிர அவன் குடிப்பது அவன் மனைவிக்கு மட்டுமே ஜாடை மாடையாகத் தெரியும்!

சரி; கஜபதியையும் அவன் நண்பர்களையும் மிலிட்டரி ஹோட்டலில் விட்டு விட்டு வந்திருக்கிறோமே — அங்கு என்ன நடந்தது என்று பார்க்கலாம்.

பல வருடங்களாகவே கஜபதி குடிப் பழக்கம் உள்ளவனாதலால் பெரும்பாலும் நிதானம் இழக்காமல் சமாளித்து விடுவான். சோடாவோ தண்ணீரோ கலக்காமலே விஸ்கி பிராந்தி, ரம் போன்ற பல்வேறு மது வகைகளை அருந்திப் பழக்கமுள்ளவன்தான். எனினும் அன்று அளவுக்கு மீறிக் குடித்து விட்டதால் ஹோட்டலிலேயே வாந்தி எடுத்து விட்டான்! அவனுடைய நண்பர்கள் அவனை ஒரு டாக்ஸியில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

கஜபதி வீட்டு வாசலில் வந்து இறங்கி டாக்சிக்குப் பணம் கொடுத்துவிட்டுக் கதவைத் தட்டியவுடன் அவன் மனைவி வந்து கதவைத் திறந்தாள். கஜபதி தயங்கி நின்றான். சற்றுத் தள்ளாட்டமாகவும் இருந்தது.



''என்னங்க? ஏன் வாசலிலியே நிக்கிறீங்க? உள்ளே வாங்களேன்...?'' என்றாள் அவன் மனைவி.

அவன் தடுமாற்றத்துடன் அடி யெடுத்து வைத்தான். அவன் தள்ளாடியபோது அவன் மனைவி அவன் கீழே விழுந்து விடாமல் பிடித்துக்கொண்டாள். அவன் முகம் அவளின் முகத்தருகே நெருங்கியபோது, அந்த 'நெடி'யை அவள் உணர்ந்து கொண்டாள்.

''குடிச்சிட்டு வந்திருக்கீங்க, இல்லையா?''

''உஷ்... இரைந்து பேசாதே! அப்பா காதிலே விழப் போகுது...''

''அப்பாவுக்கு மெய்யாகவே பயப்படறதா இருந்தா இப்படி ஏன் செய்யறீங்க...?''

''இனிமேல் இப்படி...''

''குடிக்கிறவங்க எல்லாருமே இப்படித்தான் சொல்லுவாங்க.''

கஜபதியை அவன் மனைவி கைத் தாங்கலாக அழைத்துக் கொண்டு அவன் அறையில் கொண்டு போய்ச் சேர்த்தாள்.

''இதோ, பாரு! இன்னிக்கு நடந்ததை நீ எங்கப்பா கிட்டச் சொல்லவே கூடாது. நான் இனிமேல் மதுவைத் தீண்டவே மாட்டேன்! சத்தியமாச் சொல்றேன்'' நினைவு தெளிந்த நிலையில் கஜபதி உறுதியுடன் கூறினான். தேறாட்டலில் எல்லாரும் அருவருக்கிற மாதிரி நடந்து கொண்டதானது அவனுக்கே வெட்கத்தை அளித்து இப்படிப் பேச வைத்தது. அவன் மனைவி இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டாள்.

''இந்தச் சத்திய மெல்லாம் போதாது! உங்க மகன் மேலே ஆணையாச் சொல்லுங்க!'' என்றாள்.


''நம்ம ராஜா மேலே ஆணையிடச் சொல்லறே, இல்லையா?''

''ஆமாம். எந்த ராஜா மேலே நீங்க உயிரையே வைச்சிருக்கீங்களோ—அந்த ராஜா மேலே ஆணையிட்டுச் சொல்லணும். நானும் மாமா கிட்டவோ, வேறு யாரு கிட்டவோ இதைப் பத்தி மூச்சு விட மாட்டேன்!'' என்றாள் அவன் மனைவி.

அவன் அப்படியே அன்பு மகன் மீது ஆணையிட்டு வாக்களித்தான். அது நடந்து ஆறு மாதங்களுக்கு மேலாகிறது. அவன் மன உறுதி தளரவில்லை — எவ்வளவோ சந்தர்ப்பங்கள் அவனுக்குச் சோதனையாக எதிர்ப்பட்டபோதிலும். அவளும் அந்தச் சம்பவத்தைப் பற்றி வாய் திறக்கவில்லை. கணவனின் மானத்தைக் காப்பதில் அவளுக்கும் பொறுப்பிருக்கிறதல்லவா? கஜபதியா இப்படி மாறிவிட்டான் என்று நண்பர்கள் வியக்கின்றனர்.

(பெயர் மட்டும் கற்பனை)

பேட்டி: **'பாணன்'**



பத்மா பயிற்றுவித்த பூமா



சலங்கையை மேடையின் மீது பத்மபூஷண் டாக்டர் டி. என். ராமச்சந்திரனிடமிருந்து ஆசியுடன் பெற்றுக் கட்டிக்கொண்டு பிறகு நிகழ்ச்சியை ஆரம்பித்தார் குமாரி பூமா.

அரங்கேற்றம் நடத்துவதற்கும் போதிய அளவு பயிற்சியும் தகுதியும் குமாரி பூமா பெற்றுவிட்டாளா என்று நிச்சயிக்கும் முழுப் பொறுப்பையும் ஆசிரியை குமாரி பத்மா சுப்பிரமணியத்துக்கே விட்டுவிட்டார், பூமாவின் தகப்பனார் விளம்பரத் துறைப் பிரமுகர் திரு ஆர். கே. ஸ்வாமி. நிருத்யோதயாவின் தலைவி குமாரி பத்மா கலை உணர்வோடு கல்வி அறிவும் நிரம்பப் பெற்றவர். நுணுக்கமாக ஆராய்ந்து கலை வடிவங்களை நடன நிருத்தியங்களில் அமைத்து, அழகு படுத்துவதில் குமாரி பத்மா தனிச் சிறப்புள்ளவர். அவர் முழு மனத்துடன் அனுமதித்து அரங்கம் ஏறினார் குமாரி பூமா.

அரங்கேற்றம் ஆரம்ப முதல் முடிவு வரையில் அழகான கலை விருந்தென அமைந்திருந்தது. அடவுகளும், காலப் பிரமாணங்களும், சவுக்க காலத்திலும் துரித நடையிலும் சுத்தமாக இருந்தன. மலயமாருத ஜதிஸ்வரமும், காபி ராக வர்ணமும் குமாரி பூமா நிருத்தியத்தில் அடைந்திருந்த முதிர்ச்சியைத் தெளிவாகக் காட்டின. அபிநயப் பகுதியும் அழகாக அமைந்திருந்ததை விசேஷமாகக் குறிப்பிட வேண்டும். தோடி பதமும், குலசேகராழ்வாரின் திவ்யப் பிரபந்தமும் அபிநய எழில்களுக்குப் பூரண வாய்ப்பளித்தன. அரங்கேற்றத்துக்குச் சோபை அளித்தது யோமனா பாலகிருஷ்ணனின் இனிமையான பின்னணிப் பாட்டு.

- எம்.எஸ். செல்லமாமி



உயிர்நூல் பாடம் சலிப்பூட்டுகிறது

அதற்குப் பதிலாக, நாள் முழுதும் உழைத்த பின்னரும், இவர் முகம் எப்படி இத்தனை புதுமையோடு எழிலோடு விளங்குகிறது என்பதை கற்பித்தால் நலம்!



காலை முதல் இரவு வரை புதுமையுடன் தோற்றமளிப்பது எப்படி?
பகல் தொடங்கியதும், லக்மே முகப் பவுடர் தடவுங்கள். நாள் முழுவதும் உங்கள் முகம் எழிலோங்கி விளங்க, லக்மே காம்பாக்ட் மேக்-அப் செய்து கொள்ளுங்கள். இது உங்கள் கைப்பையில் அடங்கக் கூடியது

பவுடர் பூசியதுபோன்ற தோற்றத்தைத் தவிர்ப்பது எப்படி?
மிகவும் மென்மையான, ஒளி ஊடுருவிப் பாயும் முகப்பவுடரைத் தேர்ந்தெடுங்கள். லக்மே அல்ட்ரா-சில்க் பேஸ் பவுடர் விசேஷமாகப் பட்டில் சலிக்கப்பட்டுள்ளது. இதனால் அது மேனி வண்ணத்துடன் இணைந்து, புதுமைப்பொலிவைக் கூட்டுகிறது.


இதர பெண்மணியைப் போல அதே வண்ணச் சாயலை உபயோகிப்பது சாமர்த்தியமல்ல. ஏன்?
உங்கள் மேனி வண்ணத்தைவிட இலேசான அல்லது கருமையான சாயலில் பவுடர் தடவினால், திட்டு திட்டாக இருக்கும். எனவே இந்தியப் பெண்மணிகளின் பல்வேறு மேனி வண்ணங்களுக்குப் பொருந்தும்படியாக 8 சாயல்களில் கிடைக்கிறது லக்மே முகப் பவுடர். உங்களுக்கு எது பொருத்தமோ அதைத் தேர்ந்தெடுங்கள் — லக்மே காம்பாக்ட் மேக்-அப் பொருத்தமான 8 சாயல்களில் கிடைக்கிறது

சரியாக மேக்-அப் செய்து கொள்ளும் கலையைக் கற்போருக்குப் பாராட்டுகள்:
முதலில் ஒரு நல்ல வேனிஷிங் க்ரீம் அல்லது லிக்விட் மேக்அப் உபயோகியுங்கள். பிறகு சுத்தமான பஞ்சால் உங்கள் முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் பவுடரை மெதுவாக அழுத்துங்கள். மூக்கு, நெற்றி, முகவாய்க்கட்டை போன்ற எண்ணெய்ப்பசையுள்ள பகுதிகளிலும் அவ்வாறே செய்யவும். அங்கெல்லாம் லக்மே முகப் பவுடர் மணிக்கணக்கில் நன்றாக ஒட்டிக்கொள்ளும். நீங்கள் இயற்கைப் பொலிவுடன் இணையற்ற தோற்றமளிப்பீர்கள்.

லக்மே
அல்ட்ரா-சில்க்

பேஸ் பவுடர் மற்றும் காம்பாக்ட் மேக்-அப்

எழிலோங்கும் 8 சாயல்களில்—மணிக்கணக்கில் மேனியழகு மிளிர.





ராஜி புத்தம் புது மணப் பெண். சென்ற ஒன்பதாம் தேதிதான் அவளுக்குத் திருமணமாயிற்று. பதினைந்தாம் தேதி முதல் உள்ளூர் ஆனதால் — உடனே வேலையில் சேர்ந்து விட்டாள். இன்று அவள் வாங்கப் போவது முதல் சம்பளம் — புக்ககத்துக்கு வந்தபின். அதைக் கணவனிடம் கொடுப்பதா, மாமியாரிடமா? அவர்கள் 'உன் பணம் எதற்கு, இத்தனை நாட்கள் இது வந்ததா ? இதை உன் செலவுகளுக்கே வைத்துக் கொள்' என்பார்களா?

இராது. ஏனெனில், படித்த, அழகான அடக்கமான பெண் என்பதுடன் வரதட்சிணை என்ற 'குவாலிபிகேஷன்' சேர்ந்து அத்துடன் இன்று, 'சம்பாதிக்கும் பெண்' என்ற பட்டமும் அல்லவா மணமகளுக்குத் தேவையாக இருக்கிறது!

அவர்கள் எதிர்பார்த்த எல்லாக் குண நலன்களும் - உத்தியோகம் உட்பட ராஜிக்கு இருந்ததால்தான் அந்த இடம் அமைந்தது.

இருந்தாலும் முதல் சம்பளம், வீட்டில் எல்லோருக்கும் ஏதாவது வாங்கலாம் முதல் பரிசாக! அத்துடன் அம்மா, அப்பாவுக்கும்... ஐயோ வேண்டாம்... அம்மா ஏற்கனவே கண்டித்துக் கூறியிருந்தாள். ''ராஜி! இத்தனை நாட்கள் உன் சம்பளம் வந்தது சரியாகத்தான் இருந்தது.... ஆனால் இனி நீ முழுமையாக அவர்கள் உடைமை'' என்ற பின் தான் ஏதாவது வாங்கினால் கொண்டாட மாட்டாள்..... திட்டுவாள் !

முதல் தேதி ! ஆபீஸ் பரபரப்புடன் இருந்தது. எத்தனை 'சிக் லீவு' போடுபவனும் முதல் தேதி லீவு எடுப்பதில்லை!

''ராஜி...! இன்று பணத்தை என்ன செய்வாய் ?'' — மெல்லக் கிண்டினாள் சீதா.

'' என்ன செய்வாள் ? 'ஹப்பி'யிடம் கொடுப்பாள்.'' — இது விமலா.

''கொடுத்தால் அவர் வாங்கிக் கொள்வாரா ?''

'' ஏன் மழுப்புகிறாய்? சும்மாத்தான் வாங்கிக் கொள்வாரா, பதிலுக்கு ஏதாவது தருவாரா என்று கேளேன்.....'' உதட்டைக் குவித்தது ஒன்று.

ராஜி வாய் திறக்கவில்லை. ஆனால் அவள் சிந்தனை திசை மாறியது. ''ஆம், அவருக்கும் முதல் தேதி ! என்ன வாங்கிவருவார் அவர். தனக்கென்று என்ன வேண்டும் அவளுக்கு? ஒரு முழம் மல்லிகை. அந்த அன்பு போதுமே! பெண் மனம் பரவசமுற்றது. அந்த நினைப்பிலே !

மாலை மணி நான்கு. 'கிரிங்' என்று டெலிபோன் இனிமையாக அழைத்தது.

''மிஸஸ் ராஜி, உங்களுக்குத்தான்....''— ரிஸப்ஷனிஸ்ட் முகத்தில் குறும்பு விளையாடியது.

தன் இடத்திலிருந்து எழுந்து பத்தடி நடப்பதற்குள் ராஜியின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் எழுந்தன. அவர்தான் இருக்கும். என்ன சொல்வார், படமா?.... காமத் ஹோட்டலா... புடவைக் கடையா?

''ஹலோ, ராஜி! நான் இன்று உன் ஆபீசுக்கு வந்து உன்னை 'பிக் அப்' செய்கிறேன்.''

"ஏன்....?" ராஜி ஆவலுடன் கேட்டாள்.

"சம்பளப் பணத்துடன் தனியாக பஸ் கூட்டத்தில் வருவானேன்.... காலம் கெட்டுக் கிடக்கிறது."

"அப்பா, எத்தனை கரிசனம்! நான்கு நாட்களுக்குமுன் ஒரு தினசரியில் சம்பளப் பணத்துடன் தனியாகச் சென்ற ஓர் ஆண் மகனை ஒரு பெண் மயக்கிச் சம்பளத்தை அபேஸ் செய்த செய்தியைப் படித்தது ராஜிக்கு நினைவு வந்தது.

"அதனால் என்ன? இத்தனை நாட்கள் போகவில்லையா?" என்று ராஜி வேண்டுமென்றே கேட்டாள்.

"இத்தனை நாட்கள் நீ யாரோ.... நான் யாரோ? உன்னை வந்து நான் எப்படி 'பிக்–அப்' செய்திருக்க முடியும்?" — சிரிப்பு கரகரத்தது.

'ஐய, அப்படியானால் பணத்தை எடுத்துக் கொண்டு போங்கள். நான் வழக்கம்போல் வருகிறேன்.....' என்று கூற நினைத்தாள் ராஜி. ஆனால் பெண் அப்படிக் கூறலாமா? அம்மாவின் உபதேசங்களில் அது ஒன்றாயிற்றே!

"சரி.... நான் உங்களவளாகித்தான் இருபது நாட்களாகிவிட்டனவே.... இத்தனை நாட்கள் இல்லாமல் இன்று என்னவாம்?"— ராஜி விட்டுவிடவில்லை. சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"அப்போ நான் எங்கேயாவது கூப்பிட்டால்கூட, இத்தனை நாட்களாக ஏன் கூப்பிடவில்லை என்று வராமல் இருந்து விடுவாயா?"

"ஓ. அதற்குத் தயார்!" ராஜியின் இதயம் துடித்தது. "ஆனால்....அம்மாவிடம் சொல்லாமல்...."

"அம்மா இன்று 'வருதுக்கு' அண்ணாவிடம் போய்விட்டு இரவு லேட்டாகவோ அல்லது நாளையோதான் வருவாள்."

"ஓ...கே...." — ராஜி ஃபோனை வைக்கும் முன்னால் ஏதோ ஒலி கேட்டு முகம் சிவந்தாள். படபடப்பில் அதைக் கீழே போடாத குறைதான்.

ராஜியும் வாசுவும் முதலில் கோவிலுக்குப் போனார்கள். பின் 'தாஜ் ஹோட்டல்'! ஒரு 'ஏ' படத்துக்கு டிக்கட் கிடைக்கவில்லை. பாவம். ராஜி அதை லட்சியம் செய்யவில்லை. அவள் மனம் ஒரே ஆனந்த லயிப்பில் இருந்தது. அவர்கள் வீட்டை அடையும்போது மணி எட்டு. மாமியார், மாமனார் இருவரும் வரவில்லை.

ராஜி தன் கைப் பையைத் திறந்தாள். ஒரு கவரை எடுத்துத் தன் கணவன் கையில் கொடுத்து வணங்கினாள். பிறந்த வீட்டில் அப்பாவிடம் அப்படித்தான் செய்வாள். வாசு கண் மலர அவளைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன் மனப் பூரிப்பு முகத்தில் தெரிந்தது. 'யாருக்குக் கிடைப்பாள் இப்படிப் பட்ட ஒரு மனைவி? அழகு, குணம், படிப்பு, உத்தியோகம், அத்துடன் பண்பு. கூலையாகச் சம்பளத்தை அவன் கையில் கொடுக்கிறாள். இந்தக் காலத்துச் சிலதுகள் போல் 'என் சம்பாத்தியம் எனக்குப் புடவைக்குத்தான்!' என்று பேரம் பேசவில்லை! 'வாசு, நீ அதிர்ஷ்டசாலியடா' அவன் உள் மனம் சபாஷ் போட்டது.



ஒரு பெண்ணின் உரிமை

ஸ்ரீப்ரியா

நோட்டுக்களை உருவின அவன் கைகள். ஒன்று, இரண்டு, நூறு ரூபாய்கள். நாலு பத்து ரூபாய், ஒரு ஐந்து, சில்லறை! மறுபடியும் அதை பர்சுக்குள் போட்டான் வாசு. 'தன்னிடமே திருப்பிக் கொடுத்து விட்டால் என்ன செய்வது? அம்மா சொல்லித் தரவில்லையே' என்பது போல் விழித்தாள் ராஜி.

அவள் மனம் படபடத்தது. பர்சை அவள் கைகளில் திணித்தான் வாசு. ராஜி மகிழ்ந்து போனாள். தன் பணம் தனக்கே...இதுவரை அவள் அனுபவித்திராத உரிமை! அவள் முகம் மலர்ந்தது. ''என்னிடம் எதற்கு...'' என்று நாக் குழறியது.

''சரியாக இருக்கிறதா எண்ணிப் பார்.''

''ஏன், நீங்கள்தான் அப்படியே தந்து விட்டீர்களே.''

''அதல்ல. சம்பளம் வாங்கும்போது சரியாக எண்ணினாயா என்கிறேன்.''

''ஏன், சரியாகத்தானே இருந்தது?'' என்று ராஜி விழித்தாள்.

''பணம் குறைகிறதே ராஜி! உனக்குச் சம்பளம் முந்நூற்றைம்பதுக்கு மேல் என்று உன் அப்பா சொன்ன நினைவு... ஆனால் குறைகிறதே!''

''முந்நூற்றைம்பதா... ஓ... அதுதான் இந்த மாதம் முதல் கடனுக்குப் பிடிக்கிறார்களே!''

''கடனா...இந்த மாதம் முதலா... ஏது கடன்?''

''என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? உங்கள் அப்பாதான் நாலாயிரத்து ஐந்நூறு கையில் இல்லாது முடியாது என்றார். என் அப்பா மூவாயிரம் என்றார். அம்மாவுக்கு இந்த வரனை விட மனமில்லை. ஏன் எனக்கும்தான்.'' ராஜி ஒய்யாரப் பார்வையை வீசினாள். ஆனால்....!

''ராஜி! என்ன விளையாடுகிறாயா?'' இடீரென்று வாசுவின் குரல் உயர்ந்தது. ''கடன் நீ எடுத்துக் கொடுத்தாயா? யாரைக் கேட்டு எடுத்தாய்? எத்தனை எடுத்தாய்?''

''ஏன், அப்பாவுக்காக நான்தான் எடுத்துக் கொடுத்தேன். ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு தான்... என் கல்யாணத்துக்குத்தானே...?'' ராஜி கணவனின் முக பாவத்தைப் பார்த்து விழித்தாள்.

''ஓகோ... உன் சம்பளத்தில் அவர்களுக்கு ஏது உரிமை? இன்று அதன் பிடித்தம் என் பங்கிலல்லவா துண்டு விழுகிறது? உன் அப்பா அதைக் கொடுப்பாரா?''

''என்னது...?'' ராஜி திடுக்கிட்டாள். அவன் என்ன சொல்கிறான்? கல்யாணத்துக்கு முன்பே அப்பாவுக்குக் கடன் எடுக்க இவரைக் கேட்க வேண்டுமா? எதற்கு? அவள் உள்ளம் கனன்றது. 'ராஜி, பொறுமையாயிரு. எந்தக் கணமும் படித்த பெண், சம்பாதிக்கிறவள் என்று காட்டிக் கொள்ளாதே' தாயின் குரல் செவியில் கிசுகிசுத்தது.

''என்ன விழிக்கிறாய்...!'' மறு கணம் அந்தப் பர்ஸ் அவள் கையிலிருந்து தட்டிவிடப் பட்டுப் பறந்தது. ''போ! துண்டு விழும் பணத்தைத உன் அப்பாவிடம் வாங்கி வா. இந்த ஏமாற்று வேலை யெல்லாம் என்னிடம் நடக்காது...ம்...''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' ராஜியின் உடல் வியர்த்தது. பிற்பகல் நடந்த பேச்சுக்களும், விளையாட்டுக்களும் பொய்யாய்ப் பழங் கதையாய்ப் போயின. அவள் நெஞ்சை அடைத்தது. கண்கள் குளமாயின.

''நீஸி, என்ன அழுகை? வெட்கமில்லை உன் அப்பனுக்கு?''

''எதற்கு என் அப்பா வெட்கப்பட வேண்டும்?'' இதற்குள் ராஜி சுதாரித்துக் கொண்டு விட்டாள்.

''பெண்ணிடம் கடன் வாங்க. அதிலும் அவள் இன்னொருவன் சொத்தான பிறகு?''

''கடன் எடுத்தபோது நான் அவர் மகள் தான்.''

''ஆனால் என் மனைவியாக நிச்சயிக்கப்பட்ட சொத்து.''

''அப்படி மனைவியாக்க வாங்கப்பட்ட கடன்தான் அது. தவிர இந்தப் படிப்பு, சம்பாத்தியம் இதற்கெல்லாம் மூல காரணமான பி.காம் வரை படிக்க வைத்தது யார்? கல்யாணத்துக்கு முன் எத்தனையோ நடக்கின்றன. அவற்றை யெல்லாம் கேட்கப் புறப்பட்டால்...'' ராஜி முடிக்காமல் விம்மினாள். ''என் தந்தைக்கு நான் அதுகூடச் செய்யக் கூடாதா?''

''தந்தைக்கு நாலைந்து வருடங்களாகச் செய்தது போதாதா? பெண்ணுக்குக் காலா காலத்தில் கல்யாணம் செய்யாது சம்பாதிக்கிறாளே என்று அத்தனை நாட்கள் சும்மா இருந்த உன் தந்தைக்குத்தான் வெட்கமில்லை. மீண்டும் சொல்கிறேன்....''

ராஜி ஒரு கணம் அவன் கண்ணுக்குள் நோக்கினாள். அவள் உள்ளத்தில் ஆயிரமாயிரம் கேள்விகள் வெடித்தன.

கல்யாணத்துக்கு முன்னும் பின்னும் உங்கள் தங்கைகளுக்குச் செய்யவில்லையா? ஏன் அந்தத் தங்கை உங்கள் அம்மாவுக்குப் புடவை வாங்கி வந்தபோது நீங்கள் எல்லாம் பாராட்டவில்லையா? உங்கள் அப்பா வீடு கட்ட நீங்கள் கடன் எடுக்கவில்லையா? கடைசியாகப் போன வருடம்வரையில் நீங்கள் எதிர் வீட்டுச் சீதாவைத்தான் பண்ணிக்கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்ததாக உங்கள் தங்கை கூறினாளே, அதைக்கூட நான் கண்டு கொண்டேனா? அதையெல்லாம் கேட்க நான் யார் என்று விடவில்லையா? கடைசியில் 'வெட்கமில்லையா?' என்று என் அப்பாவை— பெண்ணைப் பற்றிய கவலையை நெஞ்சில் நெருப்பாகச் சுமந்து கொண்டு உங்களைப் போல் ஒரு 'தங்கமான' மாப்பிள்ளையைத் தேடித் தேடி அலைந்தவரை— கேட்டீர்களே? எனது நாலு வருட சம்பாத்தியத்தை அவர் எடுத்துக் கொண்டார் என்று இடித்துக் காட்ட ஆயுள் முழுதும் சம்பாதிக்கும் பெண்தான் வேண்டும் என்று தேடிய உங்களுக்கு என்ன யோக்கியதை?

ராஜி இப்படி யெல்லாம் கேட்கத்தான் நினைத்தாள். ஆனால் கேட்கவில்லை. கேட்க மாட்டாள். ஏனெனில் அவளுக்குக் கேட்க


அமரர் தேவன் நினைவு இலக்கியப் போட்டி

முடிவு தேதியை சிறிது தள்ளிப் போட வேண்டுமென பல எழுத்தாளர்கள் நேரிலும் கடித மூலமும் கேட்டுக் கொண்டதன் காரணமாக செப்டம்பர் 20-ந் தேதிக்கு மாற்றப்பட்டு இருக்கிறது.

இந்த மாற்றத்தை ஒட்டி தேவன் இரண்டாவது இதழ் அக்டோபர் 25-ந் தேதி தீபாவளி மலராகப் பிரசுரமாகிறது.

விவரங்களுக்கு எழுதவும்:


தேவன்
4/1, போயிஸ் சாலை
சென்னை -18
போன்: 443793



திரு டி. வி. ராமமூர்த்தி J. P அவர்கள், தி மயிலாப்பூர் ஹிந்து பர்மனெண்ட் பண்டு லிமிடெட்டின் தலைவராக 1973-74ம் ஆண்டுக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்.

வெறும் வாய்ப் பேச்சு அல்ல புதிய ஸிக்னல் திறன்

இதோ நிரூபணம் :



புதிய ஸிக்னல் ஒன்றுதான் பற்சிதைவையும் வாய் நாற்றத்தையும் தடுத்து நிறுத்திக் காண்பிக்கிறது

புரட்சிகரமான புதிய பல்சுத்திகரிப்பு மூலப் பொருளின் அடிப்படையிலே.

(காப்புரிமைச் சட்ட எண் 114718ன் கீழ், புரட்சிகரமான இப் புதிய பல்சுத்திகரிப்பு பொருளிலே ஃப்ளுரைடு இணைக்க உரிமைபெற்ற பற்பசை புதிய ஸிக்னல் ஒன்றுதான்.)

பல் வைத்தியரே விளக்குவார்
புதிய ஸிக்னலின் நிரூபணமான தன்மைகளை.

பரிசோதனைகள் நிரூபித்தன :

விஞ்ஞானிகள் கிங்கல், ஸ்டோல்டே இருவரும் நிரூபித்தனர்: ஃப்ளுரைடு அடங்கிய ஸிக்னல் (400 குழந்தைகளிடையே) பற் சிதைவை 33 சத விகிதம் குறைத்துவிட்டது. எஸ்-14, உபயோகித்த 15 நிமிடங்களில், வாய் நாற்றத்தை 95 சத விகிதம் குறைத்துவிட்டது என நிரூபித்தார் டாக்டர் விண்டு.

புரட்சிப் புதுமையான பல்சுத்திகரிப்பு மூலப் பொருளிலே ஃப்ளுரைடு, எஸ்-14 இரண்டும் இணைந்தது புதிய ஸிக்னல். வேறெந்தப் பற்பசையிலும் இராத முப் பொருத்த முழுமை இது. பல் பராமரிப்பு பற்றிய முழு விவரப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற, எழுதுக: இந்துஸ்தான் லீவர் லிட்., க்ளினிக்கல் டிபார்ட்மெண்ட், போஸ்ட் பாக்ஸ் 409, பம்பாய்-1. (தபால் செலவுக்கென 25 பைசா தபால் வில்லைகளை இணைக்கவும்.)



இந்துஸ்தான் லீவரின் உத்தரவாதம் பெற்றது ஸிக்னல். தமிழ்நாடு, கேரள, ஆந்திர, மைசூர் மாநிலங்களில் மட்டுமே கிடைக்கிறது.

ஃப்ளூரைடு, எஸ்-14 இரண்டும் அடங்கிய பற்பசை வேறில்லை

லின்டாஸ்.SG. 30-143 TM(R)

உரிமையில்லே! அவள் பெண்! ஆணும் பெண்ணும் சமம், ஆணுக்குப் பெண் இளேப்பில்லே என்பதெல்லாம் மேடையில், பேனு முனேயில் தான்!

ஆனல் உண்மையில் படித்த பெண் அதிலும் வரதட்சிணே கொட்டும் பெண்— அதோடு சம்பாதிக்கும் காமதேனு இப்படியெல்லாம் கேட்கக் கூடாது! மணப் பெண்ணின் 'பே ஷீட்'டில் எந்தக் கடனும் இல்லேயா என்றும் கூட விசாரிக்கிறதே இந்தச் சமூகம் - அதுதான் நாகரிகத்தின் முதிர்ச்சி சார். வளர்ந்துவிட்ட நாட்டின் சின்னம்!

அதோ போகிருள் ராஜீ! காலண்டரில் முதல் தேதி இதழ் கசங்கி விட்டது!

படித்துப் பாருங்கள் !

எங்கே போகி(றோம்?)றார் அகிலன்?

'எங்கே போகிறோம்?' என்று ஒரு கேள்வியைத் தமது கடைசி நாவலில் எழுப்பிவிட்டு, 'இதோ நான் போகிறேன் ருஷ்யாவுக்கு' என்று கிளம்பிவிட்டார் திரு அகிலன்! மாஸ்கோவில் நடக்கும் ஆசிய ஆப்பிரிக்க எழுத்தாளர் மகாநாட்டிலும், பிறகு தாஷ்கெண்டில் நடக்கும் ருஷ்ய இந்திய எழுத்தாளர் கருத்தரங்கிலும் அப்புறம் ஏரவான் நகரில் நடைபெறும் கவியரங்கில் பார்வையாளராகவும் கலந்துகொள்ளச் செல்கிருர். தமிழகத்தின் சார்பில் அவர் அங்கெல்லாம் செல்வதில் பெருமையுற்று வாழ்த்துகிறோம் என்று சொன்னுல் அகிலனுக்குக் கோபம் வரக்கூடும். ஏனெனில், அவர் முதலில் பாரதப் பிரஜை; பிறகுதான் தமிழர். முக்கியமாக அவர் அயல்நாடு செல்கையில் பாரத எழுத்தாளர் என்று நாம் குறிப்பிடாது போனுல் அவர் குமுறுவார்; நிச்சயம்.

'எங்கே போகிறோம்?' என்ற நாவலேக்கூட அவர் உள்ளக் குமுறலுடன்தான் எழுதியிருக்கிருர். இலக்கியக்கர்த்தாவுடைய எழுத்து ஒவ்வொரு கால கட்டத்திலும் பல்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலேகளால் பாதிக்கப்படுகிறது. அகிலனின் எழுத்து இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு சமயம் காதல் கதைகளாக எழுதி நம் மனங்களேயெல்லாம் பஞ்சாக்கிய அகிலன் இன்று கோபத்துடன் எழுதி நம் இதயங்களே வெகுண்டு எழச் செய்கிருர்.

'எங்கே போகி(ருய்)றோம்?' என்ற இந்தக் கேள்வியைப் பைபிள் காலத்திலிருந்து (Quo Vadis) ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பல தலேமுறையைச் சேர்ந்த பல தலேவர்கள் பல நாடுகளில் பல சந்தர்ப்பங்களில் கேட்டுவிட்டார்கள். எனினும் கேள்வி தொடர்கிறது. இனியும் தொடரும். நல்ல சக்திகளுக்கும் தீய சக்திகளுக்கும் உலகெங்கும் நடக்கும் போராட்டங்கள் ஓயாதவரை கேள்வி ஒலிக்கத்தான் செய்யும்.

இப்படி ஒரு கேள்வியை எழுப்புமாறு அகிலனே வேதனேப்படுத்திய விஷயம் என்ன? காந்தி மறைந்தபிறகு காந்தியமும் வெகு விரைவாக நமது நாட்டிலிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டதுதான். பத்திரிகைகளில் ஆபாசம் மலிந்துவிட்டது. அரசியலில் அராஜகம் புகுந்துவிட்டது. பிரிவிணேச் சக்திகள் பலம் பெற்று வருகின்றன, ஏழைகளின் துயர் தீர்ந்தபாடில்லே, பொருளாதாரம் சீர்குலேந்து வருகிறது. இன்னும் அசத்தியம், அதர்மம், லஞ்சம், ஊழல் என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

காந்தியத்துக்கு நமது சமூக, அரசியல் வாழ்விலிருந்து நாம் கல்தா கொடுத்து வருவதைப் பக்கம் பக்கமாகச் சித்திரிக்கும் அகிலன், கடைசி ஒரு சில பக்கங்களில் துயரமான நிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறிக் கதாபாத்திரங்களேப் பொறுத்தவரை கதையைச் சோகமாக முடிக்கிருர். என்றுலும் நாட்டின் எதிர்காலம் பற்றிய நன் நம்பிக்கைக்கும் சிறிது இடமளிக்கிருர். அடியோடு எல்லாமே குடிமுழுகிப் போய்விட்டது என்று அவர் எண்ணுதது ஓரளவு ஆறுதல் அளிக்கிறது!

பிரச்னேகளேப் பிட்டுப் பிட்டு வைக்கிற நாவலாயிருந்தாலும் அலுத்துக் கொள்ளாமல் கடைசி வரை படிக்க வசதி செய்து தருவது அகிலனின் நடை. அந்த நடையைக் கையாண்டால் வறட்டுத் தத்துவமும் சுவை மிக்க வாசகமாகிவிடும் என்னும்போது மக்கள் அன்ருடம் சந்திக்கிற பிரச்னேகளே அகிலனின் எழுத்தாற்றல் விறுவிறுப்பான நாவலாக்கியதில் வியப்பில்லே.

கதை அமைப்பு, பாத்திரப் படைப்பு, உணர்ச்சிகளின் சித்திரிப்பு இவற்றைப் பொறுத்தவரை அகிலன் இதைவிட உயர்ந்த நாவல்களே எழுதியிருக்கிருர். எனவே, இது அகிலனின் மிகச் சிறந்த நாவல் எனக் கருதப்படுவது சந்தேகம். ஆயின் அகிலனின் முக்கியமான நாவல் இது என்பதில் சிறிதும் ஐயமில்லே.



முக்கியமான நாவலே எழுதியவர், முக்கியமான ஒரு பணி நிமித்தம், உலகில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட நாடுகளில் ஒன்ருன ருஷ்யாவுக்குச் செல்கிருர். அவர் ஏற்றுள்ள இலக்கியச் சிந்தனேயுடன்கூடிய நட்புறவுப் பணி வெற்றி பெறுவது மிக முக்கியம். வாழ்த்துவோம்.

கலேமகளில் தொடர்ந்து வெளிவந்த இந்த நாவல் புத்தக உருவில் கிடைக்குமிடம்: பாரி புத்தகப் பண்ணே, 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னே—5. விலே: ரூ. 7.50.

மூன்று மாதங்களுக்கு மேலான குழந்தைகளுக்கு
அமுல் தரும் ஒரு புதிய முக்கிய உணவு

பாலஅமுல்

குழந்தையின் முதல் தானிய துணை உணவு
எளிதில் சீரணிக்கக் கூடிய புரதச் சத்து நிரம்பியது.




மூளையும் உடலும் முழுமையாக வளர

உங்கள் குழந்தை, பிறந்த மூன்றாவது மாதத்திலிருந்து, பால் குடிப்பதுடன், தானிய துணை உணவுகளையும் உட்கொள்ளுகிறது அல்லவா? சாதம், ஜுஜி, வாழைப் பழம் போன்ற வழக்கமான உணவுகள் உங்கள் குழந்தைக்குப் போதுமான புரதச் சத்துக்கள் வழங்குவதில்லை: ஏனெனில் அவற்றில் மாவுப்பொருள் அதிகமாக உள்ளது. முதல் இரண்டு ஆண்டுகளில், போதிய புரதச்சத்து தந்தால்தான் உங்கள் குழந்தையின் மூளையும் உடலும் சீராக வளரும். பாலஅமுல் ஒரு சரிவிகித சத்துணவு. அதில் தரமுயர்ந்த பால் மற்றும் தாவர புரதச் சத்துக்கள் நிறைய உள்ளன. வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் மிகுந்துள்ளன. இவற்றால் உங்கள் குழந்தையின் மூளையும் உடலும் முழுமையாக வளர உறுதி கிடைக்கிறது.

வேலூரிலுள்ள கிறிஸ்டியன் மெடிகல் காலேஜ் அண்டு ஹாஸ்பிடலின் டாக்டர்கள் குழந்தைகளுக்குப் பாலஅமுல் புகட்டிப் பரிசோதனைகள் செய்து சிறந்த பலன் கண்டிருக்கிறார்கள்.

இலவசம்!
பாலஅமுல் பற்றிய விவரமான நூலை இலவசமாக பெற எழுதுக: தபால் பை 10124, பம்பாய் 400 001.



கைரா டிஸ்ட்ரிக்ட் கோ-ஆப்பரேடிவ்
மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன், ஆனந்த், குஜராத்.

ஞானக்குயில்

ஜெகசிற்பியன்

21. சிந்தையில் பதிந்த சித்திரம்

எழும்பூர் பகுதியில் நடுத்தர மக்கள் மிகுதியாக வாழும் ஒரு குறுகலான தெருவின் கடை கோடியில் இருந்தது, திருமலையின் வீடு. அந்த வீட்டைக் கண்டுபிடிப்பதற்கு நரசு அவ்வட்டாரத்தில் சுமார் ஒன்றரை மணி நேரம் சுற்றி அலையவும், ஓர் இருபது முப்பது பேரிடம் விசாரிக்கவும் வேண்டியதாகி விட்டது. தெருப் பெயர், வீட்டு எண் முதலான விவரங்களையெல்லாம் சரியாகத் தெரிந்து கொண்டு வந்தும் தான் இவ்வளவு அலைச்சல் அலைய நேரிட்டதை எண்ணிப் பார்த்த அவனுக்கு, இவ்வீடு இருக்கும் பகுதிகூட இன்னதெனத் தெரியாமல் இந்தப் பட்டணத்துக்கே புதிதாக வந்த அப்பாவிப் பெண்ணான கண்ணம்மா தன் தாயாரிடம் வந்து சேராது போன விஷயம் இப்போது கொஞ்சமும் ஆச்சரியப்படக் கூடியதாகத் தோன்றவில்லை.

கள்ளிப் பெட்டியை நிமிர்த்தி வைத்தாற் போன்ற சின்ன மாடி வீடு அது. ரொம்பவும் பழசானது. கீழே இரண்டு போர்ஷன்களும், மாடியில் ஒரு போர்ஷனும் இருப்பது தெருவில் நின்று பார்க்கும்போதே தெரிந்தது. மாடிக்குப் போக வெளிப்புறம் படிக்கட்டு அமைந்திருந்தது.

திருமலை குடியிருக்கும் போர்ஷன் எது என்று தெருவிலே விளையாடிக் கொண்டிருந்த ஒரு சிறுவனிடம் விசாரித்தான் நரசு. இடது பகுதியைச் சுட்டிக்காட்டினான் பையன்.

அந்தப் பகுதியின் வாசற்கதவு உட்பக்கம் சாத்தியிருந்தது. 'நல்ல வேளையாக வெளியில் பூட்டியிருக்கவில்லை' என்று மனத்துள் நிம்மதியடைந்தவனாய்ப் போய்க் கதவை மெல்லத் தட்டினான்.

சில நிமிடங்களுக்குப்பின் கதவு கொஞ்சமாகத் திறக்கப் பட்டது. ஐம்பது வயதான ஒரு முதியவள் வெளியே எட்டிப் பார்த்தாள். உடல் நலமில்லாமல் படுத்திருந்து எழுந்து வந்தவள் போல் காணப்பட்ட அவள் தான் திருமலையின் தாயாராக இருக்கக் கூடும் என்று ஊகித்து அறிந்து கொண்டான் நரசு. ''திருமலை இருக்கிறானா, அம்மா?'' என்று தயக்கப் புன்னகையுடன் கேட்டான்.



"நீங்க யாரு தம்பீ?" என்று உயிரற்ற குரலில் வினவியவாறு அவனை ஏறிட்டு நோக்கினாள் அந்த அம்மாள்.

"நான் உங்க மகனோடு கல்லூரியில் படிச்சவன். என் பேர் நரசிம்மன். மாயவரத்திலேயிருந்து வந்து இங்கே ஒருத்தர் வீட்டில் தங்கியிருக்கிறேன். நேத்திக்குத் திருமலையைப் பார்த்தேன். இப்ப அவனைச் சும்மா பார்த்து விட்டுப் போகலாம்னு வந்தேன்."

"ஓ!..... நீங்கதான் அந்தப் பிள்ளையா?.... வாங்க தம்பி, வாங்க!" என்று முகமலர்ச்சியுடன் வரவேற்ற அம்முதியவள் கதவைத் திறந்து விட்டாள்.



இரண்டு அறைகளும் ஒரு சமையல் கட்டுமே கொண்ட சின்ன போர்ஷன் அது. அந்த அறைகளைச் சுற்றி ஒரு நோட்டமிட்டுக் கொண்டே வந்து பழைய பிரம்பு நாற்காலியொன்றில் அமர்ந்தான் நரசு. நேற்று திருமலை தன் குடும்ப நிலை பற்றிச் சொன்னதை வைத்துச் செய்திருந்த கற்பனையில் பாதியை அக்கணமே அழித்துக்கொள்ள வேண்டியவனானான். அந்த அளவு எடுப்பாக அந்தக்குடும்பத்தின் கஷ்ட நிலவரம் அவனுக்குப் புலனாயிற்று இதனால். மனம் உருகிக் கசந்து போன அவன், அந்தப் 'பைப் பாரத்' கம்பெனியில் தான் தேடி வந்த வேலைவாய்ப்பைத் திருமலைக்காக விட்டுக் கொடுத்து அவனை எப்படியும் அவ்வேலையில் அமர்த்திவிடத் தன்னால் ஆன முயற்சிகளையெல்லாம் செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே தீர்மானித்திருந்த முடிவை இப்போது மேலும் உறுதிப்படுத்திக் கொண்டான்.

"நேத்திக்கே உங்களைப் பற்றித் திருமலை என்கிட்டச் சொன்னான் தம்பி! ஆனால் நீங்க அவனைப் பார்க்க வருவீங்கன்னு சொல்லலை...." என்றவாறு உள்ளறைக் கதவோரம் போய்த் தரையில் உட்கார்ந்து கொண்டாள் அந்த அம்மாள். வாழ்நாள் நெடுக ஏமாற்றங்களையும் தோல்விகளையும், துன்ப துயரங்களையுமே கண்டும் நடந்தும் தாங்கியும் வந்ததால் ஏற்பட்ட



ஒருவித விரக்திச் சாயை நிரந்தரமாய்ப் படிந்து போன முகத்துடன் மிக மெலிந்து காணப்பட்ட அவள் நிற்கக்கூட முடியாத அளவுக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்ட நரசுவின் மனம் வெகுவாக வாடித் துவண்டது.

திருமலை இப்போது வீட்டில் இல்லை என்பதை ஊகித்துக் கொண்ட அவன், ''திடீரென்று நானேதாம்மா இங்கே கிளம்பி வந்தேன். இன்னிக்கு வருவேன்னு அவனுக்குத் தெரியாது; நானும் சொல்லலே'' என்று மெல்லச் சிரித்துக் கூறிக் கொண்டே சமையல் அறைப் பக்கம் அவசரமாகப் பார்வையைச் செலுத்தினான். கண்ணம்மா வீடு வந்து சேர்ந்திருப்பாளா என்பதை அறியும் ஆவலினாலேயே அவ்வாறு பார்த்தான். அங்கே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. தானே அவ்விவரத்தைக் கேட்டு விடலாமா என்று அவனுடைய மனம் பரபரத்தது. ஆனால் நேரிடையாகக் கேட்கத் துணிவு எழாது போகவே, வேறு எப்படிச் சுற்றி வளைத்துக் கேட்கலாம் என்று யோசிக்கலானான்.

''நேத்து ராத்திரி முழுக்க அவன் வீட்டுக்கு வரலே, தம்பி! காலம்பற ஆறு மணிக்கு வந்து மறுபடியும் வெளியே புறப்பட்டுப் போனான். இந்த நேரமாகியும் வீடு திரும்பலே '' என்று மூச்சு அடைப்பது போன்ற குரலில் திக்கித் திணறிச் சொன்னாள் அந்த அம்மாள்.

இப்படிச் சொன்னதிலிருந்து கண்ணம்மா இன்னமும் வீடு வந்து சேரவில்லை என்பதை உடனே புரிந்து கொண்டான் நரசு. அது பற்றித் தான் கேட்பதற்கு அவளின் பேச்சிலிருந்து ஒரு 'பிடி' கிடைத்துவிட்ட திருப்தியுடன் நிமிர்ந்தான். ''ஆமாம்மா! நேத்திக்குத் திருமலைகூட என்கிட்டச் சொன்னான்......'' என்று ஆரம்பித்த அதே சமயம், அந்த அம்மாள் ஒருவித மரியாதை கலந்த அவசரத்தோடு வாசலுக்கு வெளியே பார்வையைச் செலுத்தியவாறு தட்டுத் தடுமாறி எழுந்து நின்றாள். அதைக் கண்டு சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டுப் பின்னால் திரும்பிப் பார்த்தான்.

நல்ல உயரம்; வற்றலாக உலர்ந்து மெலிந்த தேகம்; மாநிறம்; பழுப்பும் வெள்ளையுமாக விரவி நரைத்த கோரைக் கேசம்; நீண்ட முகம்; மேடு தட்டிச் சரிந்த நெற்றி : ஒட்டிய கன்னங்கள்; தூக்கலான மூக்கு; உள்ளழுந்திய சிறிய கண்கள்; மடிப்பற்ற உதடுகள்; அகன்று எடுப்பாகிவிட்ட மோவாய் ;

கண்டக்காய் துருத்திய நீண்ட கழுத்து; சாம்பல் நிற முரட்டுக் கதர் ஜிப்பா; பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வெள்ளைக் கதர் வேட்டி — என்று இப்படிச் சுமார் ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க தோற்றத்துடன் வங்காளிபோல் விளங்கிய ஒருவர் மாடிப் படிக்கட்டிலிருந்து இறங்கி வந்து வாசலண்டை நின்றார். ''திருமலை இருக்கிறாரா ?'' என்று புன்முறுவலுடன் அவர் மிக மெல்லிய குரலில் கேட்டார். அவருடைய தமிழ் உச்சரிப்பு ஏதோ ஒரு தினுசாக இருந்தது.

''இல்லீங்க, ஐயா ! காலம்பற வெளியே போனான்; இன்னும் வரவில்லை'' என்று பவ்யமாகப் பதிலிறுத்தாள் திருமலையின் தாயார்.


'அப்படியா?' என்பதுபோல் மெல்லத் தலையசைத்தபடி ஒரு கணம் ஏதோ யோசித்த அவர் இடக்காலை மட்டும் வாசல் நிலைக்கு உள்ளே வைத்துக் கதவின் பக்கவாட்டுச் சுவரில் ஓர் ஆணியிலே சாவியை மாட்டிவிட்டு வெளியே திரும்பி நடந்தார். அவரது வலக் காலில் ஏதேனும் ஊனம் இருக்க வேண்டும் — அந்தக் காலைச் சற்றே இழுத்து விந்தி விந்தி நடந்து சென்றார் அவர்.

இதையெல்லாம் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டு மௌனமாக உட்கார்ந்திருந்தான் நரசிம்மன். இச்சிறு நிகழ்ச்சியால் அவனுடைய கவனம் அவ்வளவாக ஈர்க்கப்படவில்லை. 'மாடியில் இந்த மனிதர் குடியிருப்பவராயிருக்கலாம்; அவரது குடும்பத்தாரோ, அல்லது அவருடன் வசிக்கும் வேறு யாரேனுமோ வெளியில் சென்று இன்னும் திரும்பி வராத நிலையில் இவரும் வெளியே போக வேண்டியிருந்ததால், கீழ்க்குடித்தனக்காரியான இந்த அம்மாளிடம் தம் வீட்டுச் சாவியைக் கொடுத்துவிட்டுப் போகலாம்; இப்படி இங்கே அடிக்கடி சாவியைக் கொடுத்துப் போவது அவர் பழக்கமாகவும் இருக்கலாம்; அதனால் தான் அவரே இப்போது சுவர் ஆணியில் மாட்டிவிட்டுப் போகிறார் போலும்' என்று அவன் அனுமானித்துக் கொண்டான். ஆனால், இத்தனை இடுமுடுக்கான தெருவில் இருக்கும் இந்தச் சின்ன வீட்டில் ஒரு வங்காளி வந்து குடியிருப்பதுதான் அவனுக்கு உள்ளூறக் கொஞ்சம் வியப்பை அளித்தது. சென்னை நகரில் யாரும் எங்கேயும் வசிக்கக் கூடும் என்று அதற்கு அவனே சமாதானமும் கற்பித்துக் கொண்டான். ஆயினும் அவரை வங்காளிதான் என்று அவ்வளவு நிச்சயமாக அவனால் தீர்மானிக்க முடியவில்லை.

''திருமலை உங்ககிட்ட என்னமோ சொன்னதாகச் சொன்னீங்களே, — தம்பி?....'' என்று இடையில் அறுந்து போன அவனுடைய பேச்சை எடுத்துக் கொடுப்பது போல் கேட்டுக்கொண்டே மீண்டும் சுவரோரமாய் உட்கார்ந்தாள் அந்த அம்மாள்.

''ஆமாம்மா.....'' என்று இழுத்தான் நரசி. சற்றுமுன் ஏற்பட்ட குறுக்கீட்டால் தான் கேட்க நினைத்த கேள்வியின் சொற்கள் கலைந்து போனதை மீண்டும் தன் மனத்துள்

பிறந்த நாள் விழா



செட்டி நாடு குமாரராஜா

மு. அ. மு. முத்தையா செட்டியார், பி.ஏ.

பிரபல தொழிலதிபர் – வள்ளலார்
சென்னை ஷெரீப் (1957-58)
தென்னிந்திய வர்த்தக சபைத் தலைவர் (1958-60)

நிகழ்ச்சி நிரல்

குமாரராஜா மு. அ. மு. முத்தையா செட்டியார் அவர்களின்
பிறந்த நாள் விழா

1973 செப்டம்பர் 6-ஆம் தேதி மாலை 6 மணிக்கு

இராஜா அண்ணாமலைபுரம், சிருங்கேரி மடம் சாலையில் உள்ள
சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரத்தில்

சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர்
பத்மஸ்ரீ **என். டி. சுந்தரவடிவேலு,** எம். ஏ., அவர்கள் தலைமையில்
நடைபெறும்

சிறப்புரை ஆற்றுபவர்கள் :

திரு. எஸ். நாராயணசாமி, தென்னிந்திய வர்த்தக சபை தலைவர்
திரு. எஸ். வி. சிட்டிபாபு, பள்ளிக் கல்வி இயக்குநர்
திரு. டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், தமிழ்ப் பேராசிரியர்,
சென்னை பல்கலைக்கழகம்

டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் குருப் நிறுவனங்களின்
நிர்வாகத்தினரும், ஊழியர்களும்

ஒருங்கு சேர்த்துக் கோப்பவன் போல் பிடரியை வருடியவாறு அங்குமிங்கும் பார்த்துவிட்டு, ''அதாவது.... அவ ளோட தங்கை.... அதாவது, உங்க மகள்..... ஊரிலேயிருந்து புறப்பட்டு ரெண்டு நாளாகியும் இங்கே இன்னும் வந்து சேரலேன்னு சொன்னான்....'' என்றான் குழறலான குரலில்.

திருமலையின் தாயார் இதற்குப் பதி லேதும் சொல்லாமல் தெருப் பக்கம் வெறித்துப் பார்த்தாள். அவளது கண்களிலிருந்து கண்ணீர் குபுகுபு வெனக் கொப்புளித்து வழியலா யிற்று. குளிர் காய்ச்சல் வந்த மாதிரி உடல் நடுக்கமுற்றாள் அவள்.

நரசு இதைக் கண்டு பதறிப் போனான். ஏன்தான் அந்தக் கேள்வி யைக் கேட்டோமோ என்றாகிவிட்டது அவனுக்கு. காணமற் போன தன் மகளை இரவு பகலாகத் தேடி அலைந்த களைப்பினாலும் கவலையினாலுமே அவளது உடல் நலம் கெட்டுவிட்டிருக்கிறது என் பதையும், அதன் காரணமாகவே இன்று அவளால் தேடும் முயற்சியை மேற் கொள்ள முடியாமல் வீட்டிலேயே படுத்துக் கிடக்கிறாள் என்பதையும், திருமலை மட்டும் இடைவிடாமல் இன்ன மும் தேடி அலைந்து கொண்டிருக்கிறான் என்பதையும், இப்போது புரிந்துகொண் டான் அவன். 'இவ்வளவுக்கும் மூல காரணன் நான்தானே' என்ற நினைப்புத் தோன்றி அந்தக் குற்ற உணர்ச்சியால் நெஞ்சம் நகங்கிக் கசங்கி நோவெடுக்க, அங்கிருந்து உடனே வெளியேறிவிட வேண்டுமென்னும் துடிப்புடன் எழுந்து, ''கவலைப்படாதீங்கம்மா! இன்னிக்கு எப்படியும் ஒரு நல்ல தகவல் கிடைச் சுடும்'' என்று சம்பிரதாய ஆறுதல் பேச்சுக்கே உரிய அசட்டுச் சிரிப்புடன் சொல்லி விட்டு, ''அப்போ நான் வரேம்மா! முடிஞ்சா உங்க மகனை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்க! நான் தங்கியிருக்கிற வீட்டு விலாசம் அவனுக்குத் தெரியும்'' என்றவாறு விடைபெற்றான்.

அவனையறியாமலே அவனது பார்வை அந்த வீட்டின் மாடிப் போர்ஷனை நோக்கிச் சென்றது. அதிலே அதிக பட்சம் இரண்டு அறைகளுக்கு மேல் இராது என்பதை வெளியிலிருந்து பார்க்கும் போதே ஊகிக்க முடிந்தது. குடித்தனம் நடத்துவதற்குக் கொஞ்ச மும் தோதானதாய்த் தோன்றவில்லை. ஒருவரோ இருவரோ தங்கியிருப்ப தற்கு மட்டுமே அது உபயோகப்பட லாம். இப்போது அதில் குடியிருப்பவர் அப்படிப்பட்டவராகவே இருக்கலாம். ஏனென்றால் அதன் கதவு, சன்னல்கள் எல்லாம் சாத்திக் கிடந்தன. ஆள் இல்லாத சமயத்தில் தபால் கடிதங்கள் வந்தால் உள்ளே போடுவதற்குக் கதவில் சிற்றகத் துவாரம் இருப்பது தெரிந்தது. அதற்கு மேலே கதவு இலக்கம் சற்றுப் பெரிதாகச் சாக்கட்டி யால் ஒரு வட்டத்துக்குள்ளே எழுதப் பட்டிருந்தது.

'அந்த மனிதரைப் பற்றித் திருமலை யின் தாயாரிடம் ஏதாவது இரண்டு வார்த்தைகள் விசாரித்திருக்கலாமே?' என்று நரசு இப்போது நினைத்துக் கொண்டான். காரணம், அவரைப் பார்த்த விநாடி முதல் அவருடைய தோற்றம், பேச்சுக் குரல், நடை, உடை பாவனை எல்லாம் அவனுடைய மனத்தில் ஏதோ ஓர் அபூர்வ சக்தி வாய்ந்த சித்திரம் போல் பதிந்துவிட் டிருந்தன. அதனாலேயே இப்படி ஓர் எண்ணம் அவனுள் துவண்டது. மறு கணமே, 'எனக்கு எதற்கு அந்த விவரம்? இம்மாதிரி தேவையில்லாத சில விஷ யங்களில் தலையிட்டதால்தானே தேவை யற்ற பல சங்கடங்களிலும் கவலைகளி லும் இப்போது சிக்கித் திண்டாடு கிறேன்!' என்று தன்மீதே சலிப்பும் வெறுப்பும் அடைந்தவனாய் விருட் டென்று திரும்பி வெகு வேகமாக அங் கிருந்து நடக்கலானான்.

* * *

'என்ன இப்படி ஒன்றுமே சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிப் போய்விட் டீர்கள்?' என்று மனோகரியோ, அல்லது அவள் தாயோ, தந்தையோ தன்னிடம் கேட்டால் அதற்கு எப்படிப் பதில் சொல்லலாம் என்ற யோசனையுடன் அந்த வீட்டுக்குள் பிரவேசித்த நர சிம்மன், அங்கே கூடத்து அறையில் ஒரு சோபாவில் உட்கார்ந்து மேசை விரிப்புக்கான துணியில் பூத்தையல் வேலை செய்து கொண்டிருந்த புஷ்ப சுகந்தியைப் பார்த்து உள்ளூற வியப் பும் திகைப்பும் அடைந்தவனாய்ச் சற்றே தயங்கி நின்றான்.

'விடியற்காலை யாரோ ஒரு கிழவ னுடன் இங்கே வந்த பெண் அல்லவா இவள்? இவளைப் பற்றி நான் ஊகித்த ஒன்று கூடச் சரியில்லை போலிருக் கிறதே!'


முன்பின் பார்த்திராத ஒரு வாலிபன் நேரே வீட்டுக்குள் வருகிறானே என்னும் உணர்வால் ஓர் இளம் பருவப் பெண் ணுக்கு இயற்கையாகவே ஏற்படக் கூடிய அச்சமோ, வெட்கமோ, குறு குறுப்போ எதுவுமின்றி — அவன் யார், இவ்வீட்டாரைச் சேர்ந்தவனா, அல்லது அந்நியனா என்று அறியும் ஆவலும்

சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்

28, வடக்கு மாட வீதி, சென்னை.4. போன்: 71719

திருமணத்தில்
மணமகளின் அழகை
அதிகரிக்கச் செய்வது
சாஸ்திரியாரின்
பட்டுப் புடவைகள்.

கல்கத்தா:
14-A, Park Side Road
Calcutta - 26
Phone: 46-3976



ஓம் முருகா

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

குமாரவயலூர் அஞ்சல், திருச்சி மாவட்டம்

அருணகிரிநாதரை ''வயலூருக்கு வா'' என அழைத்துப் பேரின்பம் தந்து ''திருப்புகழ்'' பாடச் செய்தவரும், வேண்டுபவர்களுக்கு வேண்டும் வரம் தருபவருமான எல்லாம் வல்ல முருகப் பெருமானைத் தரிசித்து இம்மை மறுமை இன்பம் அடைய வேண்டுகிறோம்.

இருபத்தைந்து ரூபாய் அனுப்பினால் கிருத்திகைதோறும் அல்லது ஜன்ம நட்சத்திரம்தோறும் அர்ச்சனை செய்து ஓராண்டிற்குப் பிரசாதம் அனுப்பப்படும்

இங்ஙனம்

வி. எம். கணேசன்
ம. தருமலிங்கம் } *அறங்காவலர்கள்*

ஏ. ஏ. வெங்கடாசலம், *பி.ஏ.*
நிர்வாக அதிகாரி

விளம்பர உதவி: M/s. CHENNAI BOTTLING CO., PVT. LTD.
KUMAR DRINKS
Authorised Bottliers for: LIMCA, GOLD-SPOT, KISMET & SODA
259, Poonamallee High Road, Madras - 600029

கொள்ளாமல் — ஒரு மரியாதைக்காக எழுந்து நிற்க வேண்டுமென்றோ, ஒதுங்கிப் போக வேண்டுமென்றோ கூடத் தெரியாதவள் மாதிரி — அவனை நிமிர்ந்தும் பார்க்காமல் — வயிறு நிறையப் பால் அருந்திவிட்டுத் தனக்குப் பிடித்தமான பொம்மைகளுடன் நிச்சிந்தையாய் விளையாடும் குழந்தைப் பிள்ளை போல் — தான் செய்யும் தையல் வேலையிலேயே கவனமாயிருந்தாள் அந்தப் பெண். காலையில் இங்கு வந்தபோது இருந்த கோலத்தில் இப்போது அவள் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்து உலர்த்திய கருங் கூந்தலைத் தழைய வாரிப் போட்ட இரட்டைப் பின்னல்; பூப்போட்ட மஞ்சள் நிறக் கதர்ப் புடவை; காதில் பொன் வளையம்; ஆனால் ரவிக்கை மட்டும் அதே முழுக்கை வெள்ளை ரவிக்கை!...

நரசு சரேலென்று தன் அறைக்குள் போய்க் கதவைச் சாத்திக் கொண்டான்.

'யார் இந்தப் பெண்? மனோகரி முன்பு என்னிடம், தானும் தன் தாய் தந்தை ஆகிய மூவர் மட்டுமே இவ் வீட்டில் இருப்பதாகச் சொன்னாளே! தன் பெற்றோர்க்குத் தான் ஒரே மகள் என்றும் அவள் சொன்னாளே! அப்படியானால் இந்தப் பெண் யாராயிருப்பாள்? வேதமூர்த்தியினுடையவோ, கௌரியம்மாளினுடையவோ உறவுக்காரப் பெண்ணாயிருப்பாளோ? இன்று காலை அவள் இங்கே வந்த கோலத்தையும், நிலையையும் வைத்துப் பார்த்தால் அப்படியும் நினைக்க முடியவில்லையே! பயந்து பயந்து வராந்தா ஓரம் வந்து ஒதுங்கி நின்றவள், இப்போது நடுக் கூடத்தில் சோபாவிலே இவ்வளவு சுதந்திரமாகவும், நிர்ப்பயமாகவும், யாரையும், எதையும் இலட்சியம் செய்யாமல் உட்கார்ந்திருக்கிறாளே?'

அவனுடைய பார்வை சன்னல் வழியாகக் கார் ஷெட்டை நோக்கிச் சென்றது. அங்கே கார் இல்லை. வேதமூர்த்தி வெளியே போயிருக்கிறார் போலும்.

அவன் குளியலறைக்குப் போய் முகம் கை, கால்களைக் கழுவிக்கொண்டு வந்து உட்கார்ந்தான். அறைக் கதவு மெல்லத் தட்டப்படும் சத்தம் கேட்டு அவசரமாகத் துவாலையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அவன் எழுந்து செல்வதற்குள், ''உள்ளே வரலாமா?' என்று கேட்டவாறு தானே வெகு சகஜமாய்க் கதவைத் திறந்து கொண்டு புன்முறுவலுடன் வந்தாள் மனோகரி. ''காலையில் அப்பா உங்ககிட்ட ஏதோ பேசணும்னு வந்து பார்த்தார். நீங்க இல்லே. ஓர் அரை மணி நேரம் காத்திருந்து விட்டு அப்புறம் வெளியில் கிளம்பினார்.''

''அப்படியா? நான் ஒரு நண்பனைப் பார்க்கிறதுக்காகப் போனேன். அவனோட வீட்டைக் கண்டுபிடிக்கிறதுக்கு அந்த டிவிஷனில் இருக்கிற எல்லாத் தெருக்களையும், எல்லா வீடுகளையுமே கண்டு பிடிக்க வேண்டியதாகி விட்டது'' என்று சொல்லிச் சிரித்தவாறு கூடத்து அறைப் பக்கம் பார்வையைச் செலுத்தினான் நரசு. அங்கே உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணைக் காணோம்.

''எப்படியோ கடைசியில் அந்த வீட்டைக் கண்டுபிடிச்சுட்டீங்க இல்லையா?'' என்று குரலில் ஒருவித ஆவல் தொனிக்கக் கேட்டாள் மனோகரி.

''வீட்டைக் கண்டுபிடிச்சேன்; ஆனால் ஆள்தான் கிடைக்கலே!''

''அவர் உங்க கல்லூரி நண்பரோ?''

சற்றே வியப்படைந்த நரசு, ''ஆமாம்; அது எப்படித் தெரிஞ்சது?'' என்று கேட்டான்.

''அவரோட பெயர் திருமலையா?''

நரசுவுக்குப் பளிச்சென்று விஷயம் புரிந்து விட்டது. ''ஓ....அவன் இங்கே என்னைப் பார்க்க வந்தானா?...'' என்று கேட்டு மகிழ்ச்சியுடன் சிரித்தான் அவன். ''நல்ல வேடிக்கைதான் இது!''

''இதைவிடப் பெரிய விநோத விஷயமொன்றைச் சொல்றேன், கேட்கிறீங்களா?'' என்றவாறு மனோகரியும் இலேசாகச் சிரித்தாள். (தொடரும்)

ஜோக்கரக்கோ!



ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக்ஹோம் விமான நிலையத்தில் முக்கியஸ்தர்களுக்குத் தனி அறை என்று எதுவும் கிடையாது. அங்கு போன நம்முடைய அமைச்சர் ஒருவரை வரவேற்ற நமது தூதுவர் அவரைப் பொது அறைக்கு அழைத்துச் சென்று பெட்டி, படுக்கை வரும்வரையில் காத்திருக்கச் சொல்லி விட்டார். அமைச்சருக்குக் கோபம் வந்தது. 'என்னை ஏன் வி. ஐ. பி. அறைக்குக் கூட்டிப் போகவில்லை?' என்று கேட்டார். 'இங்கு அம்மாதிரி அறை எதுவும் கிடையாது' என்றார் தூதுவர். அமைச்சர் இதை நம்பத் தயாராக இல்லை. கடைசியாக நமது தூதுவர் அமைச்சரை அந்த அறையின் ஒரு மூலையில் சர்வ சாதாரணமாக அமர்ந்திருந்த ஒருவரைச் சுட்டிக் காட்டி, ''அவர்தான் ஸ்வீடன் நாட்டு மன்னர்'' என்றாராம். -டைம்ஸ் ஆஃப் இந்தியா - பாபு





என்ன அவசரம்!

சியாமா

"யார் குளியல் அறையில்?"

"அப்பா தான்!" ஒரே காலத்தில் பல குரல்கள்.

"இவருக்கு என்ன அவசரம்? அதுவும் இத்தனை காலங்கார்த்தாலே? நான் குளிச்சுச் சமைச்சுச் சாப்பாடு போட்டால்தானே நீங்கள்ளாம் பள்ளிக்கூடம் போகலாம்?"

"ஆமாம், அம்மா! இந்த அப்பாவுக்கு எப்பவுமே தன் காரியம்தான் பெரிசு. பாக்கி இருக்கிறவா எப்படிப் போனால் அவருக்கு என்ன?"

ஏழெட்டு ஆத்திரக் கைகள் குளியலறைக் கதவைப் போட்டு உடைத்தன.

உள்ளேயிருந்து "அடேடே, கொஞ்சம் பொறுங்கோடா, நான் குளிச்சு முடிச்சுட்டேன், ஒரு நொடியிலே வந்துடறேன்" என்ற சர்மாஜியின் குரல் குழாய் சத்தத்தையும் மீறிக் கதவுக்கப்பால் கேட்டது.

"வர்றயா, இல்லையா, தாத்தா?" என்று அப்பொழுதுதான் தூக்கம் கலைந்து படுக்கையிலிருந்து எழுந்திருந்த சிறுமி மாலா, உரிமையுடன் சிணுங்கிக் கொண்டிருந்தாள்.

"என்ன இங்கே இத்தனை அமர்க்களம்?" என்று ஒரு கிழவியின் குரல் அப்பொழுது கேட்டது.

"எல்லாம் வழக்கம்போல் உங்கள் பிள்ளை தான். யார் எக்கேடு கெட்டுப் போனால் அவருக்கு என்ன?" என்று அந்தப் பிள்ளையின் மனைவி அலுத்துக் கொண்டாள்.

ஏதோ ஒரு சினிமா டியூனை விசில் அடித்துக் கொண்டே வீட்டின் பெரிய பிள்ளை அப்பொழுது அங்கே வந்தான். அவன் சம்பாதிக்க ஆரம்பித்ததிலிருந்தே அந்த வீட்டில் அவனுக்கு ஒரு தனி மதிப்பும் விசேஷச் சலுகைகளும் உண்டு.

"என்ன அம்மா, அப்பா தானே?" என்று அன்னையை நோக்கினான்.

"வேறே யாரு?" என்றாள், அவள் கோபம் குமுற.

"சர்வீஸிலே இருக்கறப்போதான் காலமே ஆறு மணிக்கே குளிப்பேன்னு அப்பா கழுத்தறுத்தார். இப்போதான் ரிடையர் ஆயிடாச்சே, இன்னும் ஏன் விடிஞ்சதும் விடியாததுமா இப்படிக் குளியலறையைப் பிடிச்சுண்டு உயிரை வாங்கறார்?... அம்மா! எனக்கு எட்டரை மணிக்கே போயாகணும். சாப்பாடு போடுவேயோன்னோ?"

"உனக்கு இல்லாத சாப்பாடா?"

குடும்பம் அவன் தலையில் ஓட ஆரம்பித்ததிலிருந்தே மிஸஸ் சர்மாஜிக்குப் பிள்ளையிடம் கொஞ்சம் பயம்கூட. அவள் கணவன் அதுபற்றி அவளை அடிக்கடி கேலி செய்வார்.

"நான் ரிடையராகி விட்டேன். இனிமேல் உன் பிள்ளைதானே உனக்கு ஓசத்தி" என்பார்.

''ஏன், அவன் உங்களுக்கும் பிள்ளைதானே? ரெண்டு பேருமே எனக்கு ஒத்திதான்'' என்பாள் அவள்.

பென்ஷன் இல்லாத உத்தியோகத்திலிருந்து அவர் ஓய்வு பெற்றிருந்தார். ஆகலால் பிள்ளையின் சம்பாத்தியத்தின் பெரும் பாகத்தில் தான் குடும்பமே நடை போட்டுக் கொண்டிருந்தது. அது அவர் மனத்தை அடிக்கடி உறுத்தும். அப்பொழுதெல்லாம் அந்த அம்மாள்தான் அவருக்குச் சமாதானம் கூறுவாள். ''நீங்கள் முப்பத்தைஞ்சு வருஷங்கள் இந்தக் குடும்பத்துக்காக ஓடாக உழைக்கவில்லையா? ஏதோ ஒரு பத்து வருஷங்கள் உங்க பிள்ளை அந்தப் பணியைச் செய்தால் என்ன? ஏன் இப்படி மாஞ்சு போறேள்?'' என்பாள்.

ஓர் அழகான, அன்பு பரிணமிக்கும் குடும்பம் அது.

குளியல் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தவர் தலையைத் துடைத்தவாறே பூஜை அறையை நோக்கி நடந்தார். அது ஒரு தினசரி நிகழ்ச்சியானாலும் அவருக்கு அப்பொழுது தன் குடும்பத்தைப் பார்ப்பதில் ஒரு வெட்கம். கிழவி குளியலறைக்குள் பாய்ந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

வேறு வழியின்றி அவர் மனைவி அவரைப் பின்தொடர்ந்தாள்.

''அடுப்பங்கரையில் காப்பி வைச்சிருக்கேன். சாப்பிட மறந்து வெளியே கிளம்பி விடாதீர்கள்'' என்றாள் அவள் சண்டையை மறந்து.

அவர் அப்பொழுது வெங்கடேச சுப்ரபாதத்தைமுணுமுணுத்துக்கொண்டிருந்தார்.

''ஒரு நாளைப் போல் இப்படி—'' என்று அவள் ஆரம்பித்தபொழுது, ''இன்று சனிக்கிழமைங்கிறதை மறந்துட்டியா? ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போகணும். அதான் இப்படி...'' என்று நிறுத்தினார்.

''சனிக்கிழமைன்னு அதுக்காக என் மற்றக் காரியங்கள்ளாம் நின்னுடறதா?'' என்றாள் அவள்.

''பின்னே ஏன் இங்கே நிக்கறே? போய் ஸ்நானம் பண்ணிக் காரியத்தை ஆரம்பியேன்'' என்றார் அவர்.

''நீங்க வெளியே வந்தேள். ஒங்கம்மா குளியல் அறையைப் பிடிச்சண்டுட்டாள்'' என்றாள் அவள்.

''பாவம், வயசானவள்'' என்றார் அவர், சுப்ரபாதத்தின் இடையே.

''ஆக அவாளவாளுக்கு அவாவா காரியந்தான் பெரிசு'' என்று அந்த அம்மாள் முணுமுணுத்தாள்.

''என் காரியமும் முடிஞ்சு போச்சு'' என்று சொல்லி அவர் சிரித்தார். அந்தச் சிரிப்பு அவருடைய பிரத்தியேக டிரேட் மார்க். அந்தக் குடும்பமே அவருடைய அந்த மோகனாஸ்திரத்தில் கட்டுண்டிருந்தது...

ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் டிரைவர் சிங்காரம் புரண்டு புரண்டு படுத்தானே ஒழிய எழுந்திருக்கவில்லை. அவன் இளம் மனைவி வள்ளி கவலையுடன் தூங்கும் அவனை நோக்கிக் கொண்டிருந்தாள். அவர்களுக்குக் கல்யாண



அது காப்பி!



சமீபத்தில் சிறந்த திரைக் கதைக்கான ஜனாதிபதியின் பரிசு 'கோஷிஷ்' என்ற ஹிந்திப் படத்தின் கதாசிரியர் குல்ஸார் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. 1961ம் வருஷம் வந்த Happiness of us alone என்ற ஜப்பானியப் படத்தின் காப்பிதானாம் 'கோஷிஷ்' கதை!

ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்''
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

மாகி ஆறு மாதங்களே ஆகியிருந்தன. வள்ளி ஒரு கிராமத்துப் பெண். கல்யாணமான பின்னர்தான் அவள் பட்டணத்திலேயே காலடி வைத்திருந்தாள். பட்டணத்தின் நவ நாகரிகமும் ஒலிகளும் ஒளிகளும் அவளைத் திணற அடித்தன. அவள் குடியிருந்த பேட்டையின் பரிபாஷைகூட இன்னமும் அவளுக்கு முழுக்கப் பழக்கமாகவில்லை. ஏன், கணவனின் விளையாட்டும் பேச்சும் கூடத் தான் சமயத்தில் அவளுக்குப் புரியாத புதிர்களாக இருந்தன. இரவு படுக்கப் போகும் பொழுது, ''மார்னிங் டியூட்டி. அஞ்சு மணிக்கே கட்டாயம் எழுப்பிவிடு'' என்று சொல்லியிருந்தான். ஆயினும் அரை மணியாக அவனை எழுப்ப முயன்றும் அவன் சிறிதாவது அசைந்து கொடுத்தால்தானே? என்ன செய்வது என்று புரியாமல் தவித்தாள்.

புரண்டு படுத்தபொழுது சிங்காரத்தின் கிராப்பிலிருந்து ஒரு கொத்து முடி தாங்கும் அவன் கண்களை மறைத்தன. கணவனின் அந்த எழிலில் வள்ளி சொக்கிப் போயிருந்தாள். அது அவளுக்கு மிகவும் பிடித்த ஒரு விஷயம். எத்தனையோ பாடுபட்டுத் தலை மயிரைச் சீவி ஒரு கட்டுக்குள் சிங்காரம் கொண்டு வந்து வைப்பான். ஆனால் அதுவோ அடுத்த நிமிஷமே கலைந்து பிரிந்து அவன் முகத்தில் தவழ்ந்து விளையாடிக் கண்களை மறைத்துவிடும். அப்பொழுதெல்லாம் அவள் அதை ஒழுங்கு செய்ய முயற்சி செய்வாள். அவனே சிரித்து அவள் கைகளைப் பற்றிக் கொள்வான்.

''இந்தச் சண்டியை வைத்துக் கொண்டு உங்களால் எப்படித்தான் பல்லை ஓட்ட முடிகிறதோ!'' என்று அவள் கொஞ்சுவாள்.

''உன்னைப் போல் அதுவும் எனக்குப் பழகிப் போய் விட்டது'' என்பான்.

''அப்படியானால் நான் சண்டியா?'' என்பாள் வள்ளி போலிப் பிணக்குடன்.

''நான் அப்படிச் சொல்லவில்லையே?'' என்பான் சிங்காரம்.

இப்படி இளமைக்கே உரித்தான எத்தனையோ அர்த்தமற்ற பேச்சுக்கள், விளையாட்டுக்கள் நிகழ்ந்தன.

இப்போது அவன் கண்களை மறைத்த அந்த முடியை அவள் ஒதுக்கியபொழுது விழித்துக் கொண்ட அவன், அவள் கைகளை வழக்கம்போலப் பற்றிக் கொண்டான்.

''கையை விடுங்கள். நாழியாகிறது. எழுந்திருங்கள்'' என்றாள் அவள், அவனுடைய அந்த அன்புப் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள மனமில்லாமல். அப்பொழுதுதான் பொழுது நன்கு புலர்ந்து, அந்த அறையிலும் ஆதவன் தன் ஆதிபத்தியத்தைச் செலுத்தியிருந்ததை அவன் உணர்ந்தான். அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தவன், ''அஞ்சு மணிக்கே என்னை எழுப்பச் சொன்னேனே, நாழியாக்கி விட்டாயே?'' என்றான். வார்த்தையில் கேள்வியிருந்ததே ஒழிய, குரலில் கடுமை இல்லை. இருந்தாலும் அவள் பயந்து விட்டாள்.

''நான் நாலேமுக்கால் மணியிலிருந்தே உங்களை எழுப்ப முயன்று கொண்டிருக்கிறேன்'' என்றாள் ஈனஸ்வரத்தில்.

''பரவாயில்லை. நான் ஒரு நொடியில் பல் துலக்கி முகம் கழுவி வந்துவிடுகிறேன். அதற்குள் டீ தயாராகி விடுமா?'' என்று கேட்டான் சிரித்துக்கொண்டே.

''இப்பொழுதே தயார்'' என்று சொல்லிக் கொண்டே அவள் அடுக்களைக்குள் புகுந்தாள்.

பல் துலக்கி வெளியே வந்தவன் டீயைச் சுவைத்துக் கொண்டே ''கதவைத் தாளிட்டுக்கொண்டு ஜாக்கிரதையாக இரு. நான் டியூட்டி முடிந்து மூனு மணிக்கெல்லாம் வந்து விடுகிறேன்'' என்றான்.


மூன்று மணி வரையில் எப்படி நேரத்தைப் போக்கப் போகிறோம் என்று எண்ணியபோது வள்ளியின் முகம் சுருங்கிற்று. அதைத் தெரிந்து கொண்ட அவன் அவளை அணைத்துக்கொண்டே ''என்ன பண்ணுகிறது, என் தொழில் அப்படி இருக்கிறது. எல்லாரையும் போல் இல்லாமல் விடிந்ததுமே வீட்டை விட்டு ஓடவேண்டியிருக்கிறது'' என்றான்.

''உங்கள் தொழிலுக்கு என்ன குறைச்சலாம்?'' என்றாள் அவள். அதற்குமேல் அவளுக்குப் பேசத் தெரியவில்லை. அவனைக் காக்கி நிஜாரும் சட்டையுமாகப் பார்க்கும் பொழுதெல்லாம் அவள் உள்ளம் பெருமையால் விம்மும். ஆனால் அவன் சாதாரணமாக அந்த உடையை டெப்போ போய்த்தான் போட்டுக் கொள்வான். எப்பொழுதாவது இரவில் டியூட்டி முடித்து தாமதமாக வரும் பொழுதுதான் காக்கி உடையில் வீட்டுக்கு வருவான். ''வீட்டிலிருந்தே இந்த உடையை அணிந்து டியூட்டிக்குப் போங்களேன்'' என்று ஆரம்பத்தில் அவள் மன்றாடிப் பார்த்தாள். அவனோ சிரித்துக் கொண்டே, ''என் உத்தியோகம் கலெக்டர் உத்தியோகமென்று உன் எண்ணமா, அப்படியெல்லாம் விளம்பரம் செய்துகொள்ள!'' என்பான்.

பாதி சமயம் அவன் பேச்சே அவளுக்குப் புரிவதில்லை.

வாசலுக்கு வந்து தெருவிலும் இறங்கி விட்டான். அன்று மாலை தன்னைச் சினிமாவுக்கு அழைத்துப் போவதாக அவன் சொல்லியிருந்தது வள்ளியின் நினைவுக்கு வந்தது. ஆனால் அதை எப்படி அவனுக்கு நினைவூட்டுவது? அக்கம் பக்கத்தில் பெண்கள் சாணி தெளித்து வீட்டுக்கு முன்னால் கோலம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

''உங்களைத்தானே..?'' என்று நிறுத்தினாள். அவன் திரும்பி அவளை நோக்கினான்.


சிந்தால்
வாக்குறுதி...
மேனியெழிலுக்கு முழுப் பராமரிப்பு
புதுமை குன்றாத நறுமணம்
துர்நாற்றத்திலிருந்து சிறந்த பாதுகாப்பு
CINTHOL
CINTHOL
Godrej
CINTHOL
CINTHOL
...சிந்தால் மட்டுமே நிறைவேற்றக்கூடியது
ஜி-11 அடங்கிய ஒரே சோப் சிந்தால். இந்த அற்புத கிருமி நாசினி உடல் துர்நாற்றத்திற்கும் சருமக்களங்கத்திற்கும் காரணமாக விளங்கும் கிருமிகளை அழித்து விடுகிறது. இவ்வாறு சிந்தால் உங்கள் மேனியெழிலை அப்பழுக்கின்றி வைத்திருப்பதுடன், உங்களை நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கிறது.

''சினிமா....'' என்று தட்டுத் தடுமாறி ஞன். முகம் குங்குமமாகச் சிவந்திருந்தது.

பக்கத்து வீட்டுக்காரியோ கோலம் போடு வதை நிறுத்திவிட்டு அவர்களை உற்று நோக்கிக்கொண்டிருந்தாள்.

பேசாமல் தன் சட்டைப் பையிலிருந்து ஏற்கனவே வாங்கி வைத்திருந்த இரண்டு டிக்கட்டுக்களையும் எடுத்துக் காட்டிவிட்டுச் சிரித்தபடியே டிப்போவை நோக்கிச் சிங்காரம் விரைந்தான். தெருமுனையில் அவன் மறைந்து வெகு நேரமாகியும் அவள் அந்தத் திசைப் பக்கமே வெறிக்க நோக்கிக்கொண்டிருந்தாள். அவளைச் சுற்றி அச்சமயம் பொழுது நன்கு புலர்ந்திருந்தும் அவள் உள்ளத்தை இருள் கவ்வியிருந்தது.

திண்ணையில் சைக்கிள் திருட்டுத்தனமாக நகர்த்தப்படும் சத்தம் கேட்ட பள்ளி வாத்தியார் வேலாயுதம் ஈஸிசேரில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு ''யாரது?'' என்று அதட்டுக் குரல் கொடுத்தார். சத்தம் நின்றது. ஆனால் பதில் வரவில்லை. கையில் பத்திரிகையுடன் எழுந்தவர் வாசலுக்குச் சென்று திண்ணையை எட்டிப் பார்த்தார். அங்கு சுவரோடு ஒட்டிக்கொண்டு அவரது பன்னிரண்டு வயது மகன் பாலு திருட்டு விழி விழித்தான்.

''எங்கேடா விடிந்ததும் விடியாததுமாகக் கிளம்பினே?''என்று அதட்டினார் வேலாயுதம்.

''அம்மா மார்க்கெட்டுக்குப் போய் ஏதாச்கும் காய்கறி வாங்கிட்டு வரச் சொல்லிச்சு'' என்று மென்று விழுங்கினான் பாலு.

''அதற்கு என் சைக்கிள்தானா அகப்பட்டது?'' என்று சீறினார் கோபம் குன்றாமல்.

''எனக்குப் பள்ளிக்கூட 'ஹோம் ஓர்க்' பாக்கி இருக்கு. மார்க்கெட்டுக்கு நடந்து போய் வந்தால் அதைச் செய்ய நேரம் இருக்காது'' என்றான் சிறுவன்.

''சரி, சரி. தொலைந்து போ. என்னைக் காணும் ஒரு நாள் நீ பஸ்ஸிலேயோ காரிலேயோ சிக்கிக்கிட்டுத்தான் உயிரை விடப் போறே'' என்று ஆசிர்வாதம் செய்தவர், மீண்டும் கூடத்துக்கு வந்து தம் ஈஸிசேரில் புகலிடம் கொண்டார்.

பாலு சிட்டாகச் சைக்கிளில் பறந்தான். அப்பொழுது ஈரப் புடவையை உலர்த்த அங்கு வந்த அவர் மனைவி செம்பகம், ''லட்சணமாத்தான் இருக்கு. காலங்கார்த்தாலே புள்ளையைப் பார்த்து அப்படியா பேசி அனுப்புவீங்க!'' என்று சலித்துக் கொண்டாள்.

''எல்லாம் உன்னால் வந்ததுதான். நீ அவனுக்குக் கொடுக்கிற இடம். வெளியிலே போகணும்னா அதுக்கு என் சைக்கிள்தானா அகப்பட்டது? வழியில் அதைப் 'பஞ்சர்' பண்ணி ஒசைப்படாமல் கொண்டு வந்து வைச்சுடுவான். அப்புறம் பள்ளிக்கூடம் கிளம்புறப்போ நான்னா திண்டாடணும்?''

''இந்த வயசிலே புள்ளேங்கன்னா அப்படித்தான் இருக்கும். மார்க்கெட் இங்கேயிருந்து எம்மாந்தூரம் இருக்கு. அதுக்கு அவன் நடந்து போய் வரதுன்னா இலேசுப்பட்ட காரியமா?'' என்றாள் செம்பகம்.

''நீ மொதல் நாள் சாயந்திரமே பார்த்துக் காய்கறி வாங்கி வைக்கக்கணும். அடுப்பிலே உலை ஏத்தினப்புறம்தானே உனக்கு அது வேணும் இது வேணுங்கற நினைப்பே வர்றது'' என்று சீறினார் வேலாயுதம்.

அதற்குள் புடவையைக் கொடியில் உலர்த்திய செம்பகம், ''ஆமாம், நீங்க ஏன் பேச மாட்டீங்க, ஈஸிசேரிலே சாஞ்சுக்கிட்டு. பாலு மட்டும் இல்லேன்னா என் கதி அதோ கதிதான். இந்த வீட்டிலே ஒரு வேலையுமே நடக்காது'' என்று சொல்லிக் கொண்டே அடுக்களைக்குள் மறைந்தாள்.

வேலாயுதமும் விடாமல் ''உனக்குப் புத்தியிருந்தாத்தானே? அவன் குரங்குப் பெடல் பண்ணிக்கிட்டே இந்த மெட்ராஸ் ரோடுகளிலே போகறது ஆபத்துன்னு எனக்குத் தோணிச்சு, ஏதோ நான் சொன்னேன்.. அதுக்கு இப்படியா நீ பொரிஞ்சு தள்ளுவே'' என்றார்.

''அதுக்காக வெளியிலே போகிற புள்ளையை அதுவும் காலங்கார்த்தாலே இப்படி ஒரு ஆசிர்வாதம் பண்ணி அனுப்ப வேண்டாம்'' என்ற அந்த அம்மாளின் பதில் சமையலறையிலிருந்து வந்தது....

காய்கறிப் பையை ஹாண்டில் பாரில் மாட்டிக்கொண்டு சைக்கிளில் பாலு தன் வீட்டை நோக்கிப் பாய்ந்தபோது, ஆஞ்சநேயரைத் தரிசனம் பண்ணிவிட்டு வெளியே வந்து கொண்டிருந்த சர்மாஜி மீது மோத, அவர் கீழே விழுந்தார். அதே சமயம் எதிரே திடீரென்று தோன்றிய டாக்ஸியுடன் மோதுவதைத் தவிர்க்கச் சிங்காரம் டாக்ஸியைத் திருப்ப அது சர்மாஜியின் மீது ஏறி அந்த இடத்திலேயே அவர் உயிரைக் குடித்தது.

பாலு வீடு போய்த்தான், சைக்கிளை நிறுத்தினான். சிங்காரத்தைப் போலீஸார் கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். ஆம்புலன்ஸில் எடுத்துச்சென்ற சர்மாஜியின் உடலின் கை இன்னும் குருக்கள் கொடுத்த மல்லிகைச் சரத்தைப் பற்றிக் கொண்டிருந்தது.

எல்லாமே சில விநாடிகளில் நிகழ்ந்து முடிந்தும் விட்டன.


அடுத்த நாள், அடுத்த நாள், அதற்கும் அடுத்த நாள், சர்மாஜி காலங்கார்த்தாலே குளியலறையில் புகுந்து கொண்டு தன் கழுத்தை அறுக்க மாட்டாரா என்று அவர் மனைவி விம்மினாள்.

ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட சிங்காரமோ வேலைக்குப் போகாமல் பிரமை பிடித்துச் சூன்யத்தில் வெறித்து வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவன் முகத்திலும், பேச்சிலும் மீண்டும் எப்பொழுது சிரிப்பைத் தெளிவாகக் காண்போம் என்று வள்ளி ஏங்கிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது அவள் கண்களை மறைக்கும் கிராப்பின் முன் மயிரால் கூட அவன் கவனத்தைக் கவர முடியவில்லை.

அம்மா எத்தனையோ கெஞ்சியும், அப்பா அதட்டியும்கூட மார்க்கெட் செல்ல மறுத்து விட்டான் பாலு. அன்று, அந்தக் காலை, ஆஞ்சநேயர் கோவிலின் முன் தன் கள்ளங்கபடமற்ற குழந்தைத் தன்மையைப் பாலு இழந்து விட்டான்.

காலம் யாருக்குமே நிற்பதில்லை, ஏன், காலன்கூடத்தான்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam




வெற்றி தலைக்கேறி விட்டதா என்ன அவருக்கு?

ஃபெருக் எஞ்சினியர் புன்னகை புரிகிறார்

"நான் எதையும் தலைக்கேற விடுவதில்லை. ஆம். புரதம் நிறைந்த ப்ரில்க்ரீமைத் தவிர வேறு எதையும் நான் தலைக்கேற விடுவதில்லை. ப்ரில்க்ரீம் என்னுடைய தலைமுடியை ஆரோக்கியமாக, நன்கு படிந்த நிலையில் வைத்திருக்கிறது. எப்படியிருக்க நான் விரும்புகிறேனோ அதுபோலவேதான்."

ப்ரில்க்ரீமில் இருக்கும் புரதம் மயிர்க்கால்களுக்கு வலுவூட்டி, தலைமுடிக்கு நல்ல ஊட்டம் அளிக்கிறது. ப்ரில்க்ரீமினால் கலையாத முடியுடன் மிடுக்காக நீங்கள் நாள் முழுவதும் விளங்கலாம். தவிர பிசுக்குத்தன்மையோ, ஒட்டிக்கொள்ளும் தன்மையோ அதற்குக் கிடையாது. அது முடியலங்காரத்திற்கோர் நவீன வழி.

ஃபெருக் மாதிரியே நீங்களும் புத்திசாலித்தனமானதைச் செய்யுங்கள். புரதம் நிறைந்த ப்ரில்க்ரீமை உபயோகியுங்கள்.



BFF-3181-TAM-2

புரதம் நிறைந்த
ப்ரில்க்ரீம் அழகான முடிக்கு ஆரோக்கியமான வழி.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
ஸ்ரீலங்காவில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)